# வெள்ளி விழா மலர்

## ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம்



1992 - 2017



வெளியீடு 19.11.2017

2017/11/19

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

1992 - 2017

# ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

டச் வீதி, சாவகச்சேரி.

# வெள்ளிவிழா மலர்

# SILVER JUBILEE SOUVENIR

## 19.11.2017

Sri Palani Thrift & Credit Co-operative Society
Dutch Road,
Chavakachcheri.

## நூல் பற்றிய விபரம்

| | |
|---|---|
| மலரின் பெயர் | : வெள்ளிவிழா மலர் (1992 - 2017) |
| வெளியீடு | : ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம் |
| முகவரி | : டச் வீதி, சாவகச்சேரி. |
| பதிப்பு | : 19 கார்த்திகை 2017 |
| மலர் ஆசிரியர் | : திருமதி.ச.உருத்திராதேவி BSc. |
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : திரு.ம.விவேகானந்தன் (தலைவர்) |
| வடிவமைப்பு | : சக்தி பதிப்பகம், மீசாலை. |
| அச்சுப் பதிப்பு | : சக்தி பதிப்பகம்,<br>மீசாலை கிழக்கு, மீசாலை. |
| பக்கம் | : I - III + 95 |
| பிரதிகள் | : 500 |

# கூட்டுறவுக் கீதம்

## பல்லவி

கூட்டுறவு மந்திரத்தை சொல்லுவோமே - இங்கு
கூடிடும் பகை பிணியை சொல்லுவோமே (கூட்டு)

## அனுபல்லவி

நாட்டில் வாழ்வோங்கி நிலை பெறவே - நல்ல
ஞானப் பெரியோர்கள் நாட்டி வைத்த (கூட்டு)

## சரணம்

அன்புடனே வாய்மைதனில் நேர்மை கொண்டு
ஆர்வமதால் அனைவருமே ஒன்றாய்க் கண்டு
இன்புடனே பெருவாழ்வில் உழைத்த லென்றும்
உயர்வான கூட்டுறவுக் குயிரா மன்றோ (கூட்டு)

துன்புடனே மக்களிங்கு சோர்ந்த போது
தெய்வம் வந்துற்றதென வந்தணைந்து
தென்புதருங் கல்வி சுதந்திரமும் மேலாம்
தேசபக்தி விவசாயம் செழிக்கச் செய்யும் (கூட்டு)

கூட்டுறவு நெறிகளே வேதமாகும்
கொண்டவற்றை கடைப்பிடிப்போர் மேலோராவர்
வாட்டமுறும் தொழிலாளிக் கூட்டாளிக்கும்
வாழ்வளிக்கும் உழவருக்கும் வாழ்வு நல்கும் (கூட்டு)

தேட்டத்தை சீராகப் பேணச் செய்யும்
சேப்புவட்டிக் கொடுமைக்குக் காலனாகும்
நாட்டிற்குக் கூட்டத்தை நல்கவல்க
நலமிக்க வேறொன்று இல்லை என்று (கூட்டு)

சாமியொடு சமயநெறிப் பூசல் போக்கி
சேரும் அரசியல் வாழ்க்கைச் சார்பு நீக்கி
பேதங்கள் தலைதூக்காப் பான்மை யாக்கி
பாரினிலே மாந்தர்க்கு வாழ்வு சேர்க்க (கூட்டு)

பேதமின்றிக் கைவிரல், பொற் திறங்களாக்கி
பேசிவரும் சமத்துவத்தை செயலிற் காட்டி
நீதிமிகு உயர்தெய்வ நாட்டில் இன்பம்
நீரகாணக் கூட்டுறவு நிலைக்கச் செய்வீர் (கூட்டு)

## யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபை (வது)

## கூட்டுறவு கொடிக் கீதம்

எடுப்பு :

ஓங்கி எழும் கொடியே ஐக்கியம்
தாங்கிப் போற்றிடும் தக்கவர் பண்பினில்

(ஓங்கி)

தொடுப்பு :

வாழ்வளிக்கும் நல்ல வளம்பொருளே - நாடு
தாழ்வையும் தகர்த்திடும் தகவோடு சீராக

(ஓங்கி)

முடிப்பு :

இம்மையில் உள்ள மக்கள் ஈடிலாங்கிருக்க
செம்மையில் தனித்தும் சேர்ந்ததுமே சமமுற
உம்பருள் இந்திரன் உடையகை வில்லின்
செம்பொருள் நிறமெல்லாம் சிறந்தொழி வீசிட

(ஓங்கி)

தலைவர்



திரு.ம.விவேகானந்தன்

செயலாளர்



திருமதி.இ.லலித்தாராணி

பொருளாளர்



திருமதி.ப.ஸ்ரீகாந்தரூபி

# 2017 நிர்வாகக் குழு




இடமிருந்து வலம் நிற்பவர் - மேரி அல்பினா, பி.சுரேகா, மு.அபிராமி
இருப்பவர்கள் - ப.ஸ்ரீகாந்தரூபி, இ.லலித்தாராணி, ம.விவேகானந்தன், சி.நந்தினி

# 2017 கணக்காய்வுக் குழு



வி.விமலாம்பிகை, ச.உருத்திராதேவி, து.சுஜீத்தா

# 2017 மலர்க்குழு




இடமிருந்து வலம் நிற்பவர் - ப.ஸ்ரீகாந்தரூபி, வை.பரிமளம், ம.மேரி அல்பினா, து.சுஜீத்தா, பி.சுரேகா, மு.அபிராமி
இடமிருந்து வலம் இருப்பவர்கள் - ச.உருத்திராதேவி, இ.லலித்தாராணி, ம.விவேகானந்தன், சி.நந்தினி

# 2017 பொதுச்சபை உறுப்பினர்கள்



## கூட்டுறவுச் சிந்தனைகள்

01. கூட்டுறவே நாட்டுயர்வு.
02. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
03. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
04. ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு.
05. ஒன்றுகூடி உழைத்தல்.
06. ஒன்றுகூடி வாழ்தல்.
07. விடாமுயற்சி சுறுசுறுப்பு.
08. சுய உதவி பரஸ்பர உதவி.
09. சிக்கனம் சேமிப்பு.
10. ஒற்றுமை ஐக்கியம் கூட்டுறவு.
11. ஒவ்வொருவரும் அனைவருக்கும், அனைவரும் ஒவ்வொருவருக்கும்.
12. நல்லெண்ணத்துடன் உலக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒன்றுபட்டால் கோடி நன்மை.
13. ஒருவருக்கொருவர் உதவி கொள்ளுதல் கூட்டுறவின் கொடை.
14. கூட்டுறவு அமைப்பு ஒரு ஒன்றுபட்ட உலக கூட்டுறவுச் சமுதாயமாகும்.

## கூட்டுறவுக் கொள்கைகள்

01. தன் விருப்பார்ந்த தடையற்ற அங்கத்துவம்.
02. ஜனநாயக நிர்வாகமும் கட்டுப்பாடும்.
03. அங்கத்தவர்களின் பொருளாதார பங்களிப்பு.
04. சுதந்திரமாகவும் சுயமாகவும் செயற்படல்.
05. கல்வி பயிற்சி தகவல் திரட்டல்.
06. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு.
07. சமூக மேம்பாடு.

## கூட்டுறவின் அடிப்படைப் பண்புகள் மூன்று வகைப்படும். அவை பின்வருமாறு,

01. சுய உதவி
02. பரஸ்பர உதவி
03. சிக்கனம்

உ
குருபாதம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர், யாழ்ப்பாணம் - இலங்கை
Nallai Thirugnanasambanthar Atheenam
NALLUR, JAFFNA - SRILANKA
ஸ்தாபிதம் :- 1966 021 222 2870 திகதி ......./....../......



## ஆசியுரை

அன்புள்ளவர்களுக்கு,

சாவகச்சேரியில் இயங்கும் ஸ்ரீ பழநி சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். மக்களுடைய தேவைகளில் கடன் வழங்குகின்ற உதவியை செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற சங்கம், சேமிப்புப் பழக்கத்தை உருவாக்கி மகிழ்ச்சியாக வாழ்வதற்கு, கடன் உதவி திட்டத்தின் மூலமாக மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வது மகிழ்ச்சியைத் தருகிறது. இப்பணியைச் செய்யும் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

ஸ்ரீலஸ்ரீ - ஸ்வாமிகள்



# ஆசியுரை

சாவகச்சேரி நகர் டச் வீதியில் இயங்கி வருகின்ற ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், தனது 25 ஆவது அகவையில் வெள்ளி விழாக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்த காலம் தொட்டு இன்று வரையிலும் கல்வி, சுயதொழில், வாழ்வாதார மேம்பாட்டிற்கு இன்னும் பற்பல கடன் உதவிகளை அங்கத்தவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இப்படியாக இக்கூட்டுறவுச் சங்கத்தின் சேவை இன்னும் பல ஆண்டுகளுக்கு அங்கத்தவர்களுக்கு நன்மை பயக்க முனைப்புடன் சேவை ஆற்றவும், அதன் மூலம் மக்கள் நன்மையடைய வேண்டுமென ஆசி கூறுகின்றேன்.

"சர்வசாதகரத்னம்"
பிரம்மஸ்ரீ மு. முரளிதரவித்யானந்த குருக்கள்.
மீசாலை மேற்கு, மீசாலை.
(அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பிரதம குருக்கள்)




# ஆசியுரை

சாவகச்சேரி டச் வீதி, ஶ்ரீ பழநி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கமானது தனது 25 ம் ஆண்டு நிறைவையொட்டி வெள்ளி விழாவினைக் கொண்டாடுவதற்குக் காலடி எடுத்து வைத்துள்ளது. இச்சங்கத்திலுள்ள அங்கத்தவர்கள் அடையும் நன்மைகளால் கவரப்பட்ட மகாலிங்கம் விவேகானந்தன் என்பவர், சாவகச்சேரி நகர்ப்பிரிவில் வாழ்கின்ற ஒரு சிலருடன் கலந்தாலோசித்ததன் பயனாக இச்சங்கமானது 24.10.1992இல் ஶ்ரீ பழநி ஆண்டவர் ஆலய மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அன்று 20/= வில் ஆரம்பித்த அங்கத்தவர்களுக்கான கட்டாய சேமிப்புப் பணமானது இன்று 500/= வாக அதிகரிக்கப்பட்டு சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தது மட்டுமல்லாது சிரமதானம், ஆன்மீக செயற்பாடுகளுடனும் இன்றுவரை இயங்குகின்றது.

1994ம் ஆண்டிலிருந்து சிறிய தொகையாக ரூபா 2000/= வழங்க ஆரம்பித்து இன்றுவரை 150,000/= வரை இடர்கடன் தொகைகளை வழங்கி அங்கத்தவர்களின் சுயதேவைகளை நிறைவு செய்து வருகின்றமையும் இச்சங்கத்தின் சாதனையாக குறிப்பிடக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் நின்றுவிடாது வாழ்வாதார திட்டத்தின் மூலம் தனது அங்கத்தவர்களின் சுய தேவைகளை ஊக்குவிக்கும் பொருட்டு தையல் இயந்திரங்கள், துவிச்சக்கரவண்டிகள், எரிவாயு அடுப்பும், கொள்கலனும் போன்றவற்றை வழங்கி வருகின்றது. மேலும் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளில் வருடா வருடம் புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியெய்துபவர்களுக்கும், கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை, உயர்தர பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியெய்தி பல்கலைக்கழகம் செல்பவர்களுக்கும் தலா 1500/= ரூபாவினை வழங்குவதும் சாதனையாகக் குறிப்பிடலாம். இதே மாதிரி இச்சங்கத்தின் சேவைகளானது மென்மேலும் வளர வேண்டும் என ஆசி கூறி வாழ்த்தி வணங்குகின்றேன்.

**சாவகச்சேரி அருள்மிகு ஶ்ரீ பழநி ஆண்டவர் ஆலய ஐயா**
**சிவஶ்ரீ. சோ. முரளிதர சர்மா**



No: 3784

Office } 021 221 9376
Fax } 021 221 9374
Web } www.np.gov.lk
My No }

රෙජිනෝල්ඩ් කුරේ
ரெஜினோல்ட் குரே
**Reginald Cooray**
ආණ්ඩුකාරවර, උතුරු පළාත
ஆளுநர், வட மாகாணம்
**Governor, Northern Province**

**Governor's Secretariat**

Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka.

Date } 30.10.2017

## Northern Province Governor's felicitation message to Silver Jubilee Celebration of Sri Palani Thrift and Credit Co-operative Society

I am very happy in sending this felicitation message to Silver Jubilee Celebration of Sri Palani Thrift and Credit Co-operative Society

The Movement of Thrift and Credit Co-operative Societies in Sri Lanka (SANASA) is the only Micro Finance Cooperative Network in Sri Lank covering all provinces with more than 8000 primary societies. It is the organization which follows a cooperative philosophy among its membership and to the community. The fundamental strength of the movement has helped it to thrive and grow dynamically. The primary societies function autonomously within an area designated for them. The Primary societies serving a membership popolation in designated areas are also referred as "Primary SANASA Society" in the village

Sri Palani Thrift and Credit Co-operative Society established in 1992 as one of the primary societies in our country has been functioning for twenty five years at Dutch road, Chavakachcheri. I learnt that a dynamic & sustainable Microfinance Network is maintained by Sri Palani Thrift and Credit Co-operative Society for the benefits of its members. It also liaies with the People's Bank in Chavakachcheri as a Loan Provider in order to enhance the development of the Microfinance network of the society for giving loan to economically deprived families to establish their livelihood activities.

Saving- habit are promoted among the members of Sri Palani Thrift and Credit Co-operative Society Social service and spiritual activities through the people's solidity motivated by the Thrift and Credit Co-operative Society Society are well performed in the area. I understand that Sri Palani Thrift and Credit Co-operative Society is a pioneering organisation in the field of rural community development in Chavakachcheri. On the occasion of their Silver Jubilee celebration, I congratulate all the members and office bearers of the Thrift and Credit Co-operative Society, for their tireless and determined effort to expand and develop it.

I look forward to their continued success.
Thanks.

Reginald Cooray,
Governor,
Northern Province

Reginald Cooray,
Governor,
Northern Province

9/1, Lily Avenue, Jayanthipura, Battaramulla.
Telephone : 0112883371
Fax : 0112885436
e-mail: hongovcal@gmail.com

Sub Office :
9/1, Lily Avenue, Jayanthipura,
Battaramulla.



# "வெள்ளி விழா" வாழ்த்து
## ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவி சங்கம்

இந்தச் சங்கமானது கடந்த 25 வருடங்களாக, மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தினைப் படிப்படியாக, ஊக்குவித்து அதே சமயத்தில் அங்கத்தவர்கள் இடர், நிலையில் உள்ளபோது குறைந்த வட்டியுடன் கடன் வழங்கி அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்து வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

அதுமட்டுமல்லாது அங்கத்தவர்களின் பங்களிப்பினை ஊக்குவிக்கும் விதமாக, அவர்களுக்குக் கூட்டங்களின் போது வருகைக்காகப் பரிசில்களையும் வழங்கியும், அவர்கள் சுயதொழிலினை மேற்கொள்ளக் கூடியவகையில் வங்கியில் சிபாரிசின் அடிப்படையில் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வசதிகளையும் பெற்றுக் கொடுத்து வருவது முன்னேற்றகரமான விடயமாகும்.

அத்துடன் அங்கத்தவர்களின் பிள்ளைகளின் முன்னேற்றத்திலும் கூட அவர்களைப் படிப்பில் ஊக்குவிக்கும் முகமாகப் பெறுபேறுகளின் அடிப்படையில் பிரிசில்கள் வழங்கி வருகின்றார்கள். ஒட்டுமொத்தமாக, இச்சங்கத்தின் செயற்பாடு "சிறுதுளி பெருவெள்ளம்" என்ற மூதுரைக்குச் சான்று பகிர்வதாகவுள்ளது.

இச்சங்கமும் அங்கத்தவர்களும் மென்மேலும் வளர்ந்து விருட்சமாக எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"

**திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்**
**மாவட்ட நீதிபதி,**
**சாவகச்சேரி.**




3rd Floor, Stage II, "Sethsiripaya", Battaramulla.

විජයකලා මහේෂ්වරන් පා.ම.
விஜயகலா மகேஸ்வரன், பா.உ.
Vijayakala Maheswaran, M.P.
ළමා කටයුතු රාජ්‍ය අමාත්‍ය
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்
State Minister of Child Affairs

Telephone - Office: 011 2186076, 011 2187264
Fax: 011 2187260
E-mail: mkala6424@gmail.com


My No.:                Your No.:                Date: 30.10.2017.

# வாழ்த்துச் செய்தி...

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் எனும் பெயரில் சாவகச்சேரி நகரில் 1992ம் ஆண்டு மகாலிங்கம் விவேகனந்தன் என்பவராலும், இராமலிங்கம் இராஜகுலசிங்கம் என்பவராலும் இணைந்து உருவாக்கப்பட்ட அமைப்பானது பிரதேச மக்களது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதோடு சமூக வேலைத்திட்டங்களையும் ஆன்மீக செயற்பாடுகளையும் ஒருங்கே செயற்படுத்தி வருவது பாராட்டுக்குரியது. இச்சங்கமானது இன்று 25 ஆவது அகவையில் வெள்ளி விழாக் கொண்டாடுவதையிட்டு மகிழ்வடைவதோடு அவர்களின் பணி மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகிறேன். ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினர் தமது வெள்ளிவிழாவினை முன்னிட்டு வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்கும் ஓர் பங்கு கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்வு அடைவதோடு அவர்களின் பணி யாவருக்கும் கிடைக்க வாழ்த்தி வணங்குகிறேன்.

ம. விஜயகலா.

திருமதி.விஜயகலா மகேஸ்வரன் (பா. உ)
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரும்
யாழ்/கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத்தலைவரும்


Residence - Colombo
இல. 32, 36 வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06.
No. 32, 36th Lane, Wellawatta, Colombo 06.
Tel.: 011 2360679
Fax: 011 2363591

Residence - Jaffna
276, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
276, Palaly Road, Jaffna.
Tel./Fax: 021 2221877



# எமது சமூகத்திற்குத் தொண்டாற்றுவதே காலத்தின் சிறந்த பணி!

சாவகச்சேரி, டச்வீதி, ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடுகின்ற நிலையில், வாழ்த்துச் செய்தியினை வழங்குவது குறித்து மகிழ்கின்றேன்.

சிறியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச் சங்கமானது, 25 வருட செயற்பாட்டில் இன்று தன்னளவில் வளர்ச்சி கண்டிருக்கும் நிலையில், இதன் மூலமான பணிகள் எமது மக்களுக்குக் கிடைப்பதையிட்டு இச்சங்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சேமிப்புப் பழக்கத்தை எமது மக்களிடையே ஊக்குவித்து, அதன் ஊடான கடனுதவிகளை வழங்கி வருவதில் இச்சங்கம் தன்னாலியன்ற பணியினை எமது சமூதாயத்திற்கு ஆற்றிவருகின்றதாக அறிய முடிகின்றது. கடந்த காலங்களில் யுத்தம் மற்றும் இயற்கை அழிவுகளாலும், தொடரும் இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு, இயல்பு நிலை நோக்கி நகர்வதற்குப் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ள எமது மக்கள், இன்று பல நுண் கடன் திட்டங்களால் உயிரையே மாய்த்துக் கொள்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர். இத்தகையதொரு நிலையில் இந்தச் சங்கத்தின் பணிகள் பாராட்டப்பட வேண்டியவை. இப்பணிகள் மேலும் பரவலாக்கப்பட்டு, மேம்பட எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், இந்தச் சங்கத்தை வெள்ளி விழா காணும் வரை முன்னேற்றி வந்துள்ள தலைவர், செயலாளர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**டக்ளஸ் தேவானந்தா பா. உ.**
**செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி**



பாராளுமன்றம்
පාර්ලිමේන්තුව
**PARLIAMENT**
Angajan Ramanathan M.P
MBA(International), B.Eng (Hons)

## வாழ்த்துச் செய்தி...

சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கத்தின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழாவை ஒட்டி வெளியிடப்படுகின்ற வெள்ளி விழாச் சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். 1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கமானது படிப்படியாக வளர்ச்சி கண்டு தனது சேவையின் மூலம் இன்று 25 ஆண்டை நிறைவு செய்கிறது. கடந்த காலத்தில் குறிப்பாக யுத்த காலத்தில் கூட்டுறவு அமைப்பே மக்களுக்கு அளப்பரிய பணியாற்றியது. பல்வேறு பணிகளைத் தமிழ் மக்களுக்கு வழங்கிய பெருமை யாழ்ப்பாண கூட்டுறவையே சாரும்.

எதிர்காலத் தேவையைக் கருத்திற் கொண்டு சிக்கன வாழ்க்கையை மேற்கொள்ளும் மக்கள் சிறுகச் சிறுக சேமிப்பது நடைமுறையில் உள்ள பழக்கம். இது தனிப்பட்ட வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியமோ அதே போல் இந்த சேமிப்பும் சிக்கனமும் தேசிய ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்றன. சேமிப்பு ஒரு நாட்டிற்கு மூலதனமாக அமைந்து நாட்டின் அபிவிருத்திக்குத் துணை புரிகின்றது.

இன்று ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது சாவகச்சேரிப் பிரதேசத்தில் மக்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து அதனூடாக அவர்களின் சுயதொழிலை மேம்படுத்தி, கிராமத்திற்கும் நாட்டிற்கும் அளப்பரிய சேவையினைச் செய்து வருகின்றது. இந்த வெள்ளி விழா மலர் சிறக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

**அங்கஜன் இராமநாதன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்,**
**யாழ் கிளிநொச்சி மாவட்டம்**




அனந்தி சசிதரன்
අනන්දි සසිදරන්
Ananthy Sasitharan
மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சர் அலுவலகம் வட மாகாணம்
Office of the Minister of Women's Affairs, Rehabilitation, Social Services, Cooperatives, Food Supply & Distribution, Industries & Enterprises Promotion and Trade & Commerce - Northern Province


My No : NPM/G/2017/01 | Your No : | Date : 2017-11-02

# கூட்டுறவின் தடம் பதித்து தொடர்க மக்கள் சேவை!

கால் நூற்றாண்டு கால இடையறாத உழைப்பின் மூலம் தங்கள் சமூகத்தின் வளர்ச்சியில் அளப்பரிய சேவையாற்றி வரும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவின் தடம் பதித்து மக்கள் சேவையினைத் தொடர எனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சமூகத்தின் கூட்டிணைவின் மூலம் வளர்ச்சி காணும் வகையில் மக்களை பங்காளர்களாக இணைத்து அவர்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் உன்னத பணியில் 25 ஆண்டுகள் கடந்துள்ளமையென்பது உண்மையில் பெருமையான விடயமாகும்.

சேமிப்புப் பழக்கத்தை வழக்கமாக்கும் இலக்கினைக் கடந்து கூட்டுறவின் பங்காளர்களாக மக்களை அணியமாக்கியதுடன் அதன் பயன்களையும் அவர்களே அறுவடை செய்யும் வகையில், நேரிய திட்டமிடலுடன் கூடிய அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்பட்டுவரும் இச்சங்கத்தின் வெற்றியில் என்றென்றும் துணைநிற்கும் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

பெருமைமிகு வெள்ளி விழா தருணத்தில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் திழைத்திருக்கும் இவ்வேளையில் சங்கம் கடந்து வந்த காலத்தின் சாட்சியாக வெள்ளி விழா மலர் வெளிவர இருப்பது பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

சி. அனந்தி

அனந்தி சசிதரன்.
அமைச்சர்.


295, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
Hon. Minister : 021 221 1267
Personal Secretary : 021 221 1264

295, මහනුවර පාර,
අරියාලෙයි,
යාපනය.
Coordinating Secretary: 021 221 1266
Reception : 021 221 1265

295, Kandy Road,
Ariyalai,
Jaffna.
Fax : 021 221 1268



## வாழ்த்துச்செய்தி...

சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுவதையிட்டும் அதன் வெள்ளி விழா மலருக்கும் வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் பேருவகை அடைகின்றேன்.

இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த சமூக சேவையாளர் திரு.ம.விவேகானந்தன் அவர்களது முன்னோடியான செயற்பாட்டினால் தோற்றம் பெற்ற இச்சங்கமானது சாவகச்சேரி நகர் கிராமத்தின் நிழல்தரு விருட்சமாகப் பொருளாதார ரீதியில் குடைபிடித்து நிற்கிறது.

சங்க அங்கத்தவர்களது கடன்தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற முதன்மைப் பணியைச் செய்வதனூடாக மேற்படி சங்கம் இன்று சாவகச்சேரி நகர் கிராம மக்களின் வாழ்க்கையில் ஒரு அங்கமாகவே மாறிவிட்ட நிலையில் அதன் மாதாந்த நிர்வாக பொதுக்கூட்டங்கள் முழுமையான பங்குபற்றுதலுடன் நடைபெறுவதைச் சாத்தியமாக்கும் வகையில் பல்வேறு விதமான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவது ஒரு முன்னுதாரணமான செயற்பாடாகும்.

நிதித் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்கின்ற ஒரு சங்கமாக மாத்திரம் இருக்காமல் தனது பணிகளை ஆன்மீகம், சிரமதானம் என்று விரிவாக்கம் செய்து ஏனைய பொது அமைப்புக்களை எல்லாம் விஞ்சும் வகையில் ஒரு சமூக சேவை நிறுவனமாகவும் செயற்பட்டு வருகின்றமை இதன் நிர்வாகிகள் சமூகம் சார்ந்து எத்தகைய அக்கறையான மனப்பாங்கைக் கொண்டிருக்கின்றனர் என்பதை எடுத்திம்புவதாக உள்ளது. அது மாத்திரமல்ல சமூக சேவையாளர், கௌரவிப்பு பல்வேறு விதமான தொழில் முயற்சிக்கு இயந்திர சாதனங்கள் கடன் திட்டம், ஏனைய நிறுவனங்களின் பயனாளிகளும் நன்மையடையும் வகையில் அவற்றின் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்தல் என்று பல தளங்களில் இயங்குகின்ற இந்நிறுவனம் இன்னும் பல்லாண்டு காலம் நீடித்து நிலைத்து நின்று சேவையாற்ற எல்லாம் வல்ல ஸ்ரீ பழநி ஆண்டவப் பெருமான் அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்டி அமைகின்றேன்.

நன்றி

**இவ்வண்ணம்,**
**சட்டத்தரணி கேசவன் சயந்தன்**
**வடக்கு மாகாண சபை உறுப்பினர்**



வடக்கு மாகாண சபை
උතුරු පළාත් සභාව
Northern Provincial Council

# வட மாகாணசபைக் கூட்டுறவு நம்மைக் கோபுரமாக்கும்

2வது உலக மகா யுத்தம் ஏற்பட்ட பின்னர் இருந்த நிலைமைகளைச் சமாளிக்கவும் அந்நேரத்தில் ஏற்பட்ட விநியோகங்கள் மற்றும் பொருளாதார நிலைகளை ஒழுங்குபடுத்தவும் சமூகத்தினரிடையே சிறு குழுக்கள் உருவாக்கப்பட்டு வளங்கள் பங்கீடு செய்யப்பட்டன. அக் குழுக்கள் கூட்டுப் பொறுப்புடன் நன்றாக செயற்பட்டு அந்நேரத்து இடர்களை சமாளிப்பதில் சகலருக்கும் சமமாக பங்கீடுகளை மேற்கொள்வதில் வெற்றி கண்டன. இக் குழுக்கள் ஒரு முறைமைக்குள் கொண்டுவரப்பட்ட போது கூட்டுறவு அமைப்புகள் உருவாகின. நுகர்ச்சிப் பொருட்களை பங்கீடு செய்து வந்தவை ஐக்கிய பண்டக சாலைகளாகவும் சிறு நிதிகளைச் சேமித்து அங்கத்தவர்களின் தேவைகளுக்காகச் சிறு கடன்களை வழங்கியவை ஐக்கிய நாணய சங்கங்கள் எனவும் அழைக்கப்பட்டன. இந்த ஐக்கிய நாணய சங்கங்கள், பின்னர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களாக மாற்றம் பெற்றன. இன்று கிராமம் தோறும் பல சங்கங்கள் உருவாக்கப்பட்டு சமூகத்தில் சிறுசிறு சேமிப்புப் பழக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. இதன் மூலம் பலர், இன்று பலனடைந்து வருகின்றனர்.

இந்த வகையில் 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது இவ்வாண்டு தனது வெள்ளி விழாவை கொண்டாடுவதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சங்கத்தின் நோக்கம் சேமிப்பை ஊக்குவிப்பதாக இருந்தாலும் இச் சங்கமானது அதற்கும் அப்பால் சென்று அங்கத்தவர்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்பதற்கான கடன்களை வழங்கி அங்கத்தவர்களின் குடும்ப பொருளாதாரத்தையும் அதிகரித்து அவர்களது ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிசமைப்பதைப் பாராட்டுகிறேன். அத்துடன் அங்கத்தவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகத் தையல் இயந்திரங்கள் முதலான சுய தொழிலுக்கான உபகரணங்களை வழங்கி அங்கத்தவர்களது மேம்பாட்டிற்காகப் பாடுபட்டு வருகின்றது.

இவற்றோடு நின்று விடாது வங்கிகளின் இலகு கடன் பெறவும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு பரிசில் வழங்கி கௌரவப்பதானது சிக்கன சேமிப்பு சங்க வரலாற்றில் ஒரு முன்மாதிரியாகும். அதற்கும் மேலாக சங்கக் கூட்டங்களைக் கிரமமாக நடாத்துவதற்கு ஏதுவாக ஒழுங்காக சமூகமளிக்கும் அங்கத்தவருக்கு ஊக்கத்தொகை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்துவது சிறப்பானதாகும். இச்சங்கத்தை உருவாக்க அர்பணிப்போடு செயற்பட்ட சங்கத்தலைவர் பாராட்டுக்குரியவர். மிகக் குறுகிய காலத்தில் பன்முகத் தன்மையோடு அங்கத்தவரின் நலனிலும் உயர்விலும் கரிசனை கொண்டு வீறுநடை போட்டுவரும் இச் சங்கமானது விருட்சமாக வளர்ந்து சமூகத்தைக் கட்டி எழுப்பி உன்னத நிலையை அடைய அந்த ஸ்ரீ பழனி ஆண்டவர் அருள்புரிய வேண்டுகிறேன்.

அ.பரஞ்சோதி
வடக்கு மாகாணசபை உறுப்பினர்
கைதடி.




දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය සාමාන්‍ය / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No.

ඔබේ අංකය / உமது எண் / Your No.

දිනය / திகதி / Date: 12.10.2017


# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி...

சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். 1992ம் ஆண்டு அகிலாண்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் அமரர் இராமலிங்கம் இராஜகுலசிங்கம் அவர்களின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது. அங்கத்தவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், சிரமதானம், சமூக சேவை, ஆன்மீகச் செயற்பாடுகளில் முனைப்புடன் செயற்படுத்தும் நோக்கோடு செயற்பட்டு வரும் அதேவேளை அங்கத்தவர்களுக்கு சேமிப்பில் அவர்களின் இடர்களைப் போக்கும் வகையில் இடர்க்கடன் வழங்கி அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு மட்டுமல்லாது அங்கத்தவர்களுக்கு தையல் இயந்திரங்கள், துவிச்சக்கரவண்டிகள், எரிவாயு கொள்கலன்கள் என்பவற்றை வழங்கி அவர்களின் வாழ்வை வளம்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

அங்கத்தவர்களுக்கு அவர்களின் சுயதொழில் அபிவிருத்திக்கு குறைந்த வட்டி வீதத்தில் சுயதொழில்கடன் பெறுவதற்கு சிபார்சுகளை செய்து மக்களின் சுயதொழில் ஊக்குவிப்பிற்கு தன்னாலான பணியினை இச்சங்கம் மேற்கொண்டு வருவதும் சிறப்புக்குரியது.

வருடாந்தம் சங்கத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகள் தரம் 5 புலமை பரிசில் பரீட்சை, கா.பொத. (சா.த)பரீட்சை, மற்றும் பல்கலைக்கழகம் செல்பவர்களுக்கு கொடுப்பனவுகளும் பரிசில்களும் வழங்கி, தனது பணியினை நிறைவாக ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் செயற்படும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவில் வெள்ளிவிழாக் காணும் இவ்வேளை வெளியீடு செய்யப்படும் வெள்ளி விழா மலர் மலர்ந்து நறுமணம் வீச உழைத்த அனைவருக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்து என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்கின்றேன்.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



## வெள்ளி விழா சிறக்க நல்வாழ்த்துக்கள்!

தென்மராட்சி மண்ணின் மத்தியிலே சாவகச்சேரி நகர்ப் பகுதியை அண்மித்ததாக அமைந்து மக்களுக்கு நற் சேவையாற்றிவரும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுவதையிட்டு வெளியிடும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

சாவகச்சேரி நகர்ப்பகுதியிலே கடந்த 24.10.1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கமானது 1993ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு, தனது சேவையைத் தொடர்ந்து ஆற்றிவருகின்றது. இச்சங்கமானது இப்பிரதேச மக்களுக்குப் பல அரும்பெரும் சேவைகளை ஆற்றிவருகின்றது. சங்க அங்கத்தவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து வரும் இச் சங்கமானது அவர்களது தேவையறிந்து இடர்கடன் உதவியையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இச்சங்கமானது பொதுக்கூட்டங்களுக்கு ஒழுங்காக வருகை தரும் அங்கத்தவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்களை வழங்கி வருவதுடன் புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியெய்தும் மற்றும் கல்விப் பொது தராதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் கழக அங்கத்தவர்களின் பிள்ளைகளை ஊக்குவித்து வருகின்றமையும் பாராட்டுதற்குரியது. இப் பிரதேசத்திலே சிரமதானங்கள் மற்றும் ஆன்மீகச் செயற்பாடுகளை இச் சங்கமானது முன்னெடுத்து வருகின்றமையும் போற்றுதற்குரியது.

இத்தகைய பொதுச் சேவையை இச் சங்கம் வழங்குவதற்கு உறுதுணையாக இருந்தவர்கள், இருப்பவர்கள் யாவரும் எனது பாராட்டுக்குரியவர்கள். இவ் வெள்ளி விழா நிகழ்வுகள் இனிதே சிறப்புடன் நடைபெற்றிட எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இச் சஞ்சிகை நறுமணம் வீசி புகழ்மணம் பரப்பிடவும், இச் சங்கத்தின் சேவைகள் மேன்மேலும் மேம்படவும் எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

திருமதி. தேவநந்தினி பாபு
பிரதேச செயலர்,
தென்மராட்சி



கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்
OFFICE OF THE ASSISTANT COMMISSIONER OF
CO - OPERATIVE DEVELOPMENT
யாழ்ப்பாணம் JAFFNA

Our Ref:- NP/ACCD/Gen. Your Ref:- 2017.10.14

# 25 வது ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வின் மலர் வெளியீட்டுக்கான வாழ்த்துச் செய்தி

தமிழரின் பாரம்பரியம் மேலோங்கும் சாவகச்சேரி பிரதேசத்தில் இருபத்தைந்து வருடங்களைக் கடந்து சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கமாகச் செயற்பட்டு வருகின்ற ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், தனது 25 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டும் அதற்கான மலர் ஒன்றினை வெளியிடுவதனையிட்டும் பெருமகிழ்வு அடைகின்றேன். இம்மலர் வெளியீட்டுக்காக வாழ்த்துச் செய்தியை வழங்குவதற்கு எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டுப் பெருமையடைகின்றேன்.

இன்றைய பொருளாதார சூழலில் மக்களின் அன்றாட ஜீவனோபாயத்தைக் கொண்டு நடாத்துவதற்கு நாளாந்தம் பெருமளவான பணம் செலவிட வேண்டியுள்ள நிலையிலே மக்களிடையே சேமிப்பு பழக்கத்தைத் தூண்டி எதிர்கால நலன் கருதி செயற்படுவதற்காக தன்னகத்தே தனது பிரதேசத்தைச் சேர்ந்தவர்களை அங்கத்தவர்களாக இணைத்து கூட்டுறவு விழுமியங்களுக்கேற்ப மிகவும் திறமையான முறையிலே இந்தச் சங்கம் செயற்படுவது சவால்கள் மிகுந்த செயற்பாடாகும். மேலும் அங்கத்தவர்களுக்கு இடர்கடன், சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டங்கள், வங்கியில் குறைந்த வட்டியில் கடன்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்விக்கான பரிசுத்திட்டங்கள் என்பவற்றோடு சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டங்களுக்கு ஒழுங்காக வருகை தரும் அங்கத்தவர்களுக்குப் பரிசில் வழங்குதல் போன்ற செயற்பாடுகளும் ஏனைய சங்கங்களுக்கு முன்மாதிரியான மிகவும் பாராட்டத்தக்க விடயங்களாகும் என்பதனை மறுப்பதற்கில்லை.

ஒவ்வொரு அங்கத்தவர்களும் பொதுவான கட்டுப்பாட்டுடன் இணக்கமான நிலையிலே சங்கத்தை வழிநடத்த ஒத்துழைப்பு வழங்கி வருவதைப் பாராட்டுகின்றேன். இத்தகைய செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு, சங்கத்திற்குக் காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்பட்டு வருகின்ற இயக்குநர் சபையும் ஒரு பொருத்தப்பாடுடையதாக நிர்வாகத்திறன் மிக்கதாக, சங்கத்தினை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்கின்றமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இச் சங்கமானது மென்மேலும் வளர்ச்சி பெற எனது சேவைக்காலத்தில் அனைத்து ஒத்துழைப்புக்களும் கிடைக்கும் என்பதுடன் இம்மலர் வெளியீடு சிறப்படைய வாழ்த்துவதோடு தொடர்ந்து கூட்டுறவு கொள்கைகளைப் போர்வையாகக் கொண்டு செயற்படவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நன்றி.

**பொ.மோகன்,**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**




## வாழ்த்துரை...

ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம் 25 வருடங்களை பூர்த்தியாகிவிட்டதனை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இச்சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் 1992ஆம் ஆண்டு மிகச் சிறிய சேமிப்பு, மிகச் சிறிய தொகைக் கடன் வழங்கல் நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்டு இன்று கூடிய சேமிப்பை தன்னகத்தே கொண்டிருப்பதுடன் அங்கத்தவர்களுககு ரூபா 1,50,000 வரை கடன் வழங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றமை உண்மையில் ஒரு வேகமான துரித வளர்ச்சியைக் கண்ட ஒரு சங்கமாக நோக்க முடியும்.

எமது பிரதேசம் கடந்த மூன்று தசாப்தங்களில் பலவிதமான அனுபவங்களைச் சந்தித்து வந்துள்ளது. ஆனால் வரட்சியின் மத்தியிலும் கொடுமையின் மத்தியிலும் ஓங்கி நிமிர்ந்து நிற்கும் பனை மரம்போல் ஸ்ரீபழநி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் தன் பணியைச் செய்து வருகின்றது.

சங்கத்தின் கூட்டங்களும் ஒழுங்காக நேரத்திற்கு வருகின்றவர்களுக்கு பரிசில்களை வழங்குகின்றமை மற்றும் அங்கத்தவர்ளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குதல், அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவித்தல் போன்ற சிறப்பான செயற்பாடுகள் அமைகின்றன. எனவே இச்சங்கம் இச்சமூகத்திற்கு ஆற்றி வரும் சேவை அளப்பரியதாகும். இன்று சமூகத்தில் வேரூன்றி விழுதுகளைப் பரப்பி வரும் ஸ்ரீ பழநி சிங்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் செழித்துச் சிறந்து நீடித்து நிலைத்து நிற்க மனமுவந்து வாழ்த்துகிறேன்.

R.Antony,
Divineguma Manager (HQ)
Divisional Secretariat,
Chavakachcheri.



## வாழ்த்துச் செய்தி...

சாவகச்சேரி நகரப் பகுதியில் சிறப்புடனே இயங்கி வரும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழா நிறைவை இட்டு வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனை இட்டுப் பெரு மகிழ்வடைகிறேன்.

சுயநலத்தோடு தேவைப்பாடு இன்றிச் சங்கங்களை உருவாக்கிச் செயற்படுத்த முடியாது. செயலிழந்த சங்கங்கள் பலவுண்டு. அந்நிலை தாண்டி பொது நலத்தோடு தொழில்பட்டு 25 வருடங்கள் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் வெற்றிப் பயணத்தை மேற்கொண்டுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும். அவ் வெற்றிப் பயணத்தில் சங்கத்தின் அங்கத்தவர்கள் கூட்டுறவோடு பிளவின்றிச் செயற்பட்ட தன்மையும் பெருமைக்குரியதே.

வெறுமனே கடனுதவுதல் என்ற விடயத்தைத் தாண்டி ஆன்மீகச் செயற்பாடு, சிரமதானம், மாணவர் ஊக்குவிப்பு, கௌரவிப்பு, வாழ்வாதார உதவி எனப் பல்வேறு சமூகப் பணிகளையும் இச் சங்கம் ஆற்றி வருகின்ற தன்மை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

அங்கத்தவர்களின் கூட்டிணைவோடு இன்றைய 25 வருட சங்கத்தின் வளர்ச்சியில் அங்கத்தவர்களுக்கு ரூபா 150,000/= வரை குறைந்த வட்டியுடன் கடனுதவியைப் பெற்றுத் தரக்கூடிய நிலையில் உள்ளமை சிறப்பிற்குரியதே.

சமூகமயப்பட்ட ரீதியில் உருவாக்கப்படும் நிறுவனம் உருவாக்கப்பட்ட நோக்கத்தை அறிந்து செயற்படுவது என்பது இன்றியமையாதது. அந்த நிலையை உணர்ந்து செயற்பட்டு அடைய வேண்டிய இலக்கை ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் அடைந்திருக்கின்றது என்றே நான் கருதுகிறேன்.

மக்கள் பணியை மகேசன் பணியாகக் கொண்டு சீராகத் தொழிற்பட்டு வரும் இச் சங்கத்தின் பணி தொடரவேண்டும், வளர வேண்டும். பொன்விழாவை எட்டும் போது இந்த மண்ணில் ஏனைய சங்கங்களுக்கு முன்னுதாரணமான பெரு விருட்சமாக விழுது விட்டு வளரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

நன்றி.

க.சுபாஸ்சந்திரபோஸ்
கிராம உத்தியோகத்தர்
சாவகச்சேரி நகரம் J/300



## சேவைகள் பெருகிட வாழ்த்துகின்றேன்

இருபத்தைந்து ஆண்டுகள் சாவகச்சேரி நகர் மக்களிற்கு சிறப்பான பல சேவைகளை வழங்கித் தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடும் சாவகச்சேரி நகர் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் சேவைகள் பாராட்டப்பட வேண்டியவைகள்.

பணம் உழைப்பதென்பது இலகுவான விடயம். ஆனால் உழைத்த பணத்தினை சரியான முறையில் செலவு செய்தலும் சேமித்தலுமே சிரமமான விடயங்கள்.

அந்த வகையில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது தனது அங்கத்தவர்களிடையே சேமிப்பினை ஊக்குவித்து அவர்களிற்குக் கடன்களை வழங்கி, அவர்களைச் சுயதொழில்களில் ஈடுபடுத்தி, அவர்களின் வருமான அதிகரிப்பிற்கும் ஆண்டு மூலமான சேமிப்பு அதிகரிப்பிற்கும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலமாகத் தனது பணியினைத் திறம்பட ஆற்றி, தனது சேவைகளை விரிவாக்கிய சங்கத்தினையும், அதன் நிர்வாகிகளையும், அதன் அங்கத்தவர்களையும் பாராட்டி சங்கத்தின் சேவைகள் மேலும் பெருகிடவும், வெள்ளி விழா மலர் சிறப்புறவும் மனமகிழ்வுடனும் வாழ்த்துகின்றேன்.

கே.ஞானேஸ்வரன்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
சாவகச்சேரி நகர் J/300



## தன்னலமற்ற சேவையாளர்கள் மேலும் உருவாக வாழ்த்துகின்றேன்

வெள்ளி விழாக்காணும் சாவகச்சேரி நகர் "ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினை" வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன். நான் சாவகச்சேரி நகரில் பணியாற்றிய கடந்த பதினைந்து ஆண்டுகளாக இச்சங்கம் பற்றியும், சங்கத்தின் வளர்ச்சி பற்றியும் நன்கறிவேன். இறுக்கமான நிர்வாக நடைமுறையும், இதன் ஸ்தாபகர் திருவாளர் மகாலிங்கம் விவேகானந்தனும் இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்றால் அது மிகையாகாது.

அத்துடன் சங்கத்தின் உறுப்பினர்களும், சங்கத்தினுடைய சட்டதிட்டங்களையும், நேர முகாமைத்துவத்தையும் சரிவரக் கடைப்பிடிப்பதும் பாராட்டுதற்குரிய விடயமாகும். சங்கத்தினையும், மலரினையும் வாழ்த்தும் போது அதன் ஸ்தாபகரைப் பற்றியும் குறிப்பிட்டே ஆக வேண்டும். சங்கத்தினுடைய ஸ்தாபகர் திருவாளர் மகாலிங்கம் விவேகானந்தனின் அயராத முயற்சியிலும் உழைப்பிலும் மேலும் வளர்ச்சியடைந்த அமைப்புக்களாக ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலயமும் அதன் அறநெறிப் பாடசாலையும், புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு இல்லமும், தென்னகத்தாரகை விளையாட்டுக் கழகமும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவைகளாக விளங்கினாலும் இன்னும் பல அமைப்புகளில் அவரின் சேவையும், பங்களிப்பும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

தற்போது சாவகச்சேரி சமுர்த்தி வங்கியினுடைய தலைவராகப் பதவி வகித்து வரும் அதே நேரம் சமுர்த்தி வங்கிக்கு நிரந்தர கட்டடம் கட்டுவதற்கான காணியைப் பெற்றுக்கொள்ளும் விடயத்திலும் அர்ப்பணிப்புடன் முழுமூச்சாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். திருவாளர் மகாலிங்கம் விவேகானந்தனைப் போன்ற தன்னலமற்ற சேவையாளர்களின் முயற்சிகளில்த்தான் இன்னும் இது போன்ற பல சங்கங்களும் அமைப்புக்களும் வளர்ச்சியடைந்து மக்களுக்கான பல சேவைகளையும் வழங்கி வருகின்றன. தன்னலமற்ற சமூகசேவை மனப்பான்மை அருகிவரும் இக்காலத்தில் திருவாளர் விவேகானந்தனை முன்னுதாரணமாகக்கொண்டு இவரைப் போல் இன்னும் பலர் உருவாகின்ற பொழுது, சமூகமட்ட அமைப்புக்களும், சமூகமும் இன்னும் வேகமான வளர்ச்சிப்பாதையில் செல்லும் என்பது என் நம்பிக்கை மட்டுமல்ல உண்மையும் கூட.

திருவாளர் விவேகானந்தனைப் போன்றவர்கள் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கின்ற போது வெள்ளி விழா மலர் சிறக்கவும், சங்கம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து பற்பல சேவைகளை வழங்குவதற்கும் என்னுடைய வாழ்த்து மட்டுமல்ல எல்லாம் வல்ல பரம்பொருளின் வாழ்த்தும் நல்லாசிகளும் என்றைக்கும் உண்டு எனக் கூறி எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ச.செந்தூரன்**
**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**J/305 கல்வயல்**



# வெள்ளி விழா வாழ்த்துச் செய்தி...

தென்மறவர்கள் ஆண்ட தென்மராட்சியின் எழில் கொஞ்சும் நகரமாக சாவகச்சேரி நகர் விளங்குகின்றது. இந்நகரில் அமைந்துள்ள ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.மகாலிங்கம் விவேகானந்தன் என்பவரின் அயராத முயற்சியின் காரணமாக அமரர் இராமலிங்கம் இராஜகுலசிங்கம் என்பவரை தலைவராக கொண்டு 1992 ஆம் ஆண்டு இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பல சேவைகளை வழங்கி வருகின்றமை பலரும் அறிந்த விடயம். குறிப்பாக 150,000 ரூபாவினை இடர் கடனாக வழங்கும் நிலையில் இச் சங்கம் உள்ளது. மேலும் 2010 ஆம் ஆண்டில் தமது சங்க அங்கத்தவர்களுக்கு 20 தையல் இயந்திரங்கள், 19 துவிச்சக்கர வண்டிகள், எரிவாயு அடுப்பு எனப் பல பொருட்களையும் வழங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. தமது சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரீட்சை, கா.பொ.த சாதாரணம், கா.பொத. உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைகின்ற மாணவர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் இன்னும் பல சேவைகளை செய்ய எல்லாம் வல்ல ஸ்ரீ பழநி ஆண்டவரை வேண்டி எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

ச.வினோதன்
J/300 சாவ. நகர்
பொருளாதார அபிவிருத்தி
உத்தியோகத்தர் சாவகச்சேரி



## வாழ்த்துச் செய்தி...

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு வெளியிடும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் அதன் நோக்கத்தின் பால் சிறப்பாகச் செயற்பட்டு பல்வேறு கடன் திட்டங்களையும், சுய தொழில் ஊக்குவிப்புக்களையும் அங்கத்தவர்களின் பிள்ளைகளின் சிறந்த கல்விப் பெறுபேறுகளுக்கான பாராட்டுக்களையும் வழங்கி வருகின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

எமது பிரதேசம் போருக்குப் பின்னரான சூழ்நிலையில் பல்வேறு நுண் நிதி நிறுவனங்கள் வருகையாலும் அவர்களின் பிரச்சார யுக்திகளாலும் கடன் சுமைக்குள்ளாகி மீளமுடியாத நிலையில் துன்புறும் மக்கள் இங்கு அதிகம் உள்ளார்கள். தற்போதைய முக்கிய பேசு பொருளாகவும் இந்நிகழ்வு காணப்படுகிறது. இதற்கான காரணம் மக்கள் சரியான நிறுவனங்களை அடையாளம் கண்டுகொள்ளாமை.

இச்சூழ்நிலையில் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பயன்பாடுகள் எமது கிராமிய மக்களால் புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் முன்மாதிரியான சேவைகள் பாராட்டப்பட வேண்டியவை. இச்சங்கம் கால் நூற்றாண்டு வெற்றிப் பாதையில் பயணித்து வந்துள்ளது. தொடர்ந்து நிலைத்து மக்களுக்கு சேவையாற்றி நூற்றாண்டு விழகாக்கண்டு கூட்டுறவின் பெருமையை நிலைநிறுத்த வேண்டுமென வாழ்த்தி அமைகின்றேன்.

**திருமதி.வே.செல்வரத்தினம் (M. A)**
**செயாளர்,**
**யா.மா.கூ.சபை**
**வீரசிங்கம் மண்டபம்,**
**யாழ்ப்பாணம்.**



## வெள்ளி விழா வாழ்த்துச் செய்தி...

24.10.1992 இல் அமரர் இராசகுலசிங்கம் தலைமையில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டமையை நான் அறிவேன். புத்தூர்ப் பகுதியில் இயங்கிய கூட்டுறவு சங்க அங்கத்தவர்கள் பெறும் நன்மைகளை ஏன் எம்மக்கள் பெறக்கூடாது என்ற ஆவாவினால் இவை பற்றி நன்கு அறிந்த ம.விவேகானந்தனின் கருப்பொருளில் உருவானது இச் சங்கம். 20/= ரூபா சேமிப்புப் பணமாக அறவிட்டு 2000/= ரூபா கடன் வழங்கி, சேமிப்பு 500/= வரை அதிகரித்து கடன் வசதியும் 1,50,000/= ரூபா அதிகரிக்கப்பட்டது. அத்துடன் கூட்டங்களுக்கு ஒழுங்காக வருகை தரும் அங்கத்தவர்கட்கு ஊக்குவிப்பு, தையல் இயந்திரம், துவிச்சக்கரவண்டி, அலுமாரிகள், வாழ்வதாதாரத்திட்டம் மூலம் வழங்கியுள்ளனர். அங்கத்தவர்களின் பிள்ளைகள் சாதாரண தரம், உயர்தரம் புலமைப் பரீட்சைகளில் சித்தி பெறும் வேளை அன்பளிப்புக்கள் செய்து கௌரவப்படுத்துகின்றனர். இவர்களின் சிறந்த நடைமுறையினால் சுயதொழில் கடனாக மக்கள் வங்கி 10 பேருக்கு 150,000/= ரூபா வீதம் இச்சங்க சிபார்சிற்கமைய வழங்கியுள்ளது.

இவை எல்லாம் நிர்வாகக் குழுவின் திறமையான செயற்பாட்டுக்கு எடுத்துக்காட்டு **“மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி”** என்பர். இவ்வாக்கியத்திற்கு ஏற்ப இங்கு தலைமை பேசப்படுகின்றது. தலைமையின் திறமை நிர்வாகத்தின் திறமை.

உச்சத்திறமை சரியான நேரத்திற்கு அதிகமான அங்கத்தவர்கள் வருகை தருவதனால் கூட்டம் சிறப்பாக நடைபெறும். ஊக்குவிப்புதான் அதற்கான காரணமாக முடியாது. அவர்களது அர்ப்பணிப்பும் தலைமைக்கான விசுவாசமும் காரணமாகும். ஏனெனின் வேறு நிறுவனங்களிலும் கூட்ட வரவிற்கு கொடுப்பனவு உண்டு. அங்கு இப்படி காலதாமதமின்றி சிறப்பான வருகையோடு கூட்டம் நடைபெறுவதை காணமுடியவில்லையே. ஆகவே தலைமை பிறப்பால் அல்ல பயிற்சியால் என்பது எமது லயன்ஸ் கழக கோட்பாடு. அதற்கேற்ப சிறப்பான தலைமையைக் கொடுத்து சிறப்பாகச் செயற்படும் தலைமை திரு.ம.விவேகானந்தனை வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற வாக்கியங்களுக்கேற்ப ஒற்றுமையாகத் தலைமையின் பின்னால் திரண்டு சிறப்பான புகழ்பூத்த தென்மராட்சியில் முன்நிலை சிக்கன கடனுதவிச் சங்கமாக மிளிரச் செய்யும் நிர்வாகத்தை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

“வளர்க சேவை பல்லாண்டு”

லயன் மருத்துவர்
எஸ்.எஸ் அருளானந்தம் MJFJP

வேதவனம்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
10.10.2017.



# வெள்ளி விழா சிறக்க நல் வாழ்த்துக்கள்!

தென்மராட்சி நகரின் மத்தியிலே சாவகச்சேரி நகர்ப்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தனது இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி கொண்டாடவுள்ள வெள்ளி விழா நிகழ்வில் வெளியிடப்படும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சாவகச்சேரி நகர்ப்பகுதியிலே கடந்த 24.10.1992 ஆம் ஆண்டு அங்குரார்ப்பாணம் செய்யப்பட்ட இச் சங்கமானது ஒரு வருட காலத்திற்குள்ளேயே அங்கீகரிக்கப்பட்ட ஓர் சங்கமாகி 07.09.1993 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு தனது சேவையை ஆற்றி வருகின்றது. சங்க அங்கத்தவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து வருவதுடன் தனது முக்கிய செயற்பாடாக சங்க அங்கத்தவர்களுக்கு இடர்கடன் உதவியையும் வழங்கி வருகின்றது.

இச் சங்கமானது தமிழர் நம் சொத்தாகிய கல்வி வளத்தை பெருக்கும் நோக்குடன் கல்விப் பொதுத் தராதர உயர்தர, சாதாரண தர பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும், மற்றும் புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்த கழக அங்கத்தவர்களின் பிள்ளைகளைப் பாராட்டிக் கௌரவித்து ஊக்குவித்து வருகின்றமை வரவேற்கத்தக்கது.

மேலும் இச் சங்கமானது பொதுக் கூட்டங்களுக்கு ஒழுங்காக வருகை தரும் நிர்வாக சபையினர் மற்றும் கழக அங்கத்தவர்களுக்கு ஊக்குவிப்புப் பரசில்களை வழங்கி வருகின்றமையானது அவர்களை ஊக்குவிப்பதுடன் சங்கத்தின் கூட்டங்கள் காலதாமதமின்றி உரிய நேரத்தில் நடைபெறுவதற்கும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இச்சங்கத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் சிரமதானங்கள், மற்றும் ஆன்மீகச் செயற்பாடுகள் என்பன இப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் என்றால் அதில் மிகையில்லை.

இவ்வாறாகப் பல பொதுச் சேவைகளை இச் சங்கம் வழங்குவதற்குக் காரணகர்த்தாவாக இருக்கும் அனைவரையும் பாராட்டுவதுடன் இவ் வெள்ளி விழா நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றிடவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இச் சஞ்சிகை அனைவர்க்கும் பயன்மிக்கதாக அமைய வாழ்த்தி இச்சங்கத்தின் சேவைகள் மேலும் வளர ஆண்டவனை வேண்டுகின்றேன்.

டாக்டர்.க.தயாளன்.
சுகாதார வைத்திய அதிகாரி,
சாவகச்சேரி.



## வாழ்த்து செய்தி

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் தனது 25 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டு பெருமை அடைகிறேன். இச் சங்கம் எனது மாமன் முறையான இராமலிங்கம் இராஜகுலசிங்கம் அவர்களின் தலைமையில் செயற்பட்டமையையிட்டு பெரு உவகை அடைகிறேன். தற்போது அவர் இருந்திருந்தால் பெருமைப்பட்டிருப்பார்.

தற்போதுள்ள தலைவர் திரு.ம.விவேகானந்தன் அவர்கள் தலமையில் சிறப்பான வளர்ச்சியுடன் திகழ்கிறது. இச்சங்கத்தின் செயற்குழுவும், உறுப்பினர்களும் சிறப்பாகப் பணி ஆற்றுகின்றனர். தற்போது உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வளர்ச்சிக்கு பண உதவி செய்வது மிகவும் போற்றத்தக்க ஒன்றாகும். சிக்கனக்கடன் என்றால் சிறு தொகையாக இருந்த உதவித்தொகை இன்று பல மடங்காக அதிகரித்துத் தற்போது ஒன்றரை லட்சம் அளவில் அதிகரித்திருப்பது அதன் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும். தற்போது இச் சங்கம் பெருமளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. இதற்கு 25 ஆவது ஆண்டு விழா கொண்டாடுவதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க பல்லாண்டு இச்சங்கம் வளமுடன்

**அன்புடன்**
**ச.சிவரூபன் LL.B**
**சட்டத்தரணி,**
**நுணாவில் மத்தி**
**சாவகச்சேரி.**



## வாழ்த்துச் செய்தி

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினுடைய 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவினையொட்டி வெளியிடப்படுகின்ற சஞ்சிகைக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். "கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற குறிக்கோளின் அடிப்படையில் சில நல்லுள்ளங்களின் சிந்தனையில் உதித்து. இன்று 25 வருடங்களைக் கடந்து நிற்கின்ற இச்சங்கத்தினுடைய சேவைகள் பாராட்டப்பட வேண்டியவையாகும். அங்கத்தவர்களுக்கான கடன் வசதிகள் வாழ்வாதார உதவிகள், அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் சிரமதானம், ஆன்மீகச் செயற்பாடுகள் எனப்பல சமூக சேவைகளையும் ஆற்றி, ஒட்டுமொத்தமாக சாவகச்சேரி வாழ் மக்களுக்கு சிறப்பான சேவையினை வழங்கி வருகின்றமை மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இன்று கூட்டுறவுத்துறை பல்வேறுபட்ட காரணிகளால் நலிவுற்றுச் செல்லும் நிலையில் கூட்டுறவுப்பணியிலே சிறப்பாக நிலைத்திருக்கும் இச் சங்கமானது தொடர்ந்து மென்மேலும் வளரவும் சேவை ஆற்றவும் என் மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்து இறைவனது அருட்கடாட்சத்தையும் வேண்டி நிற்கிறேன்.

A.J.I. இன்பராஜ் லெம்பேட்
தபாலதிபர்,
சாவகச்சேரி.



# வெள்ளி விழாக் காணும்
# ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

வெள்ளி விழாவிற்காக காலடி எடுத்து வைத்திருக்கின்ற இச் சங்கமானது திரு.ம.விவேகானந்தன் அவர்களின் முயற்சியினால் அமரர்.இ.இராசகுலசிங்கம் தலைமையில் டச் வீதிப்பகுதியில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமாக ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய மண்டபத்தில் 24.10.1992 இல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இச் சங்கமானது ரூபா 20/= தில் இருந்து ரூபா 500/= ஆக சந்தாப்பணம் வளர்ந்து பரிணமித்துள்ள இந் நிலையில், அங்கத்தவர்களுக்கு ரூபா 2000 தில் இருந்து படிப்படியாக ரூபா 1,50,000/= வரை கடன் வழங்கி சுயதேவையினைப் பூர்த்தி செய்வது ஓர் வரப்பிரசாதமாகும். இந்நிலையில் அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு வகைப்பட்ட சுய தொழில் உபகரணங்களை வழங்கி வருவதுடன், கூட்டத்திற்கு வருகை தரும் அங்கத்தவர்களை ஊக்குவிப்பதற்காக பரிசில்கள் வழங்குவது ஓர் சிறப்பம்சமாகக் காணப்படுகிறது. அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக ஊக்குவிப்புக்கள் வழங்குகிறது. அங்கத்தவர்களுக்கு வெளி நிதி நிறுவனங்கள் மூலம் பெரியளவிலான கடன்களைப் பெற்றுக் கொடுக்கும் இச் சங்கத்தை நாம் ஓர் நிறுவனம் என்பதில் எவ்விதமான ஐய்யப்பாடுகளும் இல்லை. பல்வேறுபட்ட செயற்பாடுகளை வழங்கும் இந்நிறுவனத்தினை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைவதுடன் மேலும் இந் நிறுவனத்தின் செயற்பாடுகள் வளர்ச்சி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

திருமதி.ஆறுமுகம் உமாதேவி
சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர்
சமுர்த்தி மகாசங்கம்,
தென்மராட்சி.



# வாழ்த்துச் செய்தி...

25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவைக் கொண்டாடும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம் வெளியிடும் சஞ்சிகை ஆக்கத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"சிறுதுளி பெருவெள்ளம்" போல இக்கூட்டுறவுச் சங்கமானது தமது செயற்பாடுகளை சிறிதாக ஆரம்பித்து இன்று சமாந்தர நிலையை எட்டியுள்ளது. மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், கூட்டுறவு மனப்பாங்குகளை வளர்த்தல், மக்களின் வாழ்வாதாரங்களுக்கு உதவியளித்தல் போன்ற பல அரிய சேவைகளை வழங்கி வருகின்றது.

அதுமட்டுமன்றி நிர்வாகமானது அங்கத்தவர்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக பாராட்டுதல்களையும் பரிசில்களையும் வழங்கி வருகின்றது.

இந்த வகையில் இக் கூட்டுறவுச் சங்கமானது மேலும் மேலும் உயர்வடைய வாழ்த்துவதோடு இச் சஞ்சிகையானது சிறப்புடன் வெளிவர நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ந.ஜெயகுமாரன்
அதிபர்
யா/ டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி.



# தேசமெங்கும் நின் புகழ் பரவட்டும்

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன். ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி மகிழ்ச்சியான வாழ்வை மேம்படுத்தும் நோக்குடன் கடன் வசதிகள், சுயதொழில் ஊக்குவிப்புக்கள், கல்வி ஊக்குவிப்பு நிதிகள் என்பனவற்றை வழங்கி வருகிறது. அதுமட்டுமல்ல திட்டமிட்ட செயற்பாடுகள் நேரத்தின் முக்கியமறிந்த கூட்டங்கள் ஆழமான சமூக செயற்பாடுகள் தொலைநோக்குடனான சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் தன்மை என்பனவற்றையெல்லாம் கொண்டு சிறப்புடன் பணி ஆற்றுகின்றது.

ஒரு வீட்டுக்கு அத்திவாரம் பலமாக இருக்கும். ஆனால் அது கண்ணுக்க புலப்படாது. அதன் மேலுள்ள கட்டடம் மட்டும் அழகுடன் மிளிர்ந்து கொண்டிருக்கும். அந்தக் கட்டடத்தை பாதுகாத்து தாங்கி நிற்பது அத்திவாரம் தான். அது போன்று தான் இச்சங்கத்தின் செயற்பாடும். தொடர்ச்சியான பணியும், அர்ப்பணிப்பும், மகத்தானது. சிறிய உதவி பெரிய சாதனைக்கு வழிகாட்டுகின்றது. இதனால் வெள்ளி விழாக் கொண்டாடி மகிழ்கின்றது. எனவே செயற்றிறன்மிக்க நிர்வாக சபை உறுப்பினர்களைக் கொண்டு இயங்கும் இச் சங்கமானது புகழ்பரப்பி வளர்வதுடன் வெள்ளி விழா மலரும் ஞாலம் புகழ்ந்திட ஒளி பரப்பி மணம் வீச ஆண்டுதோறும் வெளிவர நல்லாசிகள் வழங்குகிறேன்.


திருமதி.லலிதாமலர் முகுந்தன்
அதிபர்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி



# ஸ்ரீ பழநியே நீ பல நூற்றாண்டு தாண்டி வாழ வேண்டும்

சாவகச்சேரி டச் வீதியில் 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வெள்ளி விழாக்காணும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்திற்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச் சங்கமானது ஆரம்பித்த காலம் தொடக்கம் அங்கத்தவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதுடன் இடர்கடன் உதவிகளையும் வழங்கி வருகின்றது. அத்துடன் அங்கத்தவர்களுக்குத் தேவையான வாழ்வாதார உதவிகளையும் பொதுப்பரீட்சைகளில் சித்தியெய்தும் அங்கத்தவர் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்புக்களையும் வழங்கி வருவது யாவரும் அறிந்ததே

**"இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்"**

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க எதிர்கால நோக்கறிந்து செய்த தலைமைத்துவமும் நிர்வாகப் பங்கீடுமே இன்று ஸ்ரீ பழநி சிக்கன கூட்டுறவுச் சங்கம் வெள்ளிவிழாக்காண காரணமாயிற்று என்றால் அது மிகையாகாது.

இச் சங்கமானது மேலும் பல சமூக பணிகளை ஆற்றி, பெருவிருட்சமாக வளர்ந்து செழிக்க இறையருளையும் வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

வாழி! வாழி! வாழி!

**கந்தசாமி நாகசுபாஜன்**
**பொதுமுகாமையாளர்**
**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்**
**சாவகச்சேரி.**



## முன் உதாரணமான கூட்டுறவு சங்கம்

சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் 25 ஆவது வருட நிறைவையொட்டிய வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதனையிட்டு அகமகிழ்ச்சி அடைகின்றேன். தென்மராட்சி பதியினிலே இன்று வெற்றிகரமாகச் செயற்பட்டு வரும் சிக்கான கடனுதவு சங்கங்களின் வரிசையில் ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் ஒன்றாகும். குறிப்பாக இச் சங்கமானது ஏனைய சிக்கன கடன் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுதாரணமாகவும், எடுத்துக்காட்டாகவும், வழிகாட்டியாகவும் திகழ்வது சிறப்பம்சம் ஆகும்.

அதாவது ஆரம்பகாலத்தில் அங்கத்தவர்களிடம் இருந்து சிறிய சேமிப்புக்களைத் திரட்டி குறைந்த அளவு கடனை வழங்கி வந்த இச் சங்கமானது இன்று அங்கத்தவர்கள் மிகுந்து பயன் அடையக் கூடியவாறான முதலீடுகளை உருவாக்கும் அளவுக்குக் கடன் சேவையை விஸ்த்தரித்துள்ளது. சிக்கனம், சேமிப்பு, முதலீடு என்ற படிமுறையில் அங்கத்தவர்களிடமிருந்து சிறுகச் சிறுக சேமித்த பணம் இறுதியில் அவர்களின் சுயதொழில் முயற்சிக்காகவும், பொருளாதார தேவைகளுக்காகவும் பயன்படக்கூடிய வகையில் இச்சங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளது.

கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையில் கூட்டுறவுப் பண்புகளை பின்பற்றி அங்கத்தவர்கள் யாவரும் தூய சிந்தனையுடன் விசுவாசமாக செயற்பட்டதனாலேயே இச்சங்கம் வெள்ளி விழாக் காணும் அளவுக்கு பாரிய வளர்ச்சியை எட்டியுள்ளது எனலாம். குறிப்பாக இச்சங்கத்திடமிருந்து ஏனைய சங்கங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. கூட்டங்கள் கூடும் ஒழுங்கு, சகலரும் தவறாது சமூகமளித்தல், நேரம் தவறாத கொள்கை, சேமிப்பு பழக்கம், கணக்கு வைப்பு முறை, கணக்காய்வு, பொதுப்பணி, சகோதரத்துவம், கூட்டுமுயற்சி போன்ற இன்னும் பல நற்பண்புகள் இச்சங்க அங்கத்தவர்ளிடையே காணப்படுவது பாராட்டக்கூடிய விடயமாகும்.

மேலும் அங்கத்தவர்களின் சமூக பொருளாதார நலன்களில் அக்கறை கொள்ளும் வகையில் வாழ்வாதார உதவிகள், மாணவர்களுக்கான கல்வி நலன் சார்ந்த உதவிகள், ஆலயப் பணிகள் போன்ற இன்னும் பல சேவைகளைத் திறம்பட ஆற்றிவருவதை யாவரும் அறிவர். இவ்வாறான தன்னலமற்ற பெறுமதி வாய்ந்த நற்பணிகளை திறம்பட ஆற்றி வருகின்றமையே இச்சங்கம் சமூக மட்டத்தில் பிரகாசிக்கக் காரணம் எனலாம்.

இன்று கூட்டுறவு துறையானது பல்வேறு விமர்சனங்களுக்கும் பல சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்ற ஒரு துறையாகவும், அரச ஆதரவு அருகி வருகின்ற, மக்கள் தூர விலகிச் செல்கின்ற ஒரு துறையாகவுமே காணப்படுகின்றது. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் கூட இச் சங்கத்தின் மகத்தான பணிகள் ஊர் போற்றும் அளவுக்கு வியாபித்துள்ளது. இவ்வாறு இச் சங்கம் மிகவும் குறுகிய காலத்தில் சிறப்பான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் சங்கத்தின் தலைவர், நிர்வாகக் குழுவினர் மற்றும் அங்கத்தவர்களின் தூர நோக்குடைய சிந்தனையும், அயராத முயற்சியும், கூட்டுறவின் மீதான பற்றுமே ஆகும்.

இன்று வெள்ளி விழாக்காணும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் எதிர்காலத்தில் மேலும் பல வளர்ச்சிப்படிகளைத் தாண்டி இன்னும் பல விழாக்களைக் காணவேண்டும் என, சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் சார்பாக ஸ்ரீ பழநி ஆண்டவப் பெருமானைத் தாள்பணிந்து வாழ்த்தி அமைகின்றேன்.

"கூட்டுறவு மந்திரத்தை சொல்லுவோமே"

நன்றி

கண்டி வீதி,
சாவகச்சேரி.

யோ.தெய்வேந்திரன்.
பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்



# ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் வாழ்த்துச் செய்தி...

சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் 25ஆவது வருட வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன். மேலைத்தேய நாடுகள் பலவற்றிலும் அடிமட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இலங்கையில் கூட்டுறவுக் கொள்கைகளைத் தன்னத்தே முழுமையாகக் கொண்டு ஐக்கிய நாணய சங்கங்களாக 1911ஆம் ஆண்டில் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டு, 1980களில் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயரில் கிராமங்கள் தோறும் உருவாக்கப்பட்டு இன்று வளர்ச்சியடைந்து வருவதுடன் தம் அங்கத்தவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும், நவீனகால முன்னேற்றத்திற்கு அமைய மேற்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் யாழ்குடா நாட்டின் தாவர வளம்மிக்க தென்மராட்சி பிரதேசத்தின் நகர மையத்திலே J/300 கிராம சேவையாளர் பிரிவில் 24.10.1992 இல் ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட ஸ்ரீ பழனி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கம் கடந்த 25ஆண்டுகளாக அங்கத்தவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு வழிவகுத்த சங்கங்களில் ஓர் சங்கமாக மிளிர்கின்றது.

இச் சங்கமானது அங்கத்தவர்களின் மாதாந்த கட்டாய சேமிப்பை ஊக்குவிப்பு, இடர்கடன் வழங்கல், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் கொடுப்பனவு, மக்கள் வங்கி ஊடாகச் சுயதொழில் கடன் வழங்கச் சிபாரிசு செய்தமை போன்ற செயற்பாடுகளை அங்கத்தவர்களின் நலன் கருதி மேற்கொண்டு வருவதுடன், கூட்டுறவு சட்ட நடைமுறைகளுக்கு அமைய வருடந்தோறும் தவறாது வருடாந்த பொதுக் கூட்டங்களையும், மாதந்தோறும் நிர்வாகக் கூட்டம், பொதுக் கூட்டங்களையும் நடாத்தி வருகின்றமையும் பாராட்டுவதற்குரியதாகும்.

வெள்ளி விழா கொண்டாடும் ஸ்ரீ பழனி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கம், மாற்றமடைந்துவரும் உலக மாற்றத்திற்கு ஏற்ப தனது அங்கத்தவர்களின் சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டிற்கான திட்டங்களை உருவாக்கி மென்மேலும் வளர வேண்டும் என இவ் வெள்ளி விழா மலரின் மூலம் நல்லாசிகள் கூறி வாழ்த்துகிறேன்.

நன்றி.

செல்வி.ச.லாவண்யா
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்.
யாழ்ப்பாணம்.



# பல்லாண்டு சேவை சிறக்க வாழ்த்துகிறேன்

சாவகச்சேரி நகரில் மக்கள் மிகவும் போராட்டமான காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு தனது சேவை மூலம் இன்று 25ஆவது வருடத்தில் கால்பதித்துள்ளது மிகவும் சிறப்பான ஒரு விடயமாகும். இவ் அமைப்பு கடந்த காலத்தில் மக்களுக்கு ஆற்றிய சேவை சிறப்பானது. தொடர்ந்தும் பல ஆண்டுகள் அவர்கள் சேவை செய்வதற்கும் மேலும் வளர்ச்சி பெறுவதற்கும் பழநி ஆண்டவன் அருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

நன்றி.

ந.சிவபாலன்<br>
(தலைவர்)<br>
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

19/11/2017



# மக்கள் சேவையே மகேசன் சேவை

"பிறர்க்குதவி செய்யவே பிறவியெடுத்தான் மனிதன்" என்று மதங்களும், மகான்களும் எடுத்தியம்பும் எழில் சுரக்கும், கருத்தாழம் பொதிந்த, ஏற்றமிகு தங்கள் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் பங்கமிலாச் சேவைகளைப் பாராட்டுவதற்கு வார்த்தைகளே இல்லையெனலாம்.

24.10.1992ல் முளைவிட்ட தங்கள் சங்கம் முனைப்புடன் செயலாற்றி இன்று "மக்கள் வேையே மகேசன் சேவையென" மகத்தான பாதையில் சென்று கொண்டிருக்கும் வெற்றி போற்றுதற்குரியது என்பதை எவராலும் மறுக்கவோ மறைக்ககவோ முடியாது.

தங்கள் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றோருக்கு தையல் இயந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், ஸ்ரீல் அலுமாரிகள், எரிவாயு அடுப்புகளுடன் கொள்கலன்கள் ஆகியவற்றை வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் வழங்கி சுயதொழில்களை ஊக்குவிக்கும் உயர் செயல்கள் உண்மையில் பாராட்டுக்குரியவையே!

வருடா வருடம் புலமைப் பரீட்சையில் சித்தியெய்தும் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும், கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையிலும், உயர்தரப் பரீட்சையிலும் ஒரே தடவையில் சித்தியெய்திப் பல்கலைக்கழகம் செல்லும் (அங்கத்தவர்களின்) பிள்ளைகளுக்கும் தலா ரூபா 1500/= வழங்கி ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் செயல்கண்டு மனம் மகிழாதோர் எவருமில்லையெனலாம்.

2011 ஆம் ஆண்டில் சாவகச்சேரி மக்கள் வங்கியின் மூலம் சங்கத்திலுள்ள 10 அங்கத்தவர்களுக்கு ரூபா 1,50,000/= வீதம் சுயதொழில் கடனாக, தங்கள் சங்கத்தின் சிபார்சின் அடிப்படையில் பெற்றுக் கொடுத்தமையும் சிறந்த சேவையாகும்.

தங்கள் மகத்தான சேவைகளின் மூலம் "மனிதம் மலரட்டும் புனிதம் பொலியட்டும்" என எல்லாம் வல்ல இறையருள் வேண்டி அமைகின்றேன்.

**கலாபூஷணம். கலைமாமணி**
**கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்**
**மூளாய்.**



# வாழ்த்துச் செய்தி...

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஆண்டு மலர் ஒன்றினை வெளியிடும் இந்நேரத்தில் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அங்கத்தவரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதைத் தமது சேவையாகக் கொண்டு மிகவும் சிறப்பாக இயங்கி வரும் இச்சங்கமானது சமூக சேவைகளையும் முன்னின்று செய்வது சிறப்பம்சமாகும்.

குறிப்பாக மாணவர்களின் கல்வி ஊக்குவிப்புச் செயற்பாடானது அனைத்து மாணவர்களினதும் கல்வியை மேம்படுத்தும் ஒரு செயலாகும். அது போன்று வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தி கடன்களை வழங்கி வரும் இச் சங்கம் என்றென்றும் பெருவிருட்சமாகி அங்கத்தவர்களுக்குப் பல தரப்பட்ட சேவைகளை வழங்கி விழுதுகளைப் பதித்துச் சிறப்புடன் வளர வாழ்த்துகிறேன்.

**திருமதி. வைத்திலிங்கம் பரிமளம்**
**(உபதலைவர்) J/300 சாவ நகர்**
**தென்னை அபிவிருத்திச் சபை,**
**டச் வீதி, சாவகச்சேரி.**



# வெள்ளி விழா வாழ்த்துச் செய்தி ...

சாவகச்சேரி டச் வீதி ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழாவையொட்டி வெளிவரும் மலர் சிறக்க எனது வாழ்த்துச் செய்தியினைத் தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன்.

24.10.1992ல் மிகச்சிறிய அளவில் ஆரம்பிக்கப் பெற்ற இச்சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம் அளப்பரிய வளர்ச்சி கண்டு பெருவிருட்சமாக நின்று அனேக ஏழை விவசாய மக்களுக்கு நிழல் அளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து எனது மட்டற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதோடு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

இச்சங்க அங்கத்தவர்களுக்குக் காலத்திற்குக் காலம் கடன் வசதிகளை அதிகரித்து வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் இச்சங்கம் உறுதுணையாக நின்று உதவுகிறது. இச்சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வளர்ச்சிக்காக ஊக்குவிப்புத் தொகைகளை வழங்கி ஏழைச் சிறார்களின் வாழ்வை வளப்படுத்துகின்றமை மிகவும் பாராட்டுக்குரியது. மேலும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள நலிந்த குடும்பங்களுக்கு தையல் மெசின்கள், துவிச்சக்கர வண்டிகள் போன்ற உபகரணங்களை வழங்கி சுயதொழில் விருத்தியை ஏற்படுத்தி வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி நிற்கின்றமை மிகவும் போற்றுதற்குரிய செயற்பாடாகும்.

கடந்த 25 வருடங்களாக இச்சங்கம் "எம்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற உயரிய கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமையச் செயற்பட்டு கூட்டுறவுத்துறைக்குப் பெருமை சேர்க்கின்றமை பாராட்டுதற்குரியது.

மேலும் இச்சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம் பல துறைகளிலும் வளர்ச்சி கண்டு பல்லாண்டு காலம் நிலைத்து நின்று சேவையாற்றி அதன் பொன்விழா, வைரவிழா மற்றும் நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாட வேண்டும் என்று எமது விவசாய சம்மேளம் சார்பாகவும் அதன் தலைவர் என்ற வகையிலும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

உ. பரமநாதன் (தலைவர்)
சாவ. நகர் விவசாய சம்மேளனம்



# எங்கள் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

24.10.1992ல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இச் சங்கமானது 25 உறுப்பினர்களுடன் ஆரம்பமாகி இன்று இச்சங்கம் 50 அங்கத்தவர்களைக் கொண்டு ஒன்றரை லட்சம் ரூபா வரையில் அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கி உதவி வருகிறது. இது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையிலும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் சித்தியடைந்திருப்பின், பல்கலைக்கழகம் புகும் போதும் ஊக்குவிப்புத் தொகை வழங்கி அவர்களைக் கௌரவித்து வருகின்றமை ஒரு சிறப்பான விடயமாகும்.

மேலும் சங்கத்தின் சகல பொதுக்கூட்டங்களுக்கும் ஒழுங்காகச் சமூகம் அளிக்கும் அங்கத்தவரைக் கௌரவித்து விசேட பரிசில்களைக் கொடுப்பது சங்கத்தின் பெரு வளர்ச்சிக்கான பேருதவியாக அமைகின்றது.

அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் குறிப்பாக மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கும் கடன்களையும் பரிசில்களையும் வழங்கி, பல தரப்பட்ட சேவைகளை மேற்கொண்டு ஆல் போல் தழைத்து பெருவிருட்சமாக விழுதுகளை ஆழப்பதித்து சிறப்பாக இயங்கி வருகிறது எமது சங்கம்.

நடுவூரின் கண் நிற்கும் நல்ல மரம் போன்று விளங்கும் இச்சங்கம் தொடர்ந்தும் சிறந்த சேவைகளை எம் மக்களுக்கு வழங்கி மேன்மேலும் வளர்ச்சி காண்பது உறுதி.

இச்சங்கத்தின் பிதாமகனான திரு. மகாலிங்கம் விவேகானந்தன் அவர்களையும் ஒவ்வொரு கால கட்டத்திலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய நிர்வாகத்தினரையும் அங்கத்தவர்களையும் பாராட்டி அவர்களின் அயராத உழைப்பினாலும் உயர்ந்து நிற்கும் இச்சங்கம் மேன்மேலும் புதுமைகளைப் புகுத்தி பழநி முருகனின் துணை கொண்டு வளரும் என்பதில் ஐயமே இல்லை எனலாம்.

திருமதி. உருத்திராதேவி சண்முகநாதன்
{ஓய்வு நிலை கணித, ஆங்கில,
சிங்கள ஆசிரியை (B.Sc.Dipin Ed)}
(முன்னாள் தலைவரும், ஆரம்பகால உறுப்பினரும்)



## வாழ்த்துரை...

1992ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24ம் திகதி "ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்" என்ற பெயரில் ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய மண்டபத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று தனது 25 ஆவது ஆண்டில் காலடி பதிக்கின்றது. இது மகிழ்ச்சியான ஒரு விடயமாகும்.

பல்வேறு கட்டங்களில் பல்வேறுபட்ட இன்னல்களின் மத்தியில் இச்சங்கம் தொடர்ந்து செயலாற்றுவது பாராட்டுக்குரியது.

மகாலிங்கம் விவேகானந்தன் என்வரின் முயற்சியினாலும் J/300 சாவ. நகர் பிரிவு மக்களின் ஒத்துழைப்பினாலும் இ. இராஜகுலசிங்கம் என்பவரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை இயங்கி கொண்டிருப்பது எமது சமூக முன்னேற்றத்தின் ஒரு படிக்கல் வளர்ச்சியே ஆகும்.

இச்சங்கத்தின் நோக்கமே தனது சங்க அங்கத்தவர்களின் சுயதேவைகைளப் பூர்த்தி செய்வதே. இதன் ஒரு பகுதியே 1994 ஆம் ஆண்டு ஆறு அங்கத்தவர்களுக்கு 2000/= ரூபாவிலிருந்து ஆரம்பித்து இன்று 150,000/= ரூபா வரையான இடர் கடன்களை வழங்கி வருகின்றது.

மேலும் இச்சங்கம் சமூக மக்களிக் சுயதொழில்களை ஊக்குவித்து வருகின்றது. அத்துடன் வருடாவருடம் புலமைப் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை மற்றும் உயர்தரம் சித்தியெய்தி பல்கலைக்கழகம் செல்லும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு தலா 1500/= வழங்கி வருகின்றது. மேலும் இச்சங்கத்தின் சேவைகள் எல்லா சமூக மக்களிடத்தும் விஸ்தரிக்கவும் இச்சங்கத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து இச்சமூக மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் செயற்பட வாழ்த்துகின்றோம்.

அத்துடன் இச்சங்கத்தை தொடர்ந்து செயற்படுத்தும் சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் வாழ்த்துதோடு 25 ஆவது ஆண்டு நிறைவு நூல் வெளியீட்டுக் குழுவினரையும் வாழ்த்தி இன்னும் பல ஆண்டுகள் கடந்தும் இச்சங்கம் வெற்றிகரமாக செயற்பட எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நன்றி.

டயானா
செயலாளர்.
J/300 சாவ. நகர் பெண்கள் விவகார அமைப்பு



# வாழ்த்துச் செய்தி...

சாவகச்சேரி நகர் டச்வீதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் "ஸ்ரீ பழநி ஆண்டவர்" ஆலயத்துடன் இணைந்த மக்களுக்குச் சமூகப் பணி ஆற்றும் வகையில் கடந்த பல வருடங்களாக இயங்கி வரும் "ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்" 25ஆவது அகவையில் வெள்ளி விழா கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

"**சிறுதுளி பெருவெள்ளம்**" என்ற முதுமொழிக்கமைய நடுத்தரவர்க்க மக்களுக்காக கூட்டுறவு அடிப்படையில் சேமிப்பில் ஈடுபடவைத்து முதலில் ரூபா 20/= ல் ஆரம்பித்து தற்பொழுது ரூபா 500/= சேமிப்பாக வைப்புச் செய்வதைப் பார்க்க, ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலன சபையில் செயலாளர் ஆகிய கௌரவ பதவிகளில் பணியாற்றி தற்சமயம் எமது பரிபாலன சபையில் நி. சபை அங்கத்தவராக உள்ள சங்க தலைவர் திரு. ம.விவேகானந்தன் அவர்களின் தலைமைத்துவம் வினைத்திறன் ஆகியவற்றை பாராட்ட வேண்டும். யுத்த நெருக்கடி காலத்திலும் தொடர்ந்து இயங்கி ரூபா ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் உச்சக் கடனாக வழங்கி தென்மராட்சியில் முதன்மையான சங்கங்களில் ஒன்றாக மிளிர்கிறது எனலாம்.

அத்துடன் இடர் கடனாக ரூபா 150, 000/= வரை வழங்கியும் மக்கள் வங்கி மூலம் 1 50, 000/= வரை பெறுவதற்குச் சிபார்சு மூலம் பேருதவி புரிந்தமையும் சாதனையாகும்.

சமூகப் பணியிலும் பங்கு பற்றும் கருத்தில் பொதுப் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதி உதவி வழங்கி வருவது பெரு வரவேற்புக்குரியதாகும்.

மேலும் 2012ம் ஆண்டு பிரதேசத்தில் சமூக நற்பணிகளில் பெரும் பங்காற்றிய 5 மூத்த பிரஜைகளுக்கு கௌரவிப்பு நிகழ்வு நடாத்தியமை வேறு ஒரு சங்கத்தினாலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் பதிவு செய்து, வெள்ளி விழா சிறப்புற நடைபெற எமது ஆலயம் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ப.நடராசா
தலைவர்
ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலனசபை
டச்சு வீதி, சாவகச்சேரி.



# செயலாளர் மனதிலிருந்து!

சாவகச்சேரி டச்வீதியில் இயங்கிவரும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது தனது 25வது ஆண்டு நிறைவு செய்யும் விழாவானது எம் பிரதேச மக்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்

இச் சங்கமானது ஆரம்பத்தில் 25 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 56 அங்கத்தவர்களுடன் இயங்கி வருகின்றது. இச்சங்கம் சிறப்பாக இயங்குவதற்கு அங்கத்தவர்களின் ஒற்றுமையும் ஒத்துழைப்புமே முக்கிய பலமாக அமைகின்றது. இச்சங்கமானது குறித்த நேரத்தில் நிர்வாக சபைக்கூட்டம், பொதுச் சபைக்கூட்டம், வருடாந்த பொதுக்கூட்டம் போன்றவற்றை ஒழுங்காக நடத்தி வருகின்றமையும் அக்கூட்டங்களில் அங்கத்தவர்கள் தவறாது சமூகமளிப்பதும் இச்சங்கத்தின் மேன்மைக்கு இன்னுமொரு காரணமாக அமைகின்றது.

சமூகத்தில் மனித வாழ்வுக்கு பொருளாதாரப்பலம் அவசியம். அதனைக் கருத்திற் கொண்டு பொருளாதாரப் பலம் குறைந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் கடனுதவிகளை வழங்கி வருகின்றது. ஆரம்பத்தில் 2000/= ரூபாவாக வழங்கப்பட்டு வந்த கடன் தொகை தற்போது ரூபா 1,50,000 மாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் கா.பொத. சாதாரணதர, க.பொத. உயர்தரப் பரீட்சைகளில் சித்தியெய்தி பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் ஊக்குவிப்பாக 1500/= ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. நமது ஊர் மக்கள் நாட்டு நடப்புக்களை அறிந்து கொள்வதற்காகவும், மாணவச்செல்வங்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்துவதற்காகவும் வாசிகசாலைக்கு வலம்புரிப் பத்திரிகை வழங்கி வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இப்படியான பல நன்மைகளை செய்து வரும் ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது இன்னும் பல்லாண்டு காலம் மக்களுக்குப் பல நன்மைகள் செய்து முதன்மையாகத் திகழவேண்டுமென வாழ்த்தி 2015ம் ஆண்டிலிருந்து இன்று வரை நிர்வாக சபை உறுப்பினராகவும், செயலாளராகவும் இருப்பதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன் எனக்கூறி விடைபெறுகின்றேன்.

திருமதி லலித்தாராணி ரவீந்திரன்
செயலாளர்,
**ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம்,**
சாவகச்சேரி.



# பொருளாளரின் எண்ணத்திலிருந்து!

தென்மராட்சியின் சாவகச்சேரி நகர் J/300 பகுதியில் ஸ்ரீ பழநி ஆண்டவன் ஆசியோடு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் 25ஆம் ஆண்டு நிறைவில் வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சங்கமானது ஆரம்பகாலத்தில் இருபத்தைந்து அங்கத்தவர்களுடன் தொடங்கிப் படிப்படியாக அதிகரித்து தற்போது 50 அங்கத்தவர் இச்சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள். ஆரம்பத்தில் 2000/= ரூபா அங்கத்தவர்களுக்கு கடனாகக் கொடுக்கப்பட்டு தற்போது 150,000/= ரூபா வரை கடன் வழங்கப்பட்டு வருவது பெருமைப்பட வேண்டிய விடயமே.

எமது சங்கத்தில் பெருங்குறையாக இருப்பது இளம் வயதினர் குறைவாக இருப்பதுவே. எனினும் தற்பொழுது இளம் வயதினர் எமது சங்கத்தில் இணைந்து வருகின்றனர். அவர்கள் இனிவரும் காலத்தில் தலைமைத்துவப் பொறுப்பையும், மற்றும் நிர்வாகத்தையும் ஏற்று நடாத்த வேண்டும் என்பதே எமது அவா.

ஒரு சங்கம் 25 வருடங்கள் திறமையாகச் செயற்படுவது அதிலும் அங்கத்தவர்களின் சொந்தப் பணத்தில் செயற்படுவது என்பது சாதனையே. அதற்கு எமது அங்கத்தவர்கள் நிர்வாக சபையினருடைய ஒத்துழைப்பே முக்கிய காரணமாகும்.

இச்சங்கத்தில் நேரமுகாமைத்துவம மிக முக்கியமாக கடைப்பிடிப்பதும் ஒரு நல்ல விடயமே. இச்சங்கம் வளர்வதற்கு முக்கிய காரணம் தலைவர் திரு.ம.விவேகனந்தன் அவர்களின் ஆலோசனையும் செயற்பாடும் என்றே கூறமுடியும். மேலும் தற்காலத்தில் பல நிதி நிறுவனங்கள் பொருளாதாரம் குறைந்த மக்களுக்கு அதிகூடிய வட்டிக்கு பணத்தைக் கொடுத்து அவர்களைத் தற்கொலை செய்யும் அளவுக்குக் கொண்டு செல்கின்றனர். ஆகவே வசதி குறைந்த மக்கள் இப்படியான சங்கங்களில் இணைந்து நல்ல பயனைப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இச்சங்கமானது பல்லாண்டு காலம் தனது சேவையினை மக்களுக்குச் செய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

திருமதி.ஸ்ரீகாந்தரூபி பரமநாதன்
பொருளாளர்,
ஸ்ரீ பழநி சிக்கன கூட்டுறவுச் சங்கம்,
சாவகச்சேரி.



# எமது சங்கத்தின் வரலாறும் அதன் வளர்ச்சியும்...

எமது ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தனது 25ஆவது ஆண்டு விழாவினை நிறைவு செய்து 26 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இச் சங்கத்தின் ஸ்தாபகர் என்ற வகையிலும், இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு வெள்ளி விழாவின் தலைவர் என்ற வகையிலும், இச்சங்கத்தினுடைய தோற்றம், அதன் இன்றுவரையிலான வளர்ச்சி, சாதனைகள் போன்றவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் கூட்டுறவாளர்கள், நலன் விரும்பிகள், கிராம மக்கள் ஆகியோர் அறிந்து கொள்ளவும், அடுத்த எமது பரம்பரையினர் இச்சங்கத்தின் நோக்கத்தையும், அதனை அடையும் வழிகளையும், தெளிவாகத் தெரிந்து கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவும் எனவும் நம்புகின்றோம். எனவே இவ் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா மலரில் சங்கத்தின் கடந்தகால நிகழ்வுகளை, நடவடிக்கைகளைத் தொகுத்து வெளிக்கொணர்வது, வரலாற்றுப் பதிவுகளை ஆவணப்படுத்தும் நோக்கமாகவே கருதப்படுகின்றது.

சென்ற 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில், வலிகாமப் பிரதேசத்தில் இயங்குகின்ற சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளால் சங்க அங்கத்தவர்கள் அடையும் நன்மைகள் பற்றி அறிந்து கொண்ட நான், சாவகச்சேரி டச் வீதியில் வசிக்கும் சிலருடன் கலந்தாலோசித்ததன் பயனாக, அப்போதைய J/300 சாவகச்சேரி, டச்வீதி அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய மண்டபத்தில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், 24.10.1992 இல் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது.

இச்சங்கத்தின் ஆரம்பகாலத் தலைவராக திரு. இராஜகுலசிங்கம் அவர்களும், செயலாளராக திரு. மகாலிங்கம் விவேகானந்தன் அவர்களும், பொருளாளராக திரு. சிவலிங்கம் ரவீந்திரநாதன் அவர்களும், தெரிவு செய்யப்பட்டு 25 உறுப்பினர்களுடன் திருகோணமலை மாகாணசபையில் கூட்டுறவுப் பிரிவின் கீழ் 07.09.1993 இல் பதிவு செய்து J/2147 என்ற இலக்கமும் பெறப்பட்டது.

இச்சங்கத்திற்கு அடித்தளமிட்டு ஆலோசனை பல வழங்கி ஊக்கமளித்து வழிகாட்டிய பெருமை, ஆரம்பகாலத் தலைவராகிய அமரர். இ.இராஜகுலசிங்கம் அவர்களையே சாரும். இந்நேரத்தில் அவர்களை நினைவு கூர்வது சாலப் பொருத்தமானதொன்றாகும். எமது சங்கம் தனது சொந்தக் காலில் நிற்பதற்கு அமரரின் ஆலோசனையே முக்கிய காரணமாகும்.

சென்ற 1994ம் ஆண்டில் 2000/= வீதம் 06 அங்கத்தவர்களுக்கு கடன் வழங்க ஆரம்பித்து பின்னர் 5000/=, 10000/=, 15000/=, 20000/=, 25000/=, 30000/=, 40000/=, 50000/= ரூபாவென அதிகரிக்கப்பட்டு சென்ற 2011 ஆம் ஆண்டிலிருந்து

# தலைவர்கள்



அமரர்.
இ.இராஜகுலசிங்கம்



சி.ரவீந்திரநாதன்



ச.உருத்திராதேவி



பொ.சண்முகநாதன்



வை.பரிமளம்



சூ.நந்தாயினி



ப.ஸ்ரீகாந்தரூபி



சி.நந்தினி



ம.விவேகானந்தன்

# செயலாளர்கள்



ம.விவேகானந்தன்



வை.பரிமளம்



சு.கயலினி



அ.ஸ்ரீதுஷாந்தி



து.சுஜீத்தா



வி.பிரதீபா



க.துஷ்யந்தினி



இ.லலித்தாராணி

# பொருளாளர்கள்



சி.ரவீந்திரநாதன்



க.இரத்தினசோதி



கீ.மகேஸ்வரியம்மா



வி.விமலாம்பிகை



ம.விவேகானந்தன்



ப.ஸ்ரீகாந்தரூபி



சி.நந்தினி



அ.ஸ்ரீதுஷாந்தி

100,000/= ரூபாவினைக் கடனாக வழங்கி, தற்போது 1,50,000/= ரூபாவினைத் தனது சங்க அங்கத்தவர்களுக்குக் கடனாக வழங்கி தனது அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றமையானது இச்சங்கத்தின் முதலாவது சாதனையாகும்.

இச்சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டங்களுக்கு பிறபகல் 4.00 மணிக்கு முன்னதாக ஒழுங்காக வருகைதரும் அங்கத்தவர்களுக்கு 04 மாதாத்திற்கொருமுறை 150 ரூபாவில் இருந்து 250 ரூபா பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டு வந்தவேளை, சென்ற 2011ஆம் ஆண்டிலிருந்து சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டங்களுக்கு ஒழுங்காகச் சமூகமளிக்கும் நிர்வாக உறுப்பினர்களுக்கும் வருட முடிவில் ரூபா 500 பெறுமதியான பரிசில்களை வழங்கி வருவதால் அங்கத்தவர்கள் அனைவரும் பிற்பகல் 4.00 மணிக்கு முன்னரே கூட்ட மண்டபத்திற்குச் சமூகமளித்து, மாதாந்த நிர்வாக, பொதுக்கூட்டங்கள் யாவும் தேவாரத்துடன் சரியாக 4.00 மணிக்கு சிரமமின்றி நடாத்தப்படுவதானது சங்கத்தின் 2 ஆவது சாதனையாகும்.

அத்துடன் எமது சங்க அங்கத்தவர்கள் வருடாந்தம் சிரமதானப் பணிகளிலும், ஆன்மிகப் பணிகளிலும் ஈடுபடுவது விசேட அம்சமாகும்.

கடனை மட்டும் வழங்குவதோடு நின்றுவிடாது, தனது சங்க அங்கத்தவர்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருளாக இருக்கும் தையல் இயந்திரக்கடன், துவிச்சக்கரவண்டிக்கடன் போன்றவற்றை வழங்குவதற்காகத் தீர்மானித்து, சென்ற 2010 ஆம் ஆண்டில் சங்கத்தின் 22 ஆவது அங்கத்தவர்களுக்கு 22 தையல் இயந்திரம் வழங்கியது போல், சென்ற 2011ஆம் ஆண்டிலும் 16 அங்கத்தவர்களுக்கு 16 துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் அலுமாரிக்கடன் மூலம் 06 அங்கத்தவர்களுக்கு இன்று வரை 06 அலுமாரிகளும், எரிவாயுக்கொள்கலனும், எரிவாயு அடுப்பும், பிளாஸ்ரிக் இருக்கைக் கதிரைக்கடன், கிறைண்டர் கடன், மின்சாரக் கேற்றில் கடன், டிஸ் அன்ரனா கடன் என்பனவும் வழங்கப்பட்டு வருவது சங்கத்தின் மூன்றாவது சாதனை ஆகும்.

இதே நேரம் ஒரே தடவையில் மூன்று மாணவர்கள் ஆடும் பெரிய ஊஞ்சல், எமது சங்கத்தால் செய்யப்பட்டு சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கையில் இயங்கும் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டதும், சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5 ஆம் ஆண்டுப் புலமைபரிசில் பரீட்சையிலும், மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையிலும், கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையிலும் சித்தியெய்தி பல்கலைக்கழகம் புகும் மாணவ மாணவிகளுக்கு ஊக்குவிப்பு அன்பளிப்பாக 1000/=, 1500/= வழங்கிக் கௌரவிப்பதும் மற்றும் வருடா வருடம் எமது கிராம அலுவலர் பிரிவில் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு 155/= வழங்கி கௌரவிப்பதும் சங்கத்தின் நான்காவது சாதனையாகும்.

பழநி ஆண்டவரின் பெயரான "ஸ்ரீ பழநி" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம், அவரின் ஆசியாலும், நிர்வாகிகளின் சீரிய உழைப்பினாலும், அங்கத்தவர்களின் பூரண ஒத்துழைப்பாலும், இன்று யாழ் மாவட்டத்திலுள்ள சங்கங்களில் முதன்மையான சங்கமாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றது. ஏனைய சங்கங்களுக்கும் முன்னுதாரணமாகவும் வழிகாட்டி ஆகவும் விளங்கி வருகின்றது. இப்பாரிய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காலத்திற்குக்காலம் நிர்வாகிகளாக இருந்து கடினமாக உழைத்த பல தலைவர்களையும், செயலாளர்களையும், பொருளாளர்களையும், செயற்குழு உறுப்பினர்களின் அவர்தம் அர்ப்பணிப்பான சேவைகளையும் நாம் அனைவரும் மறக்கலாகாது. சென்ற இருபதாம் ஆண்டு நிறைவு விழாவில் முதன் முறையாக சற்று வித்தியாசமான முறையில் ஒரு படி முன்னேறி, பிறந்த நாட்டிற்கும் அல்லது கிராமத்தின் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும், மக்களுக்கும் சேவையாற்றுவோரைக் கௌரவித்தல் மூலம் புதிய சமூக சேவையாளர்களை ஊக்குவிப்பதும் வளர்ப்பதும் எமது இலட்சியமாகும். அந்த வகையில் சென்றமுறை நாம் ஐவரைக் கௌரவித்திருக்கிறோம். என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இதன் பிரகாரம் கீழ்வரும் சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

* டாக்டர்.க.அம்பிகைபாகன் (ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி)
* திருமிகு.க.சண்முகலிங்கம் (மக்கள் வங்கிமுகாமையாளர், சாவகச்சேரி)
* திருமிகு.ப.நடராசா (தவிசாளர், மத்தியஸ்த சபை சாவகச்சேரி)
* திருமிகு.த.நாகேஸ்வரன் (தென்மராட்சி இலக்கிய அணித்தலைவர்)
* டாக்டர்.சு.சி.அருளானந்தம் (சர்வதேச லயன்ஸ் பிரதி மாவட்ட செயலாளர்)

எமது சங்க அனைத்து அங்கத்தவர்களும் சிறப்பாக ஒத்துழைத்து இப்படியான புதிய பல வேலைத்திட்டங்களைச் செயற்படுத்ததினால் எமது சங்கம் இன்னும் மேலோங்கிய நிலைக்குச் செல்லும் என்பதில் சந்தேகம் இல்லை.

எமது சங்கத்தில் 55 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர். சென்ற 2017ஆம் ஆண்டு தைமாத வருடாந்த பொதுக் கூட்டத்தில், இவ்வருட இறுதியில் 25ஆம் ஆண்டு நிறைவினை விழாவாகக் கொண்டாட வேண்டும் எனவும் ஆண்டு மலர் வெளியிட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. அதில் அனைத்து அங்கத்தவர்களினது புகைப்படங்களுடனான ஆக்கங்கள், வாழ்த்துரைகள் இடம்பெற வேண்டுமென அங்கத்தவர்களுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து 25ஆம் ஆண்டு நிறைவினை வெள்ளி விழாவாகக் கொண்டாட வேண்டுமெனும் தீர்மானம், ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்திற்குச் செயல்வடிவம் கொடுப்பதில் பலரது ஒத்தழைப்புக்களும் மிகையாகவே கிடைக்கப் பெற்றன. இயன்றவரை இம்மலர் அதன் நறுமணம் குறையாதவாறு எம்மால் வெளியிடப்பட்ட போதும் இம்மலரின் இதழ்களில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அவற்றினை பொறுமையுடன் மன்னித்து இம்மலரின்

செழுமையைப் பேணிப்பாதுகாக்குமாறு அன்பு உள்ளங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எமது சங்கத்தின் வேலைத்திட்டங்களை விஸ்தரிப்புச் செய்வதற்காகவும் எமது அங்கத்துவத்தை அதிகரிப்பதற்காகவும், எமது சங்கத்தின் நடைமுறை யாப்பு விதியில் எமது சங்கத்தின் எல்லைகளை சங்கத்தானை, கோயிற்குடியிருப்பு, நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி வடக்கு கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளோம். ஆதலால் இச்சங்கத்தில் அங்கத்துவம் பெற விரும்புகின்றவர்கள் சங்கத்தின் செயலாளருடன் தொடர்புகளை ஏற்படுத்தி அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

பொதுமக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த, தினந்தோறும் "வலம்புரி" பத்திரிகையை அகிலாண்டம் சனசமூக நிலையத்துக்கு வழங்கி வருகின்றது. எமது சங்கமானது யாழ் மாவட்ட கூட்டுறவு சபையில் அங்கத்தவம் பெற்றதை அடுத்து சென்ற 05.12.2015ம் ஆண்டிலிருந்து எமது சங்க உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்து "கூட்டுறவுப் பெரியார்" அமரர் வீரசிங்கம் அவர்களின் 51ஆவது நினைவுதினத்திலிருந்து அவரின் கூட்டுறவுச் சேவையைக் கௌரவித்து பாராட்டுப் பத்திரம் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும்.

இச்சங்கமானது மேலும் பல வகையான உள்ளத்திட்டங்களைத் தீட்டி தான் சார்ந்த மக்களுக்குச் சிறப்பான சேவை செய்ய வேண்டும் என்பதுவும், அத்துடன் வருங்கால சந்ததியினரின் பொருளாதார சமூக, கலை கலாசார அபிவிருத்திக்கும், உயர்ச்சிக்கும் 25ஆவது வெள்ளிவிழாக்காணும் இச்சங்கமானது தெடர்ந்து பல விழாக்களைக் கண்டு சிறப்பாக மேலும் மேம்படுத்த எனது சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு இம்மலர் சிறப்புற ஸ்ரீ பழநி ஆண்டவரின் பாதாரவிந்தங்களை வேண்டி நிற்கின்றேன்.

**ம.விவேகானந்தன்.**
**இல.39, டச்வீதி, சாவகச்சேரி.**

## கூட்டுறவு



"உலகத்தில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றமெல்லாம் கூட்டுறவின் அடிப்படையில் தோன்றியனவாகும். தோல்விகள் எல்லாம் வாழ்க்கையையும் நடவடிக்கையையும் உண்டாக்கும் பொருட்களிடையே கூட்டுறவு காணப்படாததால் நேர்ந்தவைகளாகும்" என்றார் - எஸ்.கே.டே. "கூட்டுறவு இயக்கம் மிக முக்கியத்துவம் ஆகிவிட்டதை எல்லோரும் புரிந்து கொண்டதாகச் சொல்வதற்கில்லை" என்றார் மாமேதை லெனின்.

கூட்டுறவு மக்கள் இயக்கமாக விளங்க வேண்டும். கூட்டுறவு அமைப்புகளில் அரசியல் கட்சிகள் தலையீடும் அரசின் அதிகாரங்களும் ஊடுருவுதல் கூடாது, கூடவே கூடாது. இதனால் அரசின் தொடர்போ மேற்பார்வையோ தணிக்கையோ கூடாது என்பதல்ல. அரசின் அணுகுமுறைகள் முடியரசின் அடிப்படையான குடி மக்களின் நல்லிணக்க வாழ்க்கைக்கும் கூட்டுறவுப் பொருளாதார வளர்ச்சித் துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் பயிற்றுவித்து வழிகாட்டக் கூடியதாக கூட்டுறவைப் பொறுத்த வரையில் அமைய வேண்டும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகக் குழுவைக் கலைத்தல் - தனி அலுவலர் நியமித்தல் போன்றவற்றை செய்யக் கூடாது இங்ஙனம் செய்வது மனித உரிமை அடிப்படையிலும் அறநெறி அடிப்படையிலும் முற்றிலும் தவறானது.

ஏனெனில் கூட்டுறவில் அதன் உறுப்பினர்கள் தங்களுடைய நிதி ஆதாரங்களைப் பங்குகளாக இட்டு வைத்துள்ளார்கள். அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியை அந்தக் கூட்டுறவு அமைப்பு உறுதி செய்துள்ளது. இந் நிலையில் கூட்டுறவு அங்கத்தினர்களை - கூட்டுறவு நிர்வாகிகளை விலக்குவது மரபல்ல.

மக்களும் கூட்டுறவைத் தங்களுடையதாகவும் பொது நலத்திற்கு உரியதாகவும் கொண்டு ஒத்திசைந்து வாழ்தல் வேண்டும். கூட்டுறவில் தனிநலத்திற்கும் பொது நலத்திற்கும் இடையே மோதல் ஏற்படும் போது பொது நலத்திற்கே முதன்மை இடம் வழங்கப் பெறுதல் வேண்டும். ஏனெனில் பொதுநலத்தில் தனிமனித நலம் அடங்கும்.

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்"
(திருக்குறள்-214)

## பெறுதற்கரிய பாரம்பரிய அரிசிகளும் அதன் பயன்களும்

1. மாப்பிளை சம்பா:

உடலை பலப்படுத்தும் மாமருந்து. திருமணத்திற்குத் தயாராகும் மணமகன்கள் தொடர்ச்சியாக 41 நாட்கள் இதன் நீராகாரத்தை உண்டு வந்தால் உடல் பலம் அதிகரிக்கும்.

2. கவுணி அரிசி:

புது மாப்பிள்ளைக்கான விருந்துணவு அரிசி. இதன் கஞ்சி குடித்தால் குதிக்கால் வலி நீங்கும்.

3 சிவப்புக் கவுணி அரிசி:

புது மணத் தம்பதியர் உண்ண வேண்டிய அரிசி. இது ஒரு பலகார அரிசி. இட்லி, அப்பம், பணியாரம் செய்ய ஏதுவானது. குழந்தைகளுக்கு நோயெதிர்ப்பு சக்தி தரும். கருவில் குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் உருவாகும்.

4. சேலம் சன்னா:

கர்ப்பகாலத்தில் உண்ண வேண்டிய அரிசி. குழந்தைப்பேறு நன்முறையில் நடக்கும். களைப்பு இல்லாமல் வேலை செய்ய உதவும். இது நாய் கடி விசத்தை முறிக்கும்.

5. பூங்காற்று அரிசி:

மகப்பேறு காலங்களில் உண்ண வேண்டிய அரிசி. தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்க வல்லது.

6. கட்ட சம்பா அரிசி:

நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. வலிமை பெற உதவுகிறது.

7. சிங்கினி கார் அரிசி:

எல்லா விதமான நோயாளிகளும் உண்ண ஏதுவான அரிசி வகை. உடல் சீக்கிரம் நலம் பெற உதவும்.

8. இலுப்பைபூச் சம்பா:

சர்க்கரை நோயாளர்களுக்கான அரிசி. மூட்டுவலி பக்கவாதம் போன்ற நோய்கான மருந்து. நரம்பு சம்பந்தமான பிரச்சினைகளுக்குச் சிறந்தது.

9. காட்டுயானம் அரிசி:

இந்த அரிசியில் கஞ்சி வைத்து கறிவேப்பிலை போட்டு மூடி வைத்து மறுநாள் காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இப்படித் தொடர்சியாகச் செய்தால் புற்றுநோயால் ஏற்படும் புண்கள் ஆறும். இதுவே புற்று நோய்க்கு மருந்தாக இருக்க வேண்டுமென ஆய்வுகளும் நடைபெறுகின்றன.

10. சூரகுருவை அரிசி:

நோயெதிர்ப்புச் சக்தி தரும்.

11. பனங்காட்டு குடவாழை அரிசி:

தொழிலாளர்களின் தோழன் இந்த அரிசி. அந்த அளவிற்கு நோய் எதிர்ப்பும் உடல் வலிமை பெறவும் இது சிறந்தது.

12. கருடன் சம்பா:

சாப்பாடு மற்றும் பலகாரம் செய்ய உதவும் அரிசி. நோய் எதிரிப்பு சக்தி மிக்கது.

13. கருங்குறுவை அரிசி:

இதன் நெல் கருநிறம். அரிசி செந்நிறம். இது ஒரு மாமருந்து. இந்த அரிசியுடன் மூலிகை மருந்து சேர்த்தால் லேகியம் செய்ய முடியும். அது யானைக் கால் நோய்க்கான மருந்து. குஷ்டத்திற்கும் விசக்கடிக்குமான மருந்தாகவும் பயன்படுத்தலாம். உடலை வலுவாக்கும் காயகல்ப சக்தி கொண்டது. இந்த அரிசி ஒருபங்கும் தண்ணீர் மூன்று பங்கும் சேர்த்து மண் பானையில் ஊறவைத்து ஆறுமாதம் கழித்து எடுத்தால் பால் போல் இருக்கும். இதற்கு 'அன்ன காடி' என்று பெயர்.

இது காலராவிற்கான மருந்து. இது கிரியா ஊக்கியாக உள்ளது.

14 கார் அரிசி:

சர்க்கரை நோயக்கும் வாதம் சம்பந்தமான நோய்க்கும் கரப்பான் களுக்கும் மருந்தாகும்.

15. தங்கச் சம்பா:

இந்த அரிசியைத் தொடர்ந்து உணவிலும் பலகாரத்திலும் சேர்த்து வந்தால் முகம் பொலிவுடன் ஜொலிக்கும். நோய் எதிர்ப்புத் திறனும் கொடுக்கும்.

16. தூயமல்லி அரிசி:

மேலே குறிப்பிட்ட எல்லா அரிசிகளும் சிவப்பரிசி கட்ட சம்பா தவிர்த்து தூய மல்லி அரிசியானது இன்னும் மல்லிகை போல் பளபளவென இருக்கக் கூடியது. மக்கள் எதிர்பார்க்கும் எல்லாக் குணங்களும் கொண்ட ஒரு அரிசி. தெவிட்டாத நோயெதிர்ப்பு சக்தி தரும் அரிசி.

இந்தப் பாரம்பரிய அரிசி எதுவும் உரமோ, பூச்சி கொல்லி மருந்து கூடவோ இல்லாமலேயே வளரக் கூடியது. தானே எதிர்ப்புத் திறனுடன் வளர்வதால் அதை உண்பவர்களுக்கும் அதே எதிர்ப்பு சக்தியை கொடுக்கும் வல்லமை கொண்டது.


**பாரம்பரிய அரிசி உண்போம்**
**ஆரோக்கியத்தைப் பேணி**
**ஆயுளை அதிகரிப்போம்.**

தொகுப்பாளர் - ரா. பொன்னம்பலம் அவர்களின் நெல் அதிகாரம் என்ற புத்தகத்தில் இருந்து தொகுக்கப்பட்டது.

தொகுப்பு
திருமதி.P. சுரேக்கா



## "இளைஞர்கள் பால் உள்ள கரிசனையே நாட்டிற்குக் கீர்த்தியைத் தரும்"



ஒரு நாட்டின் வலிமைக்குக் கரங்கொடுப்பவர்கள் இளைஞர்களே ஆவர். படித்த வாலிபர்களும் படிக்கும் வாலிபர்களும் பட்டதாரி வாலிபர்களும் இடைவிலகிய மாணவர்களும் படிப்பைக் கைவிட்ட மாணர்களும் படிக்காத வாலிபர்களும் என உலகிலும் சரி நம்நாட்டிலும் சரி இலட்சோப இலட்சம் இளைஞர்கள் வேலைக்காக அலைகின்ற பரிதாபம் தொடர்கிறது. அதீத கற்பனையோடு தம் இளம்வாழ்வினை விரயம் செய்தவர்கள், வயதுக்கு வந்துவிட்ட நிலையில் தம்மை யாருமே கவனிக்காமல் கௌரவம் இழந்து போய் விட்டோமே! அப்பாவும் கதைப்பதில்லை அம்மாவும் முன்னைமாதிரி இல்லை. எனக்கும் ஒரு வேலையும் இல்லை! நான் என்ன செய்வேன்? ஆண்டவனும் கைவிட்டு விட்டானே! அன்பு வைத்தவர்களும் என்னை ஒதுக்கி வைத்து விட்டார்களே! என்று தம்மைத் தாமே வருத்தி நொந்து கொள்கின்ற நிலையில் விரக்தியடைகிறார்கள். இது ஒரு பாரிய பிரச்சினையாக நாட்டில் உருவெடுத்து வருகிறது என்பதனை யாவரும் அறியாமலும் இல்லை, உணராமலும் இல்லை. இதற்குப் பரிகாரம் இன்னும் சரியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது கவலை தரும் செய்தியாகும்.

ஆண்டு தோறும் சரியாக 150 பேர் தற்கொலை செய்து கொள்ளும் பேரவலம் இந்தநாட்டில் தொடர்கிறது. இ∴து ஒரு நாட்டிற்கு ஆரோக்கியமானதல்ல. தற்கொலைக்கு முக்கிய காரணம் விரக்தியேயாகும். விரக்தி எப்படி வருகிறது?

### 'விரக்தி எதனால்'?

01) வேலையின்மை
02) திருப்தியின்மை
03) பரீட்சையில் தோல்வி
04) அவமானம்
05) வறுமை
06) மானபங்கம்
07) அடக்குமுறை
08) ஒதுக்கப்படுதல்
09) பந்தயத்தில் தோல்வி
10) பயமுறுத்தல்
11) நோயின் தாக்கம்
12) சீதனக்கொடுமை
13) பாலியல் தொந்தரவு
14) ஆண்மையின்மை
15) குடும்பப்பிரிவு
16) சுதந்திரம் கிடைக்காமை
17) விவசாய வறட்சி
18) கடன் தொல்லை
19) அரசியல் தோல்வி
20) தொழில் நட்டம்
21) சந்தேகம்
22) மூடநம்பிக்கை
23) காதலில் தோல்வி
24) கள்ளத் தொடர்பு

மேற்போந்த காரணங்களே ஒருவித தவறான முடிவுக்கு இட்டுச்

செல்கிறன. யான் பலரைக் காப்பாற்றி உள்ளேன் அதற்காக விழாவெடுக்க முடியுமா? விளம்பரப்படுத்த முடியுமா?

## பொறுப்புயார்?

போருக்குப் பின்னர் வடக்கில் மட்டும் தற்கொலை செய்து கொண்டவர்களின் தொகை பேரதிர்ச்சி தருகிறது.

2009 - 169
2010 - 137
2011 - 176
2012 - 180
2013 - 160
2014 - 168
2015 - 158
2016 - 169
2017. 08. 30 வரை - 77

சராசரியாக வருடம் 150 பேர் தம்முயிரை வலிந்து போக்கியுள்ளனர். மதங்கள் பல இருந்தும் தலைவர்கள் பல இருந்தும் ஆலயங்கள் பல இருந்தும் பாட சாலைகள் பல இருந்தும் புத்திஜீவிகள் பலர் இருந்தும் பல்கலை நிறுவனங்கள் இருந்தும் அபிஷேகங்கள், உற்சவங்கள் நடைபெற்றும் உளவியல் அறிவு இருந்தும் தேவார திருமுறை வேதபாராயணம் நிகழ்ந்தும் கோபுரங்கள் வானளாவ உயர்ந்தும் சனநாயகம் இருந்தும் எல்லாமே ஒழுங்காகச் சாத்திரப் பிரகாரம் இயங்கியும் 2009 இல் இருந்து 1394 பேர்களின் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இதற்கு அவரிவர் என்று குற்றம் சாட்டுவது ஏற்புடையதல்ல. நாமும் பொறுப்பாளிகளே! இதைவிட விபத்துக்களில் வடமாகாணம் தன்னை இனங்காட்டிய வண்ணமுள்ளது.

சமூக மட்டத்தில் இளைஞர் களுக்குப் போதியளவு தலைமை த்துவம் வழங்கப்படல் வேண்டும். கதிரைகள் விட்டாலும் கட்டிப் பிடிப்பவர்கள் விட்டபாடில்லை சாகும் வரை இருக்கவே வரம் கேட்கிறார்கள்.

## முன்மாதிரி

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம், இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம், தெல்லிப்பளை இந்து இளைஞர் மன்றம் இன்னும் பல சங்கங்களும் மன்றங்களும் ஆளுமை யோடு ஆற்றிவருகின்ற பணிகள் வரலாறாகின்றன. இவற்றில் விசேடம் என்னவென்றால் ஒவ்வொரு இளைஞர் களையும் ஆளுமையான தலைமைத்து வத்திற்கு வழிசமைத்து சமூகத்திற்கு வழங்குமாறு ஆவன புரிதலாகும். இவர்களிடம் நாட்டையும் கொடுக்கலாம். வீட்டையும் கொடுக்கலாம். ஆலயத் தையும் கொடுக்கலாம். புலிகள் அனைவருமே இளைஞர்கள். ஆனால் நாட்டை ஆளவில்லையா? கம்பன் கழத்தில் ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் புதுப்புது தலைமைகள் பிறக்கிறார்கள். இளைஞர் களே பெரும்பாலானவர்கள். தூக்குக் காவடி எடுப்பவர்கள் யாவரும் சாதனையாளரான இளைஞர்களேயாவர். மற்றும் பெரும்பாலான தொழில்களில் இளைஞர்களே நிரம்பியிருக்கும் நிலையில், எதிர்காலம் அவர்களது தேவைகளுக்கும் ஜீவனோபாயத்திற்கும் ஏற்ற வாய்ப்பு களும் வசதிகளும் இல்லாத பட்சத்தில் குழப்பங்களும் குளப்படிகளும் ஏற்படுவது தவிர்க்க முடியாதவையே ஆகும்.

## திட்டமில்லை

ஒவ்வொரு வருடமும் பல்கலைக் கழகத்திற்குக் கிட்டத்தட்ட முப்பதி னாயிரம் மாணவர்கள் உள்வாங்கப் பட்டபோதும் செல்லமுடியாத ஏனைய மாணவர்கள் மிகப் பெருந்தொகை யினராக இருப்பதனால் அவர்களுக்கான ஒரு கொள்கை வகுப்புக்கள் இது வரை திருப்தி கொண்டதாக அமையவில்லை. சுமார் இரண்டு இலட்சம் மாணவர் களுக்கு முறையான தொழில் வழி காட்டும் உயர் பீடங்கள் தத்தம் பிரதேச மூலவளங்களைப் பயன்படுத்தி வெற்றிதரும் வேலைவாய்புக்களை உருவாக்க ஆவன புரியவேண்டும்.

கடல்வளம், கனிவளம், நிலவளம், பயிர்வளம், பணவளம், பனைவளம் போன்றவற்றிலும் ஏற்கனவே வளமுடைய காங்கேசன், பரந்தன், ஆனையிறவு, ஒட்டுசுட்டான் போன்றவற்றையும் விருத்தி செய்ய அரசு முன்வரும் போதுதான் வடமாகாணம் கீர்த்திபெறும். ஏனைய மாகாணங்களில் ஆறுகள் நிலத்திற்கு உயிரும் உயர்வும் கொடுப்பதனால் ஏதோ வாழ்வும் தொழிலும் இளைஞர் களுக்கு வரமா கிறது. வடமாகாணம் சுயகௌரவம் பார்ப்ப தனால் அரசையே நம்பியிருக் கின்றோம். ஆதலால் இன்னும் சிறிது காலங்கள் நகருமாயின் கட்டடங்களும் கோயில் களும் பாதைகளும் பாலங்களும் ஓய்வூதியர் களும் பட்டதாரிகளும் வேலையற்ற இளைஞர் களுமே நாட்டுக்குப் பாரமாக அமையப் போகின்றனர். நோய்களும் வறுமையும் மருத்துவ மனைகளும் அந்நியத் தலையீடுமே நம் நாட்டை ஆளச் சாத்தியமாகப் போகிறது. தூர நோக்குடையவர்கள் இன்னும் கண்விழிக்கவில்லையே! கீர்த்தி எப்படி?

**கலாபூஷணம்**
**கே. எஸ். சிவஞானராஜா**
**ஓய்வுநிலை உபஅதிபர்,**
**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**



# மாறிவரும் காலநிலையால் மனித சமூகம் எதிர் கொள்கின்ற சாதக பாதக விளைவுகள்

மாற்றம் ஒன்றே மனித வாழ்வில் நிரந்தரம் என்பது போல மாறி வரும் உலகிற்கு மனிதனை தயார் செய்ய வேண்டிய பொறுப்பு மனிதனுக்கே உரிய கடமையும் தேவையுமாகும். (பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பாகும்.)

இவ்வாறான மாற்றங்கள் மனிதனையும் மாற்றும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இக் கருத்து நிலை மட்டுமே மாறிவரும் கால நிலையால் மனித சமூகம் எதிர் கொள்ளும் சாதகமான நிலையாகக் கொள்ள முடியும்.

இவற்றைத் தவிர மாறிவரும் காலநிலையால் மனித சமூகம் எதிர் கொள்கின்ற பாதகமான நிலைகள் கூடுதலாகவே அவதானிக்க முடிகின்றது.

காலநிலை மாறுவதற்கு முக்கிய காரணியாக அமைவது இயற்கையினுடைய சமநிலையை பேணாமையே ஆகும். காடழிப்பு, புதிய மரங்களை நாட்டாமை, சனத்தொகைப் பெருக்கம், பொலித்தீன் பாவனை, நகரமயமாக்கல், தொழிற்சாலைக் கழிவுகள், மோட்டார் வாகனக் கழிவுகள், அணு ஆயுதம் பூமியை துளையிடுதல், செயற்கை உரப்பாவனை, கிருமிநாசினி இது தவிர அன்று இயற்கையை வணங்கிய மனிதன் இன்று பயம் பக்தி இன்றி ஆன்மீகத் தேடலின்றி அமைதியற்று தெய்வக் குற்றத்திற்கு ஆளாகும் நிலையும் உணர முடிகின்றது.

மதச்சார்பற்ற கருத்தமைவோடு கருத்துக்களை வழங்கிய தெய்வப் புலவரும் பொய்யா மொழிப்புலவர் என்றழைக்கப்படுபவரும் ஆன திரு வள்ளுவர் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" எனக் குறிப்பிட்ட விடயத்தில் இருந்து பார்த்தால் பூமித் தாயை பதப்படுத்தி அதில் இருந்து உணவை உற்பத்தி செய்யும் மனிதர்கள் மட்டுமே இவ்வுலகில் வாழ்பவர்களாக உண்மையான வாழ்க்கையை உணர் பவர்களாக கருதுமிடத்து மாற்று தொழில் புரியும் அனைவரும் இவர் களின் பின்னே கூப்பாடு போட்டு கும்பிட்டுச் செல்ல வேண்டும் என்பதாக அமைந்துள்ளது.

இன்றைய மாறிவரும் உலகில் விவசாயம் செய்யும் தொழிலாளர் களுக்குரிய போதிய வருமானம் வருவதும் இல்லை வழங்கப்படுவது மில்லை. சிலகாலத்தில் விவசாயப் பென்சன் வழங்குவதும் நிறுத்துவதும் இவையும் நிலையற்றதாக அமைகின்றது வாழ்வும் நிம்மதியற்றே இருக்கிறது.

உரிய காலத்தில் மழை வரவில்லை என்றால் கொடும்பாவி கட்டி இழுத்தல் இறைவணக்கம் செய்தல் யாகம் வளர்த்தல் போன்ற பாரம்பரிய அமானுஸ்ய நம்பிக்கை முறைகள் அமைந்தது. "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பதில் இருந்து நாம் விளங்குவது நல்ல மனிதர்கள் பண்டை

யவர்கள் இவ்வுலகில் ஒருவர் இருந்தால் அவருக்காக மழை பெய்யுமாம் என்பர். நெல் வயலுக்காக இறைக்கின்ற நீரானது வாய்க்கால் வழி ஓடும் நிலையில் புல்லுக்கும் பிரயோசனமாக அமைகிறது என்பதையும் உணர்த்துவார் சான்றோர்கள். மேலும் கூறுபவர் உண்மையான களங்கமற்ற ஒரு பெண் கற்புடைய பெண் இன்று மழை வர வேண்டும் என்று சொன்னால் மழைவரும் என்பர். இவை நம்பிக்கை அடியொற்றியதும் கட்டுப்பாடு ஒழுக்கம ஆன்மீக நம்பிக்கை என்பவற்றை எடுத்தியம்புவதுமாகும். இங்கு கற்பு என்பது உடல் அளவில் நோக்கப்படுவது மட்டு மல்ல மனதளவிலும் பார்க்கப்படுகிறது. கண்ணகி மதுரையை எரித்த கதையில் இருந்தும் களங்கமற்ற உண்மையான மனநிலையில் உள்ளவர்கள் சொன்னால் அது நடக்கும் என்பதே வெளிப்படை ஆகும். "மனம் சுத்தமானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்று மேலும் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

தற்காலத்தில் ஆன்மீகம், பயம், பக்தி, கற்பு, நம்பிக்கை, இயற்கையை மதித்தல், விழுமியப் பண்புகள் போன்றவை அற்றுச் செல்வதும் காலநிலை மாற்றங்களுக்கு முக்கிய காரணிகளாக இருக்க முடியும்.

மனிதனுடைய உடல் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது என்பது இந்து மதக் கொள்கை. புவிச் சுழற்சி, புவியீர்ப்பு, சூரியஒளி என்பன சம நிலையில் இருக்க மனிதன் பூமாதேவி என்று பூமியை வணங்கினான். ஆதித்தியா என்று சூரியனை வணங்கினான். நன்றிக் கடனாக உழவர்கள் திருநாளாகக் கொண்டாடி புதிய நெல் எடுத்து புதிர் கொண்டு பொங்கல் செய்து தைப்பொங்கல் திருநாளென உழவர்களின் பண்டிகை அமைத்ததன் மூலம் இயற்கை வழிபாடு, விழுமியம், பயம், பக்தி, கூட்டுணர்வு, மனமகிழ்ச்சி, புத்துணச்சி என்பன ஒருங்கே காணப் படுகின்றன. இயற்கையை அழித்தால் மனிதன் இயற்கையால் அழிவான் என்பது விதி. சுனாமி, சூறாவளி புவி அதிர்வு, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு என்பன இயற்கையின் சீற்றத்தால் உணரப்படும் அல்லது உணர்த்தப்படும் அழிவுகளாக உள்ளன. இவற்றுக் கெல்லாம் மனிதனே காரணமாகின்றான்.

மனிதன் என்பவன் காலை எழுந்து உடலை நீரால் சுத்தம் செய்வதில் தவறுமிடத்து உடல் அசுத்தமாகி உஷ்ணம் தலைக்கேறி மனம் அசுத்தமாகிறது. இதனால் உறவு முறைகள் மாசடைகிறது. இதன் தொடர்ச்சி சமூகம் நாடு உலகம் எனத் தொடர்ந்து சமநிலை அற்ற சிந்தனைகளையும் குணப்பாங்கினையும் அழிவுகளையும் ஏற்படுத்தி நிற்கின்றது

மனித இனத்திற்கு மிகவும் இன்றியமையாத வாயுவான பிராண வாயுவாகிய உயிர் வாயு என அழைக்கப்படும் ஒட்சிசன். மரத்தின் ஒளித்தொகுப்பில் இருந்து எமக்குக் கிடைக்கப் பெறுகின்றது. மனிதன் வெளியிடும் காபனீர் ஒட்சைட்டை மரமானது தனக்குள்ளே உள்வாங்கி இந்த உலகத்திற்குத் தேவையான ஒட்சிசனை வெளியிடும் நிலையில் உள்ளதோடு, காற்றில் கலந்துவரும் தூசி மண்டலங்களைத் தனது இலையில் கையால் தாய் போல் ஏந்தி சூழலைப் பாதுகாக்கிறது. அது மட்டுமல்லாது வெள்ளப்பெருக்கின் போதும் கூட மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துகிறது.

மண்ணரிப்பில் இருந்து மனித சமூகம் மீள வேண்டும் என்றால் முதலில் மனதளவில் இருந்து மீள வேண்டும். மனிதனுடைய அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உறையுள் எனப்படும் வீடு இருப்பிடம் மண் இருந்தால் மட்டுமே நிலைக்க முடியும். மனிதனுடைய மண்ணுக்கான மீட்புக்கான போராட்டங்கள் பல்வேறு கோணங்களில் பரிணமித்து நின்றாலும் முதலில் இயற்கையில் இருந்து இயல்பாக மீள வேண்டும். இந்த மண்ணில் பிறப்பெடுக்கும் பனை மரத்தைக் கொண்டு கடற்கரையில் திட்டமிட்டவாறு ஒரு வரிசையில் நடுகை செய்கின்ற போது அதுவும் ஒரு வகையில் இயற்கை அரணாக அமையும். மற்றும் சவுக்கு மரங்கள் நடுதல் என்பனவும் போதிய நன்மையினை எமக்குச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை மையமாக வைத்து தோண்டப்பட்ட கற்குவாறிகள் இன்றும் பாரிய கிடங்குகளாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. மற்றும் வேறு கட்டடத் தேவைகளுக்கு கடற்கரை மணல் எடுத்தல், முருங்கைக் கல் தோண்டுதல் போன்ற வேலைத் திட்டத்தின் மூலம் எமக்கு நாமே குழி தோண்டுகின்றோம் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

மான் வேட்டைக்கு வைத்த குழியில் அயல் வேட்டைக்காரன் மாட்டுவது போல் எமது நிலை இருக்கின்றது.

மாறி வரும் காலநிலைக்கு மன்னிக்க முடியாத குற்றம் புரியும் இந்த மனித சமூகத்தினர் தாம் மட்டும் வாழ்ந்தால் போதும் பிள்ளை குட்டி பேரப்பிள்ளை என்று சிறிதும் சிந்திக்காமல் பணத்தை மட்டும் சேமித்து வங்கியில் போட்டு விட்டால் போதும் என்று நினைக்கும் அளவிற்கு முட்டாள்களாக இருக்கின்றனர். இதனால் பண வீக்கம் ஏற்பட்டு பொருட்களின் விலை அதிகரித்து ஒரு மூட்டை காசிற்கு ஒரு தேங்காய் வேண்ட வேண்டிய நிலைக்கு எமது இனம் தள்ளப்பட்டாலும் சந்தேகப் படுவதற்கு இடமில்லை.

பாட்டி சொன்ன கதையில் இருந்து அவதானிப்போம். இந்தக் கரையில் இருந்து அந்தக் கரைக்கு ஆற்றைக் கடந்து போக வேண்டும் என்றால் படகோட்டியின் கையில் தான் பயணிப்பவர்களின் உயிர் தங்கியுள்ளது என்பது யாவரும் அறிந்த விடயம். எனவே ஒரு முற்றும் அறிந்த முதுபெரும் புலவர் ஒருவர் படகில் ஏறியிருந்தவாறே தான் ஒரு சிறந்த புலவன், படித்த மனிதன் என்பதை ஓட்டியிடம் உறுதிப் படுத்தி, கதை சொல்லிக் கொண்டு இருந்தார். ஓட்டியோ ஒன்றும் படிக்காத ஏழ்மைக் குடும்பத்தில் இருந்து வந்தவர். பிறப்பிலிருந்தே நீந்தி நீராடி நீரில் மிதக்கும் அனுபவம் கொண்ட ஓட்டியாக இருந்தார். ஆகவே அந்த ஓட்டியிடம் புலவர் நீர் என்ன படித்தீர்? ஒவ்வொரு பட்டத்தையும் கூறி படித்தீரா? படித்தீரா? என வினாவி நீர் கால்வாசியை, அரை வாசியை, முக்கால் வாசியை வாழ்க் கையில் இழந்துவிட்டீர் என விளக்கம் கொடுத்துக் கொண்டு இருந்தார். எல்லாவற்றிற்கும் பொறுமையாக இருந்த ஓட்டியாகிய வாலிபன் மிகவும் மரியா

தையாக ஐயா..? பெரியவரே நீங்கள் உங்கள் கைகளால் கொஞ்சத் தூரம் நீந்தத் தெரியுமா? படகில் ஓட்டை விழுந்து விட்டது, குதித்து நீந்தினால் தப்பிக்க முடியும் என்றதும் புலவர் தனக்கு நீந்தத் தெரியாது என்று ஓட்டியின் காலைப் பிடித்துக் கொண்டார். ஓட்டியோ ஐயா நீங்கள் வாழ்க்கையில் முழுவதும் இழக்க வேண்டியிருக்கும் என்றார். அப்போது புலவரின் தலைக் கனமும் குறைந்தது, ஓட்டியும் மன்னித்து அவரைத் தன்னுடைய ஒரு கையால் தாங்கியவாறு ஒரு கையால் நீந்தி கரைசேர்ந்து தானும் தப்பி பெரியவரையும் காப்பாற்ற முடிந்தது.

நிலையில்லா வாழ்வு நிலைக்க வேண்டுமென்றால் பிறந்த நாள் ஒன்றுக்கு ஒரு மரம் நடுவோம் என்ற மைந்த தாரக மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

உலகம் சமநிலை பெற வேண்டும். அவற்றில் உயிர்கள் நிலை பெற வேண்டும். நீத்தார் பெருமைகள் நாம் பேச வேண்டும். ஏன் அவர்கள் அன்று நட்ட மா, பலா, தேக்கு, வேம்பு, தென்னை, அரசு, ஆல் என ஒவ்வொன்றும் பாட்டன், பாட்டி, முப்பாட்டன், பூட்டி, அப்பப்பா, பெரியப்பா என அவர்களின் பெயரால் மரங்கள் இன்றும் உள்ளன. அவை தொடர்ந்தும் பேணும் வகையில் அமைதல் வேண்டும். அவர்களுக்கு நிறுவன ரீதியாக உதவிகள், ஒத்தாசைகள், பராட்டுக்கள் வழங்கி ஊக்குவிக்க வேண்டும் என்பது இயற்கை ஆர்வலர்களின் அவாவாக உள்ளது. காடழிப்பின் ஊடாகவும் சனத்தொகைப் பெருக்கம் காரணமாகவும் நகரமயமாக்கல் என இன்னோரன்ன காரணங்களால் வளியில் தேவையற்ற அளவிலான சமநிலையைக் குழப்பும் வகையில் வாயுக்களின் அதிகரிப்பு பூமியைக் கெந்தகமாக்குகிறது. புவி வெப்பமடைகிறது. புவியின் வெப்பம் தாங்க முடியாமல் பனிக்கட்டி உருகுகின்றது. பனிக்கட்டியின் உருகு நிலையால் கடல் மட்டம் அதிகரிக்கின்றது. கடல் மட்ட அதிகரிப்பு நில மட்டத்தை கடலுக்குள் காவு கொள்கிறது. இதன் வெளிப்பாடு கடல் அரிப்பு கடல் நீர குடிமனைகளில் புகுவதால் நன்னீர் உவர் நீராக மாறுதல் உறைவிடயங்களை விட்டு வெளியேறுதல் தொழில் செய்ய முடியாமை நிலையான வாழ்வை அனுபவிக்க முடியாமை மனதில் சந்தோசம் இல்லாமை, ஒற்றுமையின்மை, இருப்பிடங்களுக்கான போராட்டம், நீருக்கான போராட்டம் என தொடர் கதையாக உள்ளன. மூன்றாம் உலகப் போர் நீருக்காக இருக்கலாம் என ஆய்வுகள் கூறுகின்றன.

"மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா - கடல் பெரிது
மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்"

என்பது ஔவைப்பாட்டியின் மூதுரை. இவற்றில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயமாக தாழம் பூவின் மடல் பெரியது ஆனால் அதனை விட மகிழம்பூ சிறியது என்றாலும் அதற்கு மணம் அதிகம் கடல் நீர் மிகப் பெரிய பரபரப்பாக இருந்தாலும் அதன் நீர் நமக்கு பருகிட முடியாது. பயன்படாது. கடலின் அருகில் உள்ள மணலில் தோண்டிய ஊற்று நீர் பருகுவதற்கு சுவையாக இருக்கும். அதனால் தோற்ற

த்தில் சிறியவர் என்று எவரையும் இழிவாக எண்ணக்கூடாது.

என்றவாறு பொதுக் கருத்தை முன் வைக்கும் நிலையில் நாம் பெரிய கடலை வைத்துப் பெருமை பேச முடியாது. சிறிய அளவில் உள்ள தூய்மையான நீரைப் பாதுகாத்து பருக வேண்டும். சிறியவர்கள் எதைச் சொன்னாலும் நல்ல விடயம் சொன்னால் அதை ஏற்கும் மனநிலையில் இருத்தல் வேண்டும் என்னும் கருத்து நிலையினை நாம் இப்பாடல் அடிகள் மூலம் ஔவைப் பாட்டியின் மூதுரையாகக் கொள்ள முடியும்.

நடை உடை பாவனையில் நாகரிகம் காட்டும் மனிதன், குளிர்ப் பிரதேசத்தில் குளிர் உள்ளே போகாமல் கழுத்துப்பட்டி அணியும் நிலையில், வெப்பப் பிரதேசத்தில் சப்பாத்தும் கழுத்துப் பட்டியும் கட்டி இறுக்கி நாகரிகம் என்ற போர்வையில் உடல் உபாதைகள் மேலும் அதிகரிக்காமல் இன்றைய வெப்பநிலை மேலும் பொருத் தமற்றதாக அடிப்படை தேவைகளை பாதிக்கும் காரணியாக உள்ளது.

மாறிவரும் காலநிலைகளினால் மழை பொய்க்கும் காலத்தில் பயிரிடக் கூடிய குறுகிய கால நெல் இனம் கண்டுபிடித்து சிந்தனைப் புரட்சி என்பதில் மனநிறைவடையலாம். இருப் பினும் புதிய குறுகிய காலப் பயிர்களை பயிரிடுவதற்கு வேண்டிய உர வகைகள் கிருமிநாசினிகள் மென்மேலும் நிலத் தையும் உணவையும் பாதித்து உடலைப் பாதிக்கின்றது. மனிதனுடைய உணவு உடை உறையுள் என்ற அடிப்படைத் தேவைகள் எல்லாமே அடிபட்டுப் போகும் நிலையே காண முடிகின்றது.

உரத்தால் உருப்பெருத்த காய், கனிகள், மாஸ், மருந்துகள் கொண்ட கோழி இறைச்சிகளை உண்டும் சிறுவர்களின் கை கால்கள் கொழுத்து பெரிதாகத் தோன்றும். ஆனால் தட்டி விட்டால் உடையும் எலும்புகளையும் உடலை தூக்க முடியாத உள்ளமும் உணர்வும் காலும் என்பன, பெரும் பாரத்தை சமூகத்தின் சுமையினை மேலும் அதிகரிக்க செய்கின்றது.

முன்னொரு காலத்தில் வேலை தேடி அலையும் இளைஞர்கள் யுவதிகளிடம் படித்த பட்டம் பெற்ற உறுதிப்படுத்தப்பட்ட நற்சான்றிதழ்கள் காணப்படும். இப்போதுள்ள இளை ஞர்கள் யுவதிகளிடம் கட்டுக்கடங்காத மருத்துவ சான்றிதழ்களும் கொண்டு முதல் நியமனம் செய்கின்ற போதே வருத்தச் சான்றிதழ்கள் முன்வைத்து பல இடமாற்றம் பெறாமல் அதிகாரி களை இம்சை செய்யாமல் ஆரம்பத் திலேயே பொருத்தமான இடம் தருமாறு கோரும் அளவுக்கு துணிந்து விட்டார்கள். இவ்வாறான நிகழ்வுகள் எல்லாமே மாறிவரும் காலநிலையால் ஏற்பட்ட மாற்றங்களே எனக் கண்டறிய முடிகின்றது. புதுமைப் பெண் வேண்டும் என்ற பாரதியும் மாற்றம் வேண்டும் என்ற உளவியல் கல்விக் கொள்கைகளும் இயற்கையைக் காக்க தவறியே தள்ளி நிக்கிறன.

சூழலை மாசடையச் செய்வதில் பெரிதும் பங்காற்றுவது சனத்தொகைப் பெருக்கம். அதனால் நகரமயமாக்கல் தொடர்மாடிக் குடியிருப்புக்கள் இவற்றிற்கு வேண்டிய உணவுத் தேவை இங்கு பெறப்படும் கழிவுகள் இவர்களுக்கு தேவையான நீர் அதன் கழிவுகள் என பல்கிப் பெருகி அவற்றை முறையாக

அகற்ற வேண்டிய தேவையும் முன்வைத்த திட்டங்களும் மாறும் நிலையற்ற அரசும், சட்டங்களும் போதிய ஊதியம் வழங்கப்பாடாமை யினால் தொழிலாளர் சேவை செய்வதில் காட்டும் அதிருப்தியும், பொறுப்பற்ற தன்மையும், கடமையுணர்வற்ற தன்மையும் மேலோங்கி நிற்பதால் சாக்கடை நீர், தேங்கி தேவையற்ற வாசனையும் நுளம்பு அதிகரிப்பினால் காய்ச்சல், வாந்திபேதி, எனப் பல்றே நோய்கள் சமூகத்தில் தோற்றம் பெற்று யாரையும் யாரும் தேடமுடியாது தனித்தே வாழ்கின்ற தனிமை வாழ்வு தொடர் மன இறுக்கங் களைக் கொண்டு வந்து தற்கொலை, கொலை, உடற்சமநிலை குழம்பிய நிலையில் கற்பழிப்பு நிகழ்வுகள், ஓரினச் சேர்க்கை கலாசராரம் அதனால் பால் வினை நோய்கள் யாவும் இலவசமாக தோற்றம் பெறுகிறன. இவை யாவும் ஒரு தொடர் கதையாகத் தோற்றம் பெற்றுக் கொண்டே போகும். "சுத்தம் சுகம் தரும்" "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என அறிந்தால் மட்டும் போதாது அதனை வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது பாமர மக்களுக்கு மட்டுமல்ல படித்த சமூகத்திற்கும் அறியாதது அல்ல. அதனை நடை முறைப்படுத்த வேண்டும். தம் வீட்டுக் கழிவுப் பொருட்களை கட்டிச் சென்று முச்சந்தியில் இடுபவர்கள், எந்த மனநிலை வைத்தியரிடமும் தேற வாய்ப்பு இல்லை என்றே கூற வேண்டும்.

வியாபார நோக்கத்திற்காக தொழிற்சாலைகளையும் நகரத்திலேயே அமைக்க வேண்டிய சூழ்நிலைக் கைதியாக தொழிலதிபர்கள் காணப்படு கின்றனர். தொழிற்சாலைக் கழிவுகள் பெரும்பாலும் வளியையும் நீரையும், மண்ணையும் மாசுபடுத்தக் காரணமாகிறது. இதனோடு வாகனப் புகைகளும் அதனோடு இணைந்து பனிப்புகாரும் சில இடங்களில் பாதைகள் தெரியாது விபத்தும் ஏற்படுகிறது. சீனாவில் சில பகுதியில் தேவையற்ற புகையினை சுவாசிக்காமல் வாயை மூடிக் கட்டிக் கொண்டு மனிதர்கள் அலைகிறார்கள்.

எமது நாட்டில் அதைவிட வினோதம் என்னவெனில் போன ஆண்டில் எடுத்த மோட்டார் வண்டியும் அடுத்த ஆண்டில் புகைப்பரிசோதனை செய்ய வேண்டும். ஆனால் மிகவும் பழைய புகைவிடும் வாகனங்களும் புகைப்பரிசோதனையில் தரச்சான்று பெற்று வீதியில் வலம் வரும். வீதியில் போகும் பாதசாரிகள் மூக்கைப் பொத்திக் கொண்டு போவார்கள் பேசமாட்டார்கள். ஏன் சட்டப்படி ஓடுகிறது அதையும் தாண்டி இந்துக்களின் கோயில்கள், கிறித்தவர்களின் விழாக்கள் என மதம் சார்ந்தும் சராததும் பல்வேறு விழாக்கள் கொண்டாட்டங்கள் என்பவற்றில் இடம்பெறும் வெடித் திருவிழாக்களில் காதடைப்புக்கள், இருதய நோய்கள், குழந்தைகள் மனப்பாதிப்பு, கடை, சிறு பிள்ளை, வீடு, வேலி எனத் தீ அபாயம் ஏற்பட்டால் அதற்கு யார் தரச்சான்று கொடுப்பது. இத்தனை இலட்சக் கணக்கான காசுக்கள் கொட்டி வெடித்திருவிழா இடம் பெறுகிறது என்பது யாரிடம் யார் பேசுவது? இதற்கு மட்டும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் ஆர்வம் காட்ட மாட்டார்களா?

வெடியோசையால் யாருக்கும் பிரயோசனம் ஏற்பட்டது உண்டா? என்றால் இல்லை. நாட்டுக்கோ? அதுவும் இல்லை. சீனாவில் இந்தியாவில் இருந்து வெடி மாதிரிகள் இறக்குமதி செய்ய நாட்டுக்கு வருமானவரி இறக்குமதி வரி

மட்டுமே இலாபம் இதனால் எமது காசு வேறு நாட்டுக்குச் செல்கிறது. நமது நாட்டில் உற்பத்தி செய்து விற்பனை செய்தால் அதில் நமக்கு நாமே பலன் பெறுவது என்பதிலாவது மனதை திருப்திப்படுத்திக் கொள்ள முடியும். இதனால் நாட்டுக்கு தீராத வியாதிகளை நாமே தேடிநிற்கின்றோம் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் உள்ள போபால் யூனியன் கார்பனைட் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட நச்சு வாயு கசிவினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் இறந்தனர். ரஷ்யாவில் செர்னோபி அணு உலையில் ஏற்பட்ட அனர்த் தத்தால் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர். இவ்வாறான விடயம் தெரிந்தும் இந்தியாவில் தற்பொழுதும் கூட, கூடம் குளம் அணுமின் நிலையம் பல்வேறுமட்ட மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இயங்குகிறது. நிலத்தை துளையிட்டு எரி வாயுக்கள் எடுத்தல் அதற்கு எதிரான போராட் டங்கள் இந்தியாவில் இன்றும் தொடர் கதையாக உள்ள நிலையில், இலங் கையில் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சுற்று நிருபங்களையும் அறிக்கை களையும் விடுவதினூடாக வளி, நீர், மண் மாசடைதலைப் பாதுகாக்க உதவு கிறது. இது பெரிதும் வரவேற்கத்தக்கது.

காலநிலை மாற்றத்திற்கு கருவூ லமாக அமைவது வளி மாசடைதலே ஆகும். வளியைகாக்க வழி செய்வார்களா? எதிர்கால விஞ்ஞானிகள் என்றால் ஆம் என்றே கூற வேண்டும். எரிபொருளில் இல்லாது சூரிய மின்கல வானூர்திகள், கார்கள் என்பன கண்டுபிடித்து உள்ளனர். எதிர்காலத்தில் சாதகமாக அமையும் என எதிர்பார்க்க முடியும்.

வளிமண்டல விண்வெளி மற்றும் தண்ணீரக்கு அடியில் அணுவாயுதப் பரிசோதனையை தடை செய்யும் ஒப்பந்தம் 1993 ஆண்டு கொண்டு வரப்பட்டது. 1967 விண்வெளி ஒப்பந்தம் என்பனவும் ஐக்கிய நாடுகள் சபை மூலம் சர்வதேச சமாதானம் பாதுகாப்பு எனும் எண்ணக் கருக்களுக்கு அமைய கொண்டு வரப்பட்டுள்ளது.

குளோறோ புளோறோ காபன் போன்ற வாயுக்கள் உற்பத்தி குளிர் சாதனப் பெட்டிகள் மூலமும் விண்வெளி ஆராய்ச்சிக்கு அனுப்பும் செயற்கைக் கோள் மூலமும் ஓசோன் படலம் பாதிக்கப்படுகிறது. எனவே சூரிய ஒளியில் இருந்து வெளிப்படும் பிற ஊதாக்கதிர்கள் புவி பட்டத்தில் உள்ள ஓசோன் படல ஓட்டையின் வழியே நேரடியாக மானிட சமூகத்தை தாக்கும் நிலையில் கூடிய வெப்பமாகவும் உடலைத் தாக்குகின்றது. இவற்றின் மூலம் உடல் உபாதைகள், மயக்கம், ஜீரணமின்மை, தொழுநோய், காய்ச்சல் என்பவனவும் தோன்றுவதற்குக் காரண மாக அமைகின்றது.

இவ்வாறாக சூரிய வெப்பம் இன்றும் கூடுதலாக புவியைத் தாக்க முற்படும் பட்சத்தில் அதற்கு வேண்டிய முன்னாயத்த நடவடிக்கையினை சமூகம் செய்ய வேண்டியுள்ளது. முக்கியமாக வல்லரசு நாடுகள் இவ்வாறான விடயங்களில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். பொரு ளாதார வளர்ச்சியின் போட்டிகள் என்ப வற்றைக் கைவிட்டு எதிர்கால நலனில் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அதை விடுத்து விண்வெளிக்கு அப்பால் புவி போன்ற கோளைக் கண்டு பிடிப்பதும் அதில் குடியேற நினைப்பதும்

வடலி வளர்த்துக் கள் குடிப்பது போன்றது.

கண்டுபிடிப்புக்கள் பாராட்டிற் குரியது. ஆனால் அது தற்போது சூழலுக்கு பொருத்தமுடையதாகவும் சாதகமானதாகவும் இன்றைய தேவையைப் பூர்த்தி செய்வதுமாக இருந்தால் அதுவே போதுமாக இருக்கும். “போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து” எமது இருப்பை முதலில் உறுதி செய்வோம்.

காலநிலை மாற்றங்களே மனிதனுடைய மனநிலையில் ஒட்டு மொத்த மாற்றத்தையும் ஏற்படுத்து கின்றன. வெப்பம் கூட உடல் கொதிப்பு ஏற்பட்டு தொட்டதுக்கும் ஆத்திரம். அதனால் சண்டை, பொறாமை, யுத்தம் ஒற்றுமையின்மை, விட்டுக்கொடுப்பு இன்மை, மனப் பாதிப்பு என்பவற்றால் செயலற்ற சமூகமாக மாறுகிறது. எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் உள்நாட்டு யுத்தம், போதைவஸ்து கடத்தல் போன்ற நிகழ்வுகள் யோகப் பயிற்சியின்மை, ஆன்மீகமின்மை, ஐம்புலன் அடக்கமின்மை என்பவற்றால் உருப்பெருத்த விளைவுகளாக தோற்றம் பெற்றுள்ளமையினை இங்கு சுட்டிக் காட்ட முடியும்.

எம்மதமும் சம்மதம் என்று வாழ்தலும் எந்த உயிரும் இறைவனால் படைக்கப்பட்டது என்றும் அன்பு காட்டுதல் மூலம் எல்லாப் பிரச்சினை களையும் தீர்க்க வழியுண்டு. “அன்பும் சிவமும் ஒன்று என்பார்” அறிவுள்ள ஆன்மீக வாதிகள். ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னம் காட்டு என்றார் இயேசுபிரான். இவ்வாறான இறை சிந்தனைகளோடு கூடி வாழ்ந்தால் காலநிலை மாற்றங்களில் இருந்து விடுபட முடியும் என்பதோடு, எதிர் நீச்சல் போட்டு வெற்றியடைய முடியும் என்பதே நம்பிக்கை.

**நன்றி**

**திரு. பா. இரமணாகரன்,**
**ஆசிரியர் சித்திரம்**
**யா/ மாதகல் சென்யோசப் ம வி,**
**மாதகல்.**

**எழுத்தாளர்,**
**மாவையூர் கவி,**
**சன்னதி வீதி,**
**இடைக்கா,**
**அச்சுவேலி.**



## "கடவுளுக்கே பொறுக்காத காரியமிது"

தமிழன்னைக்கு உலகெங்கும் கௌரவமும், வணக்கமும், விழாவும், மாநாடும் வானோங்க வளர்கின்ற இவ்வேளையில், நம்நாட்டில் தமிழ்த் தாய்க்குத் தலைகுனிவை ஏற்படுத்தும் வகையில் நாம் அகப்பட்டுள்ளோம். அது முடியாத காரியம் என்றாலும் மன்னிப்புக் கிடைக்கும் முடியக் கூடிய காரிய மாய்ச்சுதே! எப்படி மன்னிக்க முடியும்? கண்பார்வையற்றவர்கள் கூடத் தாய் மொழியாம் தமிழ்மொழி பாடத்திலே சித்தியும் சிறப்பும் தேர்ச்சியும் அடைந் திருக்கின்ற வேளையில் முழுமையான பேறு உடையவர்கள் தாய்மொழியில் சித்தியடைய முடியாத ஒரு குறிப்பிட்ட மாணவர்கள் உருவாகி இருப்பது எல்லோருக்குமே அதிர்ச்சி அளித் துள்ளது.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில், தமிழ் மொழிப் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் 63, 101 பேராகும். இதில் சித்தி பெற்றவர்கள் 51, 136 பேர் ஆகும். ஏனைய பதினோராயிரத்து தொளா யிரத்து அறுபத்தைந்து (11,965) பேர் சித்தியே பெறவில்லை. சும்மா ஒருவர் இருவரா எத்தனை ஆயிரம் பேர்?

சரி! அடுத்த வருடம், 2016இல் நடைபெற்ற மேற்படி பரீட்சையில், தமிழ் மொழிப் பாடத்திற்குத் தோற்றிய வர்களின் தொகை 65,662 பேர். இதில் சித்திபெற்றவர் 51,612 பேராவர். ஏனைய பதின்நாலாயிரத்து ஐம்பதுபேர் (14,050) சித்தியடையவேயில்லை.

ஒவ்வொரு வருடமும் தாய் மொழியின் பாசமும் நேசமும் பற்றற்றுப் போய்க் கொண்டிருக்கின்ற பரிதாப நிலையை நாம் சம்பாதித்த வண்ணம் உள்ளோம். இது பற்றிய குறிப்பொன்றை உதயன் ஓகஸ்ட் மாதத்தில்(24-08-2017) தந்திருக்கின்றான்.

### என்ன பரிகாரம்

இந்த வீழ்ச்சி தொடர்பாக கல்வி அமைச்சில் ஒரு கூட்டம் நடைபெற்றதாக அறிகின்றோம். போதுமா? பிரச்சினை முடிந்ததா? மாகாணம், மாவட்டம், வலயம், கோட்டம், பாடசாலை, பெற்றோர்கள் மட்டத்தில் நடைபெற்ற கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்வுகள் தான் என்ன? சரி கூட்டங்கள் தான் நடைபெற்றதா?

பேனாவையே தொடாமல், குளிரூட்டி அறைகளிலிருந்து விடுப டாமல், நல்ல கவனிப்புக்களையும் தவிர்க்காமல், சம்பளத்திற்கேயான எந்தவொரு முடிவுமே மாணவர்களின் மனங்களைத் தொடப்போவதில்லை. கூட்டங்கள் யாவும் வடையும், தேனீரும், சாப்பாடும், அறிக்கையும் என்ற நிலை மாறி, மாணவர்களின் கரங்களுக்குக் கட்டளைகள் ஒருபோதும் வெற்றியோ சித்தியோ தரப்போவதில்லை. கவனமான, கனமான, காத்திரமான, காப்பாற்றுகின்ற, கலையம்சமான, கண்டிப்பில்லாத

ஆனால் கௌரவமான கட்டுப்பாட்டினால் தான் வென்றெடுக்க முடியும்.

### விளக்கம் தேவை

தாய் மொழியில் சித்திபெறாத மாணவன் எவராயினும் இந்த உலகத்தவர்களால் ஒதுக்கியே வைக்கப்படுவான். அதேபோல இந்த மாணவனைச் சித்தி பெறவைக்காத எந்தவொரு ஆசிரியனும் வாழ்க்கையில் தோற்றுப் போய்விடுவான். அதற்கப்பால் அந்தமாணவனுக்கு எந்தவொரு பரிகாரமும் முயற்சிக்காத அதிபரும் பாரிய சங்கடங்களைச் சந்தித்தே தீரவேண்டும். இன்னும் சொல்லப் போனால், அந்தப் பாடசாலைக்குப் பொறுப்பாகவுள்ள கோட்டக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வியமைச்சர், அரசுவரை பழி நீண்டு கொண்டே போய்விடும். இதிலிருந்து யாருமே தப்பிவிட முடியாது. பெரும் பெரும் கைளோடும், பணிப்பாளர்களோடும், அதிபர்களோடும் மட்டும் மாநாடு நடாத்தித் தீர்மானம் எடுத்து கோவைப்படுத்தி அறிக்கை விடுவதனால் மட்டும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியவே முடியாது.

நூறு பாடசாலைகளைச் சேர்ந்த தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் நூறுபேரினை பல்வேறு வகுப்புக்கள் அடிப்படையில் தெரிவு செய்து, இது தொடர்பாகக் கலந்துரையாட வேண்டும். இரண்டு நாள்கள் கலந்துரையாடப்பட்டு மூன்றாம் நாள் என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்? எங்கே ஆரம்பிக்கலாம்? என்று ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டு, அதனை அமுல்படுத்துவதற்கு ஏற்ற உபாயத்தைக் கைக் கொண்டாலே வெல்வதற்கான கால எல்லைகளைக் கருத்திற்கொண்டு சித்திபெறவைக்க முடியும். அடி மட்ட மாணவனின் தேவைகளையும் சூழலையும் புரிந்து, அரிச்சுவடியிலிருந்து எழுத்துக்கள் சொல்லாக்கம், உறுப்பெழுத்து, பார்த்து எழுதுதல், பார்க்காமல் எழுதுதல், பாடமாக்கி எழுதுதல், கேட்டு எழுதுதல், சின்ன வசனமாக்குதல், சொல்வதெழுதுதல், குறிப்பறிந்து எழுதுதல், நிரமூட்டி எழுதுதல், வாசித்தல், படம் பார்த்து எழுதுதல், இயற்கையை இரசித்து எழுதுதல், இலக்கங்கள் எழுதுதல், அம்மாவைப் பற்றி எழுதுதல் இது போன்ற பல பயிற்சிகள் வாலாயமாக வந்த பின்னர் உரத்து வாசித்தல் எனும் ஆளுமைப் பயிற்சிகளை வழங்கி அட்சர சுத்தத்தை ஏற்படுத்த வேண்டும். இவ்வளவு பயிற்சிகளையும் செய்து நிறைவேற்றுவதற்குச் சுமார் ஆறுமாதம் தேவைப்படும். பெற்றோர்களும் இந்த மேலதிக வகுப்புக்களில் கலந்து முன்னேற்றமளிப்பது சிறந்த பெறு பேற்றுக்கு வழிசமைக்கும்.

### எளிது

ஒவ்வொரு வகுப்பிலும் தாய் மொழிப்பாடத்தில் இருபது புள்ளிகளுக்குக் கீழே எடுக்கின்ற ஒவ்வொரு மாணவனும் இந்தப்பரிகாரக் கற்றலுக்காக உள்வாங்கப்பட்ட வேண்டும். முதலாம் தவணைப் பரீட்சையில் பெற்றபுள்ளிகளின் அடிப்படையிலே மாணவர்களைத் தெரிவு செய்வது மிகவும் எளிதாக இருக்கும். இந்த வகுப்புக்கு மாணவர்களை உள்வாங்கும் போது அவர்களது கௌரவம் பாதிக்காத வகையில் விளம்பரமில்லாது நடைபெற வேண்டும்.

**பலாபலன்**

2015, 2016 இரு வருடங்களிலும் மொத்தமாக 26,015 மாணவர்கள், 2017ஆம் ஆண்டில் மேலதிக அதீத பயிற்சியை மேற்கொள்வார்களாக இருந்தால், பத்தாயிரம் மாணவர்களை யாவது சித்திபெறவைக்க முடியும். கிராம சேவையாளர், மதகுருமார், சனசமூக நிலையங்கள், வணிகர் கழங்கள், வங்கிகள், ஆலயங்கள், ஓய்வூதியர்கள் என யாவரும் இந்த மண்ணுக்காக மிகுந்த கரிசனை யோடு களமிறங்கு வார்களாக இருந்தால் தமிழன்னை கண்ணீர் வடிக்காது நிமிர்ந்த நடையோடு பயணிப்பாள்.

கதிரைகள், பதவிகள், பொறுப் பானவர்கள் மாணவப் பாமர நிலைக்கு இறங்கிச் செயலாற்றாதவரை, 2017 பரீட்சையும் இதே பெறுபேற்றையே எமக்கு நல்கும். எவருக்குமே அக்கறை எள்ளளவும் இல்லை. இது தகுமோ? இது முறையோ? இது தருமந்தானோ? கோயிலில் கொட்டி விட்டால் இந்த 26015 பேர்களும் சித்திபெற்று விடுவார் களா? எழுத்தறிவித்தவனே இறைவனா வான் ஏனையன ஆரவாரமே?

**கே எஸ் சிவஞானராஜா**
**ஓய்வுபெற்ற உபஅதிபர்,**
**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

---

## சனிதோசம் நீங்க பரிகாரம்

சனிதோசம், ஏழரைச் சனி உள்ளவர்கள் சனிக்கிழமைகளில் செய்ய வேண்டிய பரிகார முறைகளை பற்றித் தெரிந்து கொள்வோம். சனிக் கிழமை காலை எள்நெய் தேய்த்து நீராடி, சிவாலயம் அல்லது விஷ்ணு ஆலயம் சென்று சனீஸ்வரனுக்கு எள்ளு, கறுப்பு வர்ணப் பட்டு தானமாகக் கொடுத்து, எள்ளுப் பொட்டலத்தை கறுத்த துணியில்க் கட்டி, அதனை மண் சட்டியில் இட்டு, நிறைய எள்நெய் விட்டு தீபமாக சனீஸ்வரனுக்கு முன் வைத்து வழி பட வேண்டும்.

துளசி, கருங்காக்கணவன் மலரால் அர்ச்சித்து, பின் சிவன் அல்லது விஷ்ணு ஆலயம் சென்று, சனிதோசம் நீங்க பிரார்த்திக்க வேண்டும். அதன் பின் ஆலயத்திலே எள், அன்னம் என்ப வற்றைக் காகங்களுக்கு வைத்து வீடு சென்று ஏழைகள் மூவருக்கு உணவு அளித்து, உணவு உட்கொண்டு விரதத்தை முடிக்கலாம். இவ்வாறு செய்தால் தோசம் நீங்கி நல்வாழ்வு பெறலாம். சனீஸ்வரன் ஒருவனுடைய ஜாதகத்தில் சந்திரன் நிற்கும் இடம் ராசிக்கு 5இல் சஞ்சரிக்கும் பொழுது பஞ்சம சனி என்றும், 8இல் சஞ்சரிக்கும் காலம் அட்டமத்துச் சனியென்றும், 12இல், 1இல், 2இல் சஞ்சரிக்கும் காலம் ஏழரைச் சனி யென்றும் கூறுவர். இக் காலங்களில் புத்திர சுகம் குறைவு, மரண பயம், பிரயாணம், அதிக செலவு, தேகமெலிவு என்பன உண்டாகும். இதை சனிதோசம் என்பர்.

இவர்கள் மேற்கூறிய தோச நிவ ர்த்தியைத் தவறாது செய்தல் வேண்டும். ஏனையோர் புரட்டாதி மாதச் சனிக்கிழமை களில் மட்டும் காலையில் எண்ணெய் ஸ்நானம் செய்து, ஆலயம் சென்று எள் விளக்கேற்றி சனீஸ்வரனை வழிபடலாம்.

**சி.பிரவீன்**
**யா/ இந்துக்கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**



## எமது சமூகம் எங்கே பயணிக்கிறது?

மனிதப்பிறப்பு ஓர் அரிய பிறப்பு. அது இறைவனின் அரும்படைப்பு. எனவே தான் "அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என ஔவையாரும் கூறிப்போந்தார்.

ஆணும், பெண்ணும் சேர்ந்தது தான் மானிடம். ஒருவரின்றி மற்றவர் வாழ முடியாது. ஆனால் இன்றைய உலகத்தில் நாம் வாழும் சமூக அமைப்பின் பிரதிபலிப்பினால் இருபாலரிடையேயும் அந்நியமாதல் நிலவி ஒற்றுமை குலைந்து காணப்படுகிறது. இதனால் குடும்பச் சச்சரவுகள், வன்முறைகள், பாலியல் பலாத்காரங்கள், கொலைகள், தற்கொலைகள் இன்று சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன.

தொழிலின்மை, பணமின்மை, முயற்சியின்மை, மனவமைதி இன்மை, மனவுறுதியின்மை போன்ற மனிதப் பண்புகள் காரணமாகின்றன.

எனவே இவற்றைக் கட்டுப்படுத்தி மனித வாழ்க்கையை நல்வழிப் படுத்துவது அனைத்து பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களின் கடமையாகும். சமூகத்தில் நிலவும் வறுமை, கடன், வேலை வாய்ப்பின்மை, பொருள்களின் விலை அதிகரிப்பு, ஒழுக்கப் பிறழ்வுகள், கலாச்சாரப் பிறழ்வுகள் முதலியன சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்துகின்றன.

பாரம்பரிய வழிபாட்டுக் கலாச்சார, பாரம்பரிய ஒழுக்கப் பண்புகள், பாரம்பரிய அழகியல் நலிந்து கைத்தொலைபேசி, இணையம், வெளிநாட்டுக் கலாச்சாரம் மலிந்து குடும்ப மட்டங்களில் ஏற்படுகின்றன.

சுயதொழிலையும், சுயசேமிப்பையும் நோக்கமாகக் கொண்டு இயங்கும் நிறுவனம் தான், எமது சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம். சுயதொழில் செய்வதை ஊக்குவிப்பதற்கும், சிறுகச் சேமித்தும் சிக்கனம் பேணும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும் பழநி சிக்கனக் கடனுதவுச் சங்கம் பேருதவி செய்கிறது.

கல்வியோடு, ஒழுக்கம், கலை கலாச்சாரம், பண்புகளும், நேரத்தையும் பணத்தையும், வீண் ஆடம்பரங்களையும் சிக்கனம் பேணும் முறைகளும் மாணவர்க்கும் இளைய சமுதாயத்துக்கும் சிறு வயதிலிருந்தே ஊட்டப்பட வேண்டும்.

மேலும் மதுபாவனை, போதை வஸ்து, புகைப்பிடித்தல் பாவனைக் கெதிரான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அன்பு, கருணை, இரக்கம் முதலிய நற்பண்புகளை ஆலயங்கள், சமூக நிறுவனங்கள் வளரும் சமுதாயத்தினரிடையே வளர்க்க வேண்டும்.

இதற்கு கலை, கலாச்சார பண்பாட்டு மன்றங்கள், அறநெறிப் பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், போட்டிகளில் பங்கேற்க வைத்து, பரிசில்கள் வழங்கி, இளைய சமுதாயத்துக்கு வலுவூட்டவேண்டும்.

இந்த வகையில் ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது தொழில்சார் முயற்சி களுக்கு, இலகு முறையில் கடனுதவி வழங்கி உற்பத்தியையும், பொருளா தாரத்தையும் ஊக்குவிக்கும் சங்கமாக விளங்குகிறது.

அக்காலத்தில் கிராமங்கள் செழிப்பாக இருந்தமை காரணமாக இயற்கை வளங்களை பாவித்து விவசாயம் செய்தமை, பாரம்பரிய ஒழுக்க விழுமியங்களை பேணிப் பாதுகாத்தமை, ஆடம்பரமற்ற சிக்கன வாழ்வு பின்பற்றியமை முதலிய விழுமியங்கள் இருந்துள்ளன. கிரா மங்களில் உணவுப்பயிர், பணப்பயிர்ச் செய்கைமுறை பேணி வளர்க்கப்பட்டன. சிறுகைத் தொழில்கள், பட்டறைத் தொழில்கள் முறையாக நடைபெற்று வந்தன. சனசமுக நிலையங்களில் சமூக விருத்திக்கான வாசிப்புப் பழக்கம் கிராமிய பாரம்பரிய விளையாட்டுக்கள், போட்டிகள் நடைபெற்று வந்தன.

ஆனால் தற்போது "நேரமின்மை" என்பது பாரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. யாரைக் கேட்டாலும் எதற்கெடுத்தாலும் "நேரம் இன்மை" என்பதே பேச்சு. மாணவர்கள் தனியார் ஊக்குவிப்புப் பாடசாலைக்குச் செல்வ தாலும், பெரியோர் தொலைபேசி, இணையம், கணனி, Tv தொடர் நாடகங்கள் முதலியவற்றில் தம் நேரத்தை வீணடிப்பதால், ஆலய உற்சவங்கள், அறநெறிப் பாடசாலைகள், நூலகங்களுக்குச் சென்று வாழ்க் கைக்குத் தேவையான வழி நெறிகளில் பங்குபற்ற நேரம் இன்மையே காரணமாகும். எனவே நேரத்தைச் சேமித்து வாசிப்புப் பழக்கம், கிராமியப் பாரம்பரிய விளை யாட்டுக்கள், கிராமியக் கலை கலாசாரங்கள், கோயில்களில் இயல் இசை நாடகங்கள் நடைபெற்று மக்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவது அவசியமாகும். இத்தகைய முயற்சி களில் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் பெரும் ஈடுபாடு கொண்டிருக்கிறது.

தற்போது நிவாரணங்கள், வெளிநாட்டுப்பணம், குறுக்கு வழியில் மீற்றர்வட்டி மூலமாக தேடும் பணம் போன்றவற்றில் சிலர் ஈடுபட்டிருப்பதால் சிக்கனம், சேமிப்பு, சுய விடாமுயற்சி, சுயதொழில் ஈடுபாடு குறைவாக காணப்படுகிறது.

எனவே உற்பத்தி சார்ந்த சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு சிக்கனமாகச் செலவழித்து சேமிப்புச் செய்து வருபவர் பிற்காலத்தில் யாருக்கும் பிரச்சினை கொடுக்காமல் சுகமாக வாழலாம் என்பது என் கருத்து.

**ஆக்கம் :-**

**திருமதி.உருத்திராதேவி சண்முகநாதன்**
**நீண்டகால உறுப்பினர்**

## வட மாகாணக் கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகள் வெளிப்படுத்தப்படாத காரணங்கள்

கடந்த சில வருடங்களாக தேசிய மட்டத்தில் வட மாகாணக்கல்வி நிலை இறுதியிடத்தில் இருப்பதைப் பரீட்சைத் திணைக்களப் பெறுபேறுகள் காட்டி நிற்கின்றன. இறுக்கமான பொருளாதாரத் தடையினை இலங்கை அரசு விதித்திருந்த காலகட்டத்தில் கூட தேசியப் பரீட்சைப் பெறுபேறுகளில் உயர்வினைக் காட்டி நின்ற வட மாகாணம் இன்று பெறுபேறுகளில் தொடர்ச்சியாகப் பின்னடைவைக் காட்டி வருவது என்பது கையறு நிலையில் இருக்கும் தமிழினத்திற்கு மிகவும் வேதனை தரும்ஒரு விடயமே. இந்த வலிகளில் இருந்து மீள்வதற்குக் கல்விப் புலம் சார்ந்த அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றிப் பெற்றோர்கள் கூட வழி என்ன? என்று சிந்திக்கத் தலைப்பட்டுவிட்ட காலமிது.

தேசியப் பரீட்சைகளில் ஏற்படும் வீழ்ச்சிக்குப் பொதுவாகப் பாடசாலைகளையும், அதிபர், ஆசிரியர்களையும் குற்றம் சுமத்துவதோடு கல்வி அதிகாரிகள் நின்றுவிட, ஆசிரியர்களோ மாணவர்களது நடத்தைகள் மீதும் குடும்பச்சூழல் மீதும் குற்றம் சுமத்தி விட்டு, பாதிப்பு நிலைக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்ற ஒரு மனோ பாவத்தோடு தப்பித்துக் கொள்ளும் நிலையே எமது வழமையாகவுள்ளது. பத்திரிகைகளில் வெளிவரும் விமர்சனக் கட்டுரைகள் கூட, பெரும்பாலும் வகுப்பறைகளை மையப்படுத்திய தீர்வுகளை முன் வைப்பதன் ஊடாக இதுவரை காலமும் அதிபர், ஆசிரியர்களது செயற்பாடுகளில் காணப்படும் பலவீனங்களே இத்தகைய விழ்ச்சிக்கு காரணம் எனக் கூறி, பிரச்சினையின் உண்மை நிலைமைகளைப் பற்றி எவரையும் சிந்திக்க விடாமல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வடமாகாணக் கல்விப் பெறுபேற்று வீழ்ச்சிக்கு இவற்றை விடவும் பலமான காரணிகள் உண்டு என்பது பற்றிய கருத்துக்களை முன் வைத்து, அது பற்றிய சிந்தனைகளைத் தூண்டி, விமர்சனங் களுக்குத் திறவு கோலாகி நிற்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

### வடக்கு மாகாணமும் வலயக்கல்வி அலுவலகங்களும்

இலங்கையில் இன்று நடைமுறையில் இருக்கும் வலயக்கல்வி நிர்வாக முறையானது 1998 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரே மாகாண சபையாக இயங்கிய நிலையில் இங்கு இருபது வலயங்களாகப் பிரிக்கப்பட்டு, இருபது வலயக்கல்வி அலுவலகங்கள் இயங்குவதற்கு அனுமதிக்கப் பட்டிருந்தது. இருந்தும் அன்றைய வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டு அலுவலங்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அவர்கள் எடுத்த பெருமுயற்சியின் பயனாக, தீவக வலயம், துணுக்காய் வலயம், மடுவலயம், தெகியத்தகண்டிய வலயம் என்பன புதிய வலயங்களாக உருவாக்கப்பட அனுமதி பெறப்பட்டு, வடக்குக் கிழக்கு மாகாணத்தின் கல்வி வலயங்களை

இருபத்து நான்காக அதிகரிக்க முடிந்தது.

இணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் 31.12.2006 உடன் தனித்தனி மாகாணங்களாக பிரிக்கப் பட்ட போது, வடக்கில் 12வலயங்களும் கிழக்கில் 12வலயங்களுமாகப் பிரிப்பு அமைந்திருந்தது. இருந்தும் பிரிந்து சென்ற கிழக்கு மாகாணசபையின் உரிய அதிகாரிகள் அமைச்சர்கள் எடுத்த முயற்சிகளின் விளைவாக, அங்கிருந்த பன்னிரு வலயங்களும் பதினேழு வலயங்களாக அதிகரிக்கப் பட்டன. கிண்ணியா, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு, பொத்துவில், ஹோமரங்கடவெல என்பன புதிய வலயங்களாக தோற்றம் பெற்றன பாடசாலை மேற்பார்வைகளும், வழிகாட்டல்களும், வளப்பங்கீடுகளும் நியாயமான வகையில் பரவலாக்கப்படும் வாய்ப்புக் கிடைத்தது. அத்தோடு அங்கிருக்கும் வலயங்களில் மட்டக்களப்பு மத்தி, அக்கரைப்பற்று, கல்முனை ஆகிய வலயங்கள் தேசிய ரீதியில் கபொத (சாதாரண) பரீட்சையில் முதல் இருபத்தைந்து நிலைகளுக்குள் வருவதை அவதானிக்கலாம். ஆயினும் வடமாகா ணத்தில் பன்னிரு வலயங்கள் ஏறக்குறைய இருபது வருடங்களாக பன்னிரு வலயங்களாவே காணப் படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில், மாவட்டத்திற்கே ஒரு வலயம் அமையப் பெற்றிருப்பது பற்றி அக்கறை கொள்ளவோ, அது பற்றி நேரான தீர்மானம் எடுப்பதற்கோ பொறுப்பு வாய்ந்த எவரும் எங்களிடம் இல்லையோ என எண்ணக் கவலையேற்படுகிறது. இதே போல வலிகாமத்திலும், தென்மராட் சியிலும் புதிதாக வலயங்கள் உரு வாக்கப்பட வேண்டிய தேவை பற்றி மாணவர்கள், பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் மட்டுமே கவலைப்படுகின்ற ஒரு நிலையே வெளிப்படையாகத் தெரிகிறது. புதிய வலயப் பிரிப்புக் களும் பொருத்தமான ஆளணி நியமனங் களும் நிச்சயமாகப் பாடசாலைகளது செயற்பாடுகளை மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆனால் கிழக்கு மாகா ணத்தில் வலயப்பிரிவு முஸ்லீம் பாடசாலைகள், தமிழ்ப் பாடசாலைகள் எனப் பிரிக்கப்பட்டமை பல்லின, பல் வகைமையை பாதிப்பிக்கும் என்ப தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தேசிய ரீதியாக இவ்வாறான பிரச்சினை களை எதிர்கொள்ளும் கல்வி அமைச்சு. கோட்டங்களை இல்லாமல் செய்து வலயங்களின் எண்ணிக்கையைத் தற்போது இருப்பதை விட இரண்டு, மூன்று மடங்காக அதிகரிக்க யோசித்திருப்பதாக செய்திகள் வருகின்றன

## கல்வி நிர்வாகத்தில் காணப்பட்ட மூன்று விதமான கட்டுப்பாட்டுப் பகுதிகள்

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 2009க்கு முன்னர் கல்வி நிர்வாகமானது மூன்று விதமான கட்டுப் பாட்டுப் பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

1) முழுமையான இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதி
2) பகுதியளவிலான இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதி
3) முழுமையான விடுதலைப்புலிகளது கட்டுப்பாட்டுப்பகுதி

இவ்வாறு மூன்று விதமான கட்டுப்பாட்டுப் பகுதிகள் காணப்பட்டாலும் அந்தக் காலகட்டத்தில் அதிபர், ஆசிரியர்

நியமனத்திலும் இடமாற்றத்திலும் நியதிகள் இறுக்கமாகவும் முழுமையாகவும் கடைப்பிடிக்கப்பட்டன. தூர நோக்குடன் நியமனங்கள் செய்யப்பட்டன. இடமாற்றங்கள் வழங்கப்பட்டன. எந்தவிதமான செல்வாக்குகளுக்கு இவற்றில் இடமிருக்கவில்லை. அப்போதைய கல்விச் செயலாளர் ஒவ்வொரு வலயங்களுக்கும் சென்று அதிபர் கூட்டங்களில் பங்கு கொண்டார் இதனால் தான் போலும் அன்றைய காலகட்டத்தில் எமது கல்வி நிலை இந்த மாதிரியான மோசமான வீழ்ச்சியைச் சந்திக்கவில்லை.

எனினும் 2009ஆம் ஆண்டின் பின்னர் வடக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களில் அதிகமானவை வன்னிப் பிரதேசத்தை மையப்படுத்தியே வழங்கப்பட்டன. அதில் கூட செல்வாக்குடையவர்கள் நகரப்புறப் பாடசாலையில் குவிக்கப்பட்டதோடு செல்வாக்கற்றவர்கள் கிராமப்புறப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டனர். இது காரணமாக நியமனம் பெற்ற ஆசிரியர்களிடையே வெறுப்பு, விரக்தி, ஆசிரியவாண்மைத்துவ செயற்பாடுகளில் வீழ்ச்சி என்பன ஏற்பட்டதோடு, நியமனம் பெற்ற பலர் புதிய பதவிகளுக்கு விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக் கொண்டு ஆசிரியத் தொழிலைக் கைவிட்டுவிட்டுச் சென்ற வரலாறுகள் அதிகம் பதியப்பட்டுள்ளன.

இது மட்டுமன்றி எமது சனத் தொகையில் பெண்களின் வீதாசாரம் அதிகரித்துள்ள நிலையில் வழங்கப்படும் ஆசிரியர் நியமனங்களில் அதிக அளவினைப் பெற்றுக் கொள்ளும் அவர்கள். வன்னி மாவட்டங்களுக்கு நியமனம் பெற்றதும், இயல்பாகவே அவர்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக தொழில் நிலையங்களில் இருந்து அதிகளவான சலுகைகளை எதிர்பார்க்கிறார்கள். அதிக அளவான விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ள முயல்கின்றனர். இவை மாணவர்களது கற்றலைப் பாதிப்பதாகவே அமைந்து விட்டது.

இங்கு நாம் கவனமாக ஆராய வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் 2005ஆம் ஆண்டின் பின் வழங்கப்பட ஆசிரிய நியமனங்களில் மிகப் பெரும் பங்கு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட வலயங்களுக்கு வழங்கப்பட்டு ஆசிரியர் நிரம்பல் அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த மாவட்டங்களது கல்வி நிலையும் பெறுபேறுகளின் வீழ்ச்சியினைக் காட்டி நிற்கின்றமையையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

இதுவரை காலமும் வட மாகாணத்தில் கைக்கொள்ளப்பட்டு வந்த ஆசிரிய நியமனம் மற்றும் ஆசிரியஇடமாற்றம் தொடர்பான கொள்கைகள், உண்மையில் வடமகாணக் கல்விப் பெறுபேற்று வீழ்ச்சிக்கே காரணமாக அமையலாம். எனவே இது பற்றித் திறந்தமனதுடன் ஆராய்ந்து பார்க்க வேண்டியது கொள்கை வடிவமைப்பாளர்களின் கடமையாகும்.

## தொண்டர் ஆசிரியர் நியமனம்

வடக்கு மாகாணத்தில் ஓரிரு தடவைகள் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இதன் தொடர்ச்சியாக 2016ஆம் வருட ஆரம்பத்திலும் ஒரு தொகைத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விடயம் என்ன வெனில் கடந்த காலங்களில் பாடசாலைகளில் ஏற்கனவே கடமை புரியாதவர்களுக்கும் இந்த நியமனம் அரசியல் கட்சிகளது அழுத்தங்களுக்கு உட்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றமை ஆகும். தமது அரசியல் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள அரசியல் வாதிகள் காலத்திற்குக் காலம் இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது பலத்தினைப் பிரயோகித்து, தம் ஆதரவாளர்களுக்கு நியமனம் கிடைக்க வகை செய்கின்றனர். இதனால் அர்ப்பணிப் புணர்வு, ஆக்க சிந்தனை என்பன குறைந்த, கல்விப்புலத்தில் புலமை குறைந்தவர்களுக்கும் ஆசிரியர் நியமனம் கிடைக்க வழியேற்பட்டு விட்டது. இதனுடன் தொடர்புபட்ட இன்னுமொரு விடயம் யாதெனில் இவ்வகையான நியமனங்கள் கூட வன்னிப் பிரதேசத்திற்கே அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நியமனம் பெற்றவர்களில் பலரும் ஆசிரிய பயிற்சியினை நிறைவு செய்ததன் பின்னர், பல்வேறு தேவைகள் கருதி தமது வசிப்பிடத்தை யாழ் நகரை மையப்படுத்தி அமைத்துக் கொள்ள விரும்புவதோடு, காலப் போக்கில் இடமாற்றம் பெற்று யாழ்நகர் நோகி நகர்ந்துள்ளமையும் ஒரு பிரச்சினை யாகவே கருதப்படுகின்றது.


வடக்கு மாகாணக்கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித் திணைக் களம் உருவாக்கப்பட்ட நேரத்தில் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த இளம் உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் வழிகாட்டலில் நல்ல பயிற்சியை நிபுணத்துவத்தைப் பெற்றார்கள் என்பது மறுக்க முடியாதது. இவ்வாறானவர்கள் சிலர் வலயக் கல்விப் பணிப்பாளர் களாக கடமையைப் பொறுப்பேற்று அபிவிருத் தியை நோக்கி செயற்பட்டமை மனங் கொள்ளத்தக்கது. ஏனையோரும் குடா நாட்டிற்கு அப்பா லான வலயங்களில் பணியாற்று வதன் மூலமே பெறுபேற்று வீழ்ச்சியை தடுத்து நிறுத்த உதவும்.

## கல்வி அபிவிருத்தி

அன்றும், இன்றும் ஆசிரியர்கள் வலயக்கல்வி அலுவலகங்களினாலும், மாகாணக் கல்வித் திணைக்களத் தினாலும் செயலமர்வுகள், கருத்தர ங்குகள், தரவட்டங்கள் பயிற்சி வகுப்புக்கள் என அழைக்கப்படுகின்றனர். இவை யாவும் கற்றல் கற்பித்தல் தொடர்பான அறிவு, அனுபவங்களைப் பகிர்வதற்கான களங்களேயாகும். ஆனால் இவற்றைப் பாடசாலை நாள்களில் வைப்பதால் மாணவர்கள் பாதிப்படைவர். ஞாயிற்றுக் கிழமைகளில் வைப்பதால் ஆசிரியர்களின் நலன்கள் பாதிப்படையும் இவையும் கல்வி வீழ்ச் சிக்கான காரணங்களாகும். பாடசாலை களில் அளவுக்கு மிஞ்சிய விழாக்களை நடாத்துவதால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுகின்றது. அத்துடன் அவை பாடசாலை நேரத்தில் அரைவாசியையோ அல்லது முழு நேர த்தையுமோ வீணடிக்கலாம். எனவே இதுவும் கல்வி வீழ்ச்சிக்கான காரணமாகும்.

பாடசாலைகளில் மேற்கொள்ளப் படும் உள்வாரி மதிப்பீடு வெளிவாரி மதிப்பீடு என்பன மாணவர் அடைவை உயர்த்துவதற்கான நல்ல கருவிகள். ஆனால் பாடசாலைகளில் உள்வாரி மதிப்பீட்டைச் சரியாக செய்யக் கூடியவர் களாக ஒரு சில அதிபர்களே உள்ளார்கள். ஏனையோர் அது பற்றிய அறிவு, தேர்ச்சியை வளர்ப்பதில் பின்னிற் கின்றனர்.

வலயங்களில் உள்ள வெளிவாரி மதிப்பீட்டுக் குழுவினால் பாடசாலைகள் தினந்தோறும் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அவை உடனுக்குடன் வலய நிர்வாக, அபிவிருத்திக் கூட்டங்களில் ஆராயப்படுவதோ, அதன்படி பாடசாலையின் தேவைகள், குறைபாடுகள், பிரச்சினைகள் தீர்க்கப்படுவதோ இல்லை. தொடர் நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. ஒரு சில வலயங்கள் இதற்கு விதிவிலக்காய் இருக்கலாம். இதுவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணமாகலாம். இதனை கிழக்கு மாகாணக்கல்வி நிர்வாக சேவையாளர் சங்கமும் கூறுவது பரிசீலிக்கக் கூடியது. மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர் கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்றவாறான அதிகாரப் படிமுறை பாடசாலைகளுக்கு அனுசரணை வழங்குவதற்காக வகுக்கப்பட்ட போதும் மாறாக அவற்றின் சுயாதீன செயற்பாடு (Autonomy) பாதிக்கப்படுவதாகவே சொல்லப்படுகின்றது. அரசியல் வாதிகளின் செல்வாக்குகளும் ஊடுருவிக் காணப்படுகின்றன. தென்னிலங்கையில் மாகாண சபைகள் ஜனநாயக பிரதிநிதித்துவ முறையில் நீண்டகால அனுபவத்தைக் கொண்டன. அங்கு அதிகரப் படிமுறை ஓரளவு நெகிழ்ச்சியுள்ளதாகக் காணப்படுகின்றது. இங்கு இறுக்கத் தன்மை உள்ளது. எட்வேட் எடமிங்கின் கோட்பாட்டின் படி,




என்றவாறு தலைகீழாக மாற்றப்பட வேண்டும். மாணவர்களை மையமாகக் கொண்டு செயற்படும் போதே தரமான கல்வியையும், கல்விப் பெறுபேற்றில் உயர்ச்சியையும் எதிர்பார்க்க முடியும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இத்தகைய முகாமைத்துவக் கொள்கைகளே பின்பற்றப்படுகின்றன.

எமது நாட்டிலே புதிய தலைமைத்துவ வெற்றிடம், ஜனநாயக தேக்க நிலைமை காணப்படுகின்றது. அதிலும் வடக்கு, கிழக்கில் இந்நிலைமை மோசமாகவேயுள்ளது. வடக்கு, கிழக்கில் இளைஞர் இயக்கங்களும் அறிவார்ந்த தலைமைத்துவம், புதிய, புரட்சிகரமான ஜனநாயகம் பற்றிய தேடல் இன்மையே அவர்களின் தோல்விக்குக் காரணமாயிற்று எனலாம். மீண்டும் பழைய தலைமைத்துவம், பழைமைவாத அரசியலால் ஜனநாயகம் தேக்கமுற்று, சுறுசுறுப்பு ஆற்றியிருக் கின்றது. அவர்கள் காலத்துக்குக் காலம் வாக்குகளைப் பெற்று தமது சிறப்புரி மைகளை அனுபவிப்பவர்களாகவே இருப்பார்கள். மாகாணங்களின் தற்போ துள்ள அதிகாரகங்ளையோ பெறக்கூடிய அதிகாரங்களையோ பயன்படுத்தக்கூடிய ஜனநாயக நீட்சி, ஜனநாயக ஓட்டம் எம் தலைவர்களுக்கு மிகப்போதாமலே உள்ளது. எம் சமுதாயம் குளத்து நீரைப் போல தேங்கியேயுள்ளது. இந்நிலையில் வடக்கு மாகாணத்தின் கல்வி, பொருளாதாரம் மற்றும் ஏனைய துறைகளில் எவ்வாறு உயர்வை எதிர்பார்க்க முடியும், இவற்றை மக்களும், அறிவாளிகளும் சிந்திக்க வேண்டும்.


**ஆக்கம் : திரு. பி. முத்துலிங்கம்**
**ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**



# சிக்கனம் - சேமிப்பு இவை இரண்டும் வாழ்க்கைக்கு

ஐப்பசி 31ஆம் நாள் உலக சிக்கன தினமாகும். இத்தினம் பொரு ளாதார வளர்ச்சியை எய்துவதற்காக சிக்கனத்தினதும், சேமிப்பினதும் முக்கிய த்துவத்தை உணர்த்து வதற்காக உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறது. இத்தினம் 1924ஆம் ஆண்டில் இத்தாலியில் உள்ள மிலான் நகரில் பன்னாட்டு சேமிப்பு வங்கிகளின் தலைவர்கள் பிரதிநிதிகள் கூட்டத்தில், உலக சிக்கன தினம் என ஒரு விசேட தினம் உலகெங்கும் கொண்டாடப்பட வேண்டும் என்றும், இத்தினத்தில் சேமிப்பு, சிக்கனம் போன்றவை பற்றி மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டு மென்றும், தீர்மானிக் கப்பட்டது.

"பொருள் இல்லார்க்கு இவ் வையகம் இல்லை" என்ற பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுவரின் ஈரடி கூற்றும் "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்ற ஆன்றோர் வாக்கும் பொருள் உடைமையைப் பறை சாற்று கின்றன.

சம்பாதிப்பு இருப்பினும் வருமா னமோ குறைவு, வாழ்க்கைச் சுமையை எப்படிச் சமாளிப்பது எனச் சிலர் கூறலாம். ஆயினும் வள்ளுவர் கூற்றின் படி "ஆகாறு அளவு இட்டிது ஆயினும் கேடில்லை போகாறு அகலார்க் கடை" என வரவு சிறிதாயினும் வருவாய்க்குள் செலவு செய்பவனுக்குத் தீங்கு வராது என அழகாகக் கூறிப்போந்தார்.

எதிர்காலத் தேவையை முன்னிட்டு எமது பண்டைய மக்கள் சிறுகச் சிறுகச் சேமித்தது பிடியரிசிப் பழக்கத்தை மேற்கொண்டு வந்தனர். இப்பழக்கம் சிக்கனத்தையும், சேமிப்புப் பழக்கத் தையும் வலியுறுத்து கின்றது.

மனிதன் தன் வருமானத்தில் ஒரு பகுதியை அன்றாட நுகர்வுக்கும், ஒரு பகுதியைத் திடீர் தேவைக்கும், இரு பகுதிகளை முதலீடுகளுக்கும் வைத்துக் கொள்ள வேண்டுமென ஆன்றோர் கூறுவர். சிக்கனமாக வாழ்ந்தால் சேமிப்பின் மூலம் சுபீட்சம் பெறலாம்.

ஆதி மனிதன் வேட்டையாடிய பச்சை இறைச்சியை காயவைத்தும், தேனில் ஊறவைத்தும் பாதுகாத்து உண்டு மகிழ்ந்தான். விளைந்த நெல்லை பாதுகாத்துப் பாவித்து வந்தான். நீரை விவசாயத்திற்குப் பாதுகாக்க வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் கடலில் பாயவிடாது பயன்படுத்தினான் மன்னன் பராக்கிரமபாகு.

மனிதன் எந்த நிலையிலும் கட்டுக்கடங்காமல் வீணாக மனம் போன போக்கில் செலவழித்து ஊதாரியாக வாழ்வானாயின், ஆடம்பரம் ஊதாரித்தனம் அவனை அழித்து விடுவது திண்ணம். ஆயினும் மனிதன் தன் தேவைக்கேற்ப அன்றாடச் செலவு களுக்காகப் பணம் எவ்வளவிருந்தாலும் செலவு செய்ய மனம் வராமல் வீணாகப் பூட்டி வைக்கும் போது அவன் தன் வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் இறந்து விடுவான்.

தேனீ தேனைச் சிறுகச் சிறுகச் சேமிப்பதும் எறும்புகள் படிப்படியாக புற்றுகளைக் கட்டி எழுப்பி மாரி காலத்துக்கேற்ற உணவைச் சேமிப்பதும் மாரி காலத்தில் குளங்களில் நீரைச் சேமிப்பதும் சேமிப்புக்கு உதாரணங் களாகும்.

வரவுக்கேற்ற செலவைச் செய்யாமல் கடன்பட்டு வாழ்பவர்கள் ஈற்றில் கடனாளியாக இறந்து விடுவார். ''விரலுக்கேற்ற வீக்கம்'' என்பது ஆன்றோர் வாக்கு தற்போது நிலவி வரும் Credit card பயன்படுத்துபவர்களும் அளவுக்கு மிஞ்சிக் கடன்பட்டால் வாழ்க்கை அழிவைத் தேடித்தரும். தனிப்பட்ட வாழ்க்கைக்கு சேமிப்பு எவ்வளவு முக்கியமோ தேசிய ரீதியிலும் சேமிப்பு நாட்டுக்கு ஒரு மூலதனமாக விளங்குகிறது. நாட்டின் அபிவிருத்திக்குப் பெருந்துணை புரிகிறது.

தற்போது கவர்ச்சியான வட்டி, பாதுகாப்பு, உறுதித் தன்மை போன்ற வற்றை வங்கிகள் உறுதி அளித்து பல்வேறு சலுகைகளை நல்குவதன் மூலம் மக்களின் நம்பிக்கையையும், சேமிப்புத் தன்மையையும் ஊக்குவித்து வளர்த்து வருகின்றன.

தற்போது நமது சிறார்கள் சேமிப்பின் முக்கியத்தை உணராமல் கண்டபடி கொப்பிப் பேப்பர்களில் கிறுக்கியும் கிழித்தும் பென்சில், பேனை, கொம்பாஸ் பெட்டி, புத்தகப்பை ஆகிய கற்றலுக்கு தேவையானவற்றை வீணாக் குவதும் கண்கூடு. பாடசாலை ஆசிரியர் களும் பெற்றாரும் வீட்டிலும் பாடசா லையிலும் சிக்கனத்தைப் பேணி, சேமிப்புத் தன்மையை ஊக்குவிப்பது பெரியோர் களது தலையாய கடமையாகும்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' என்பதை ஆன்றோர் சொல்லி வைத்தார்கள். கழிவுப் பொருட் களிலிருந்து அதிக செலவில்லாமல் ஆக்கங்கள் பாடசாலைகளில், முன் பள்ளிகளில் இடம் பெறுவது சிக்கனத் தையும், சேமிப் பையும் ஊக்குவிப் பதற்காக இடம்பெறுகின்றன. ''சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்'' என்ற ஆன்றோர் வாக்கின் படியும் "ஒரு துளி வெள்ளம் ஒரு ஆறாக மாறும்'' என்ற ஆன்றோர் வாக்குப் படியும் நாம் எமது பொருட்களை வீணாக்காது பணத்தை வீணாகச் செல வழிக்காது சிக்கனத் தையும், சேமிப்பையும் பேணி சுபீட்சம் அடைவோமாக!

சிக்கனம் காப்போம்
சேமிப்பில் உயர்வோம்
வாழ்வில் வளம் பெறுவோம்

**க.வைகுந்தன்**
**கண்டுவில் ஒழுங்கை,**
**சாவகச்சேரி.**





பல்லவி

தேனினிய கனிபகரும் தென்மறவ ராட்சியிலே
தூயபணி ஓங்கும் தரணிபுகழ் பாடும்

- தேனினிய

அனுபல்லவி

தானியங்கள் விளையும் தக்கவயற் புலமும்
தென்திசைக் கடலலைகள் தென்றலினால் ஆடும்

- தேனினிய

சரணங்கள்

தெங்குபனை உயர்ந்து தக்கபொருள் பகரும்
தேன்சுவை மாபலா தரும்சோலை குளிரும்
சங்குடனே சல்லாரி சேர்ந்துமணி ஒலிக்கும்
சக்திநிறை ஆலயங்கள் சீர்நெறிகள் துலங்கும்

- தேனினிய

கற்றறியும் பாலருக்கு கல்லூரி பற்பலவும்
கலைமிளிரும் சிற்பமொடு காண்பரிய தேரூரும்
பற்றுமிகு கூட்டுறவு காட்டும் பணியாவும்
பொலிவுதனைத் தருமே பூவின் நறுமணமாய்

- தேனினிய

பெருவீதி நீள்பயணம் பொருளீட்டும் பயணிகளும்
பன்முகமாய்க் கலைவளர பொன்விழா மண்டபமும்
கரும்பாகும் முத்தலங்கள் கொடுக்கும் அருள்யாவும்
கோபுரமாய் ஒளிரும் கரமிணைந்து கொள்வோமே

- தேனினிய

**ஆக்கம் : கலைமாமணி**
**கே.ஆர்.திருத்துவராஜா**
**அல்வாய் வடக்கு.**
**அல்வாய்.**

## சிறகு விரிக்க வேண்டும் சிறுவர்களே!

பூக்கள் இல்லை என்றால் - நாளை
பூமியும் இருக்காது
நீங்கள் இல்லை என்றால் - எங்கள்
நாட்டிற்கு உயர்வேது

வாடி விழும் பூவில் - என்றும்
விதைஒன்று நிலைக்காது
புன்னகை தொலைத்த முகம் - என்றும்
புதுமையைப் பெருக்காது

சின்னஞ் சிறுவர்... களே - வானச்
சிட்டுக் குருவி... களே
சிறகு விரிக்க அஞ்சி - கூட்டைச்
சிறைஎனக் கலங்குவதேன்

வானம் எமக்... கிருக்கு - போக
வாசலும் திறந்திருக்கு
சிறகுகள் விரித்... தெழுந்தால் - நாளை
சிறப்புகள் காத்திருக்கு

சிந்னை செய் மனமே - நல்ல
சீர்கொண்ட வாழ்வினை நீயடைய
போனவை போக... ட்டுமே - சோர்வுப்
போர்வையை கிழித்திட வழிபிறக்கும்

கந்தனை வேண்டி நிதம் - நீ
கல்லுக்கு பூவைத்த காலத்திலே - இனி
கடவுளை மனதில் எண்ணி - நீ உன்
கடமையைச் செய்திட முயன்றிடுவாய்

சிறக்கும் நிகழ்-----காலம் - உங்கள்
சிந்தனைச் சிறகுகள் சிறகடித்தால்
பிறக்கும் வருங்----காலம் - உங்கள்
பேர்சொல்லி ஊர்மெச்சிப் போற்றிடத்தான்

சோகம் எமக்கு இல்லை - இனிச்
சிரித்திடுமே எங்கள் வாழ்க்கை முல்லை
அறவழி கடமை செய்யின் - என்றும்
இல்லை எமக்குஇந்த வாழ்வில் எல்லை

இப்பல மொட்டுக்... களில் - நாளை
எம்மொட்டு மலருமென
அறியநி... னைப்போ... ருக்கு - உங்கள்பதில்
எல்லாம் என்றாகவேண்டும்

சேருங்கள் ஒன்றாகு... ங்கள் - உங்கள்
சிந்தனையை உயர்வாக்குங்கள்
உலகைச் செழிக்கச் செய்து - எதிர்காலம்
உயர்த்துவோம் எனக் கூறுங்கள்

ஜெ. ஜெயதாரணி
G C E (A L)
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி



## சுபீட்சத்தின் சூத்திரம் சிக்கனமே!

வளமான வாழ்வு தனை
வருவாய்க்குள் காண
சிக்கனமே சீரிய நெறியாகும்!
கடைச் சரக்குகளில் கண்டதுமே காதல்
காசினைக் கரைக்கும் வழியாகும்!

தேவைப்பட்ட தெல்லாம்
தேடிக் குவிக்காதே!
தவிர்க்க முடியாதவற்றையே
தடையின்றி வாங்கிவிடு

பணப்பையைக் குறிவைத்துப்
பவனிவரும் கழுகுகளை
பக்கத்தில் சேர்க்காமல்
பணந் தன்னைக் காப்பாற்று

தரமான உணவுண்டால்
உரமான உடல் வாய்க்கும்
அளவோடு உடை வாங்கின்
வளவாழ்வு வாய்த்து விடும்

தினமும் செலவிற்குத்
திடமாகக் கணக்கெழுது
சுபீட்ச வாழ்வுக்கான
சூத்திரத்தைக் கற்றுவிடு

இரா. ஜெயக்குமார்
**அதிபர்**
**யா/ உடுவில் மான்ஸ் த. க. பாடசாலை**



# கலாசாரம்

தாயும் தந்தையும் பணம் தேட
அக்காளும் தம்பியும் அன்பைத் தேட
வாழ்வில் என்றும் அர்த்தம் தேட
போன இடமெல்லாம் விடை தேட
தேடிப்பிடிக்க தேவாங்கு மாட்ட
தேனென்று பருக அது விசமாகப்போக
உலகமெல்லாம் இருட்டாகப் போக
நித்தம் வாழ்வு சுமையானதால்
முத்தமில்லா வினையானது - இதுவே
ஆ... ஆ... வா... வா... குறுப்பானது
சினிமாப் படம் போக சீனவெடியும்
பொங்கலா, மரணவீடா, தேர்தலா, பண்டிகையா...?
திருவிழாவென்றால் இந்துவா... கிறிஸ்த்தவமா...?
வெடியில் கலாசாரம் புரியவில்லை.

**மாவையூர்கவி**
**பா. இரமணாகரன்**
**சன்னதி வீதி.**
**இடைக்காடு.**
**அச்சுவேலி.**

## எமக்கு உதவுவோம்

ஆசானாக நானிருந்தால்...
அறிவுரைகள் கூறிடுவேன்
பாடங்களைப் பக்குவமாய்த்
பண்போடு புகட்டிடுவேன்

டாக்டராக நானிருந்தால்
நாடி பிடித்துப் பாரத்திடுவேன்
ஊக்கத்துடன் நோயாளிக்கு
ஊசி மருந்தும் ஏற்றிடுவேன்

தபால் காரனாயிருந்தால்
பொதிகள் தபால்கள் பிரித்திடுவேன்
சைக்கிளில் சென்று நானும்
தபால் பொதி கொடுத்திடுவேன்

வியாபாரியாயிருந்தால்
கடைகள் நன்றாய் நடத்திடுவேன்
பொருள்களை விற்று நானும்
நாணயமாய் நடந்திடுவேன்

பொலீஸ்காரனாயிருந்தால்
வீதியொழுங்கு பார்த்திடுவேன்
குற்றம் செய்யும் நபர்களை
கோட்டில் பிடித்துக் கொடுத்திடுவேன்

விவசாயியாயிருந்தால்
விவசாயம் செய்திடுவேன்
அரிசி, காய், கறி, பழவகைகள்
மலிவாக விற்றிடுவேன்

பூசகராய் நானிருந்தால்
கோயிற் பூசை செய்திடுவேன்
மணியொலித்து ஆரத்தியை
பணிவாகக் காட்டிடுவேன்

சமையல் காரனாயிருந்தால்
ருசியாய் நானும் சமைத்திடுவேன்
களைத்து மயங்கி வருபவர்க்கு
அணைத்து அன்னமிட்டிடுவேன்

நீதவானாய் நானிருந்தால்
நீதி மொழிகள் பதித்திடுவேன்
பொய் புரட்டு கொலை களவு
நாட்டினின்றும் துரத்திடுவேன்

**செல்வன்.க.அருட்பிரியன்**
**தரம் - 3**
**யா/ மகளிர் கல்லூரி,**
**சாவகச்சேரி.**



# சிக்கனம்

அன்று நிலா முற்றத்தில் இருந்து
பாட்டி சொன்ன கதைகள் - பல
அவை....
இன்று எம் சிந்தனையிலே
சில்லறையாய்ச் சிதறினவே

தாத்தா உழைத்துக் கொடுத்த பணத்தை
சிக்கனமாய்ச் செலவு செய்து
மீதிப்பணத்தைப்
பக்குவமாய் சேர்த்தாவாம்
சீட்டுப் பெட்டியிலே

உலையில் இடும் அரிசியிலும்
தினமும் ஒருபிடி எடுத்து
மூடல் பெட்டியிலே
மூடி வைப்பாவாம்
அன்று....
பண்டம் முதல் பணப்புழக்கம் வரை
சிக்கனத்தைக் கடைப்பிடித்தார்களாம்
இன்று...
சொட்டும் நீரிலும் சிக்கனம் இல்லையே!
சிக்கனமாய் இருந்தால் சிறப்புற்று வாழலாம்.

திரு இரத்தினசிவம் சுபேந்திரன்
ஆசிரியர்.
யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.
சண்டிலிப்பாய்.



# கிராமியப் பாடல்

கிராமியப்பாடல் :- வளம் கொழிக்கும் நம் ஊர்
தாளம் :- ஆதி
இராகம் :- மாயாமாளவகௌளை

வடமாநிலத்தின் வளங்கொள் தென்மராட்சியில்
வளமுடன் எழில்நலம் கொள்ளும் சாவகச்சேரி
திடமுள்ள மக்களின் தனித்துவம் - போற்றும்
சார்புயர் வளம்கொள்ளும் ஊராம் நம் ஊர்
(வடமாநிலத்தின்...)

நீர் வளம் நிலவளம் நெல்களி தேன்வளம்
மா பலா வாழை தென்னை பனை வளம் கொள்ளும்
கடல்வளம் முதலாய்க் கலைத்துறை உயர்வாய்
கல்வியில் உயர்வும் கலைவாணர் புகழ் கொள்ளும்
தீன்சுவை வளம் கொள்ளம் ஊராம் நம் ஊர்
(வடமாநிலத்தின்...)

இந்து கிறிஸ்தவம் இஸ்லாம் பௌத்தம் - என
நால்வகை மதங்களும் நன்னெறி ஓத
நிறைவுடன் மூவினம் நல்லறம் பாட
நாட்டின் விழுமியம் வான்வளர்ந்து ஓங்க
தகைசார் புகழ் கொள்ளும் ஊராம் நம் ஊர்
(வடமாநிலத்தின்...)

நல்வித்தை சொல்லும் கல்விக் கூடங்களும்
நயன்படப் பணிபுரியும் பல திணைக்களங்களும்
கருணையின் களமதில் வைத்தியசாலையும்
நீதியில் நிலைத்தோங்கும் நீதி மன்றும்
வர்த்தகர் வளம் கொள்ளும் வானோங்கு கட்டடமும்
காலையில் கூடும் நல்ல நாளங்காடியும்
அடைக்கலம் அளிக்கும் நல் முதியோர் இல்லமும்
ஆதியாம் மருத்துவ ஆயுள் வேதமும்
நயன்படவே மிளிரும் நவீல்ட் கல்லூரியும்
வளமுடன் புகழ் கொள்ளும் ஊராம் நம் ஊர்
(வடமாநிலத்தின்...)

திரு இரத்தினசிவம் சுபேந்திரன் (ஆசிரியர்)
யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி,
சண்டிலிப்பாய்.



## சிம் கார்டுக்குப் பின்னால் இவ்வளவு இருக்கிறதா?

"மனிதர்களின் நெருக்கடியில் இருந்து தப்பிப்பதற்கு, மொபைல் போனை ஸ்விட்ச் ஓ.்.ப் செய்வதே போதுமானதாக இருக்கிறது' என்பது ட்விட்டர் மொழி. பிரியமானவர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ளவும், பிடிக்காதவர்களிடம் இருந்து விலகி இருக்கவும் தற்போதெல்லாம் கையில் இருக்கும் ஸ்மார்ட் போனே நமக்குப் போதுமானதாக இருக்கிறது. போனில் வரும் சில அழைப்புகள் நம்மை மகிழ்ச் சியுறச் செய்யும், சில அழைப்புகள் ஆத்திர மூட்டும், சில அழைப்புக்கள் அன்பைப் பகிரும், சில அழைப்புகள் பயத்தை உண்டாக்கும். இப்படி இத்தனை விதமான உணர்ச்சிகளை செல்போனுக்குள் இருந்து நமக்கு கடத்தும் சிம் கார்டுகள் எப்படி இயங்குகின்றன தெரியுமா?

Subscriber Identification Module (SIM) என்பதன் சுருக்கம் தான் சிம். சந்தாதாரர் அடையாளத் தொகுதிக் கூறினை சிம் கார்டுக்கு தமிழ் அகராதி அர்த்தம் சொல்கிறது. தற்போது மினி, மைக்ரோ, நனோ என்றெல்லாம் பல சைஸ்களில் மொபைல் போனில் உள்ள சிம் காட்டுக்கு ஏற்ப இவை பயன்படுத்தப் படுகின்றன. 1991ஆம் ஆண்டில் முனிச் நகரில் இயங்கும் Giesecke Devrient என்ற நிறுவனம் தான் முதன்முதலாக சிம் கார்டை உருவாக்கியது. அப்போது கிரெடிட் கார்ட் போன்று இருந்த சிம் கார்டின் அளவு, அதன்பின் படிப் படியாகக் குறைக்கப்பட்டு, தற்போது விரல் நுனி அளவுக்கு சுருங்கிவிட்டது. இதனால் மற்ற உதிரிப்பாகங்களுக்கான இடவசதிகள் ஏற்பட்டன.

உலக அளவில் அதிகம் பயன்படுத்தப்படும் ஜிஎஸ்எம் போன் களுக்குத்தான் பொதுவாக சிம்கள் தேவைப்படுகின்றன. சர்வதேச கார்ட் உற்பத்தியாளர்கள் அமைப்பின் தக வலின்படி, இன்றைய திகதியில் 700 கோடிக்கும் அதிகமான டிவைஸ்கள், செல்லுலர் நெட்வெர்க்குடன் இணைக் கப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு மட்டும் சுமார் 540 கோடி சிம்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

சிம் கார்ட்டின் பின்புறம் சிறிய சிப் இருப்பதை அனைவரும் பார்த்திருப் போம். இந்த சிப்பில் தான் நெட்வெர்க் தொடர்பான தகவலும் சந்தாதாரரின் விவரங்களும் சேமிக்கப்படும். சிம் கார்ட் இல்லாமல் ஜி எஸ் எம் போனால் மொபைல் நெட்வெர்க்குடன் தொடர்பு

கொள்ளமுடியாது. மனிதனின் கைரேகை போல இந்தச் சர்வதேசத் தனித்தன்மை வாய்ந்த எண்ணானது ஒவ்வொரு சிம் கார்டுக்கும் வேறுபடும் இதன் மூலம் ஒவ்வொரு சிம் கார்டையும் உலகின் எந்த மூலையிலும் தனியாக இனம் காண முடியும். அதே போல ஒவ்வொரு சிம் கார்டிலும் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய வகையில், Authentication Key, கார்ட் லாக்கானால் அதை அன்லொக் செய்யக்கூடிய PUK எண் போன்ற விவரங்கள் இருக்கும். இவை தவிர்த்து, உள்ளூர் நெட் வெர்க் பற்றிய தற்காலிகத் தகவல், குறுஞ் செய்திகள் மற்றும் தொடர்பு எண்களையும் கூட சேமித்துக்கொள்ளும் வகையில் தற்போது சிம் கார்டுகள் கிடைக்கின்றன.

சிம் கார்டை மொபைல் போனில் செலுத்தியதும், அதில் உள்ள சர்வதேச தனித்தன்மை வாய்ந்த எண்ணையும் (IMSI), Authentication Key யையும் மொபைல் போன், நெட்வெர்க்கை அக்சஸ் செய்வதற்காக அருகே உள்ள டவருக்கு ரெக்வெஸ்ட் ஒன்றை அனுப்பும். இரண்டையும் நெட்வெர்க் பரிசோதித்து, என்கிரிப்ட் செய்யப்பட்ட தகவலை சிம் கார்டுக்கு சரிபார்க்க அனுப்பும். இத்தகவலை சிம் கார்ட் சரியாக டிகிரிப்ட் செய்த பின்னர் தான் நெட்வெர்க்கிடமிருந்து வயர்லெஸ் சிக்னல் கிடைக்கும். பொதுவாகச் புதிதாக சிம் கார்ட்டை மொபைல் போனில் செலுத்தியதும், இதனால் தான் சிக்னல் கிடைக்கச் சிறிது தாமதமாகிறது. (சிக்னல் கிடைக்க எப்போதுமே கொஞ்சம் காத்திருக்கணும்) ஒரு மொபைலில் இருந்து மற்றொரு மொபைலுக்கு மாற்றும் போதும் இதே வேலைதான் நடைபெறுகிறது. E-Sim (Embedded Sim) என்றழைக்கப்படும் Simகள் தான் எதிர்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் என நம்பப்படுகிறது. டிவைஸிலேயே பொருத்தப்பட்டு வரும் இதை, சிம் கார்டைப் போல மாற்ற முடியாது. ஆனால் மொபைல் மேலும் மெலிதாக மாற, இந்த முறை உதவும் எனக் கூறப்படுகிறது.

**தி.மயூரன் (ஆசிரியர்)**
**ஆவரங்கால் கிழக்கு,**
**புத்தூர்.**



# அந்தரித்தோர் வாழ்வுயர்த்த சந்ததமும் உழைத்து உயர்க!

### எடுப்பு

பலபல நூறு ஆண்டுகள் கண்டே
பாரினில் வாழ்க! வாழியவே!
பழனி சிக்கனக் கூட்டுற வோங்கி
பலமொடு உதவி வாழியவே!

### தொடுப்பு

வந்தணைந் தவரின் வாட்டங்கள் போக்கி
வளமுறச் செய்தாய் - வாழ்வீந்தாய்!
சுந்தரச் சேவைகள் தொடருறச் செய்தாய்
சோதனை வெல்லப் பலமானாய்!
அந்தரித் தவர்க்கு ஆகிடும் உதவிகள்
அணியுடன் செய்தாய் - அன்பீந்தாய்!
சந்ததமோங்கி சால்புடன் பழனிச்
சார்புகழ் மன்றே உயர்ந்திடுவாய்!

### முடிப்பு

பாங்குறு பழனி ஆண்டவர் ஆகும்
பாசக் குமரன் பேர் சுமந்தாய்!
தாங்கிநின் றன்பர் தளர்வுகள் தீர்த்தாய்
தாரணி போற்றும் புகழ் கொண்டாய்!
ஈங்குநின் தாள்கள் இருகரம் பற்றிடும்
இளைத்தவர் வாழ்வின் ஒளியானாய்!
ஓங்குறு நூறு ஆண்டுகள் ஓங்கி
ஒளிமய மாக வாழியவே!

பழனி சிக்கனக் கூட்டுறவுக் கடன்
பாசச் சங்கம் வாழியவே!
பழனி ஆண்டவர் பக்கத் தமர்வோய்
பகர்பணி ஆற்றி ஓங்குகவே!
இளமையின் பொலிவும் இதயத் தழகும்
இடர்களைந் துயர்த்தும் இளமாண்பும்
வழமைய தானாய் வாகுடன் பழனி
வல்லநற் தாயே வாழியவே!

கவிஞர் த.நாகேஸ்வரன்



## மழைக்காலம்/ மாரிகாலம்

காற்றடிக்குது கடல் கனைக்குது
கீற்றுமின்னல் வெட்டியடிக்குது
ஆற்று வெள்ளம் கரைபுரண்டோடுது
தூறல் மாறி மழை பெய்து கொட்டுது

அண்டம் நடுங்க இடி இடிக்குது
ஆகாய கங்கையோ நீராகக் கொட்டுது
மலை பிளக்குது மண் சரியுது
மாரி மழையோ சோவெனப் பெய்யுது

பேய் மழை புயல் வீசியடிக்குது
பேரலை மோதி விண்ணை இடிக்குது
கூவெனக் காற்று சுழன்றடிக்குது
சோவென மாரி கொட்டியடிக்குது

ஏரிகள் நிறைந்து நீரலை பாயுது
சூறைக் காற்றோ சுழன்றடிக்குது
பாறைகள் தகர்ந்து பறையடிக்குது
சோவென மாரி கொட்டியடிக்குது

மக்கள் கூட்டம் நனைந்து தவிக்குது
மரம் செடி கொடி ஆட்டமடிக்குது
மண்டுகம் மழையில் சங்கீதம் பாடுது
மாரி மழையோ சோவெனப் பெய்யுது

எம். ஸ்ரேயா
**தரம் - 05**
**கலைமகள் இன்ரநஷனல் பாடசாலை.**
சாகச்சேரி.

## My friend

My friend is a quiet one
One in silence in a corner
Her grades are average
No smile in her face
Her mother died
She's the eldest child
Her father is always drunk
Lost in his wife's sorrow
Her siblings are with her
She cooks cleans and services for them
She acts as their mother
She cries in her pillow every night
Weeping for her mother
But she is strong and silent
Because her father and siblings
Need her selfless service
She is invincible!

**M.Sreya**
**Jssmine Cottage**
**25, Dutch Road**
**Chavakachcheri.**

## உணவு பழக்கம் பழமொழி வழவில்

01) சீரகம் இல்லா உணவு சிறக்காது.
02) தன் காயம் காக்க வெங்காயம் போதும்.
03) வாழை வாழ வைக்கும்.
04) அவசர சோறு ஆபத்து.
05) இரப்பை புண்ணுக்கு எலுமிச்சைச் சாறு.
06) இரத்தக் கொதிப்புக்கு அகத்திக் கீரை.
07) இருமலைப் போக்கும் வெந்தயக் கீரை.
08) உண்ணா நோன்பு ஆயுளைக் கூட்டும்.
09) உஷ்ணம் தவிர்க்கக் கம்பங்களி.
10) கல்லீரல் பலம் பெறக் கொய்யாப் பழம்.
11) கொலஸ்ட்ரோல் குறைக்கப் பன்னீர் திராட்சை.
12) சித்தம் தெளிய வில்வம்.
13) சிறுநீர்க் கடுப்புக்கு அன்னாசி.
14) சூட்டைத் தணிக்கக் கருணைக் கிழங்கு.
15) ஜீரண சக்திக்குச் சுண்டைக்காய்.
16) தலைவலி நீங்க முள்ளங்கிச் சாறு.
17) தேனுடன் இஞ்சி இரத்தத் தூய்மை.
18) பூண்டில் இருக்கு பென்சிலின் சக்தி.
19) மூல நோய் தீர வாழைப்பூக் கூட்டு.
20) வாந்திக்கு மருந்து மணத்தக்காளி.
21) வாத நோய் தடுக்க அறக்கீரை.
22) வாய்த் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்.
23) பருமன் குறைய முட்டைக்கோஸ்.
24) பித்தம் தணிக்க நெல்லிக்காய்.
25) குடற்புண் நலம் பெற அகத்திக்கீரை.

## வருட நிறைவில் கொண்டாடப்படும் விழாக்கள்

முதல் வருட நிறைவு - காகித விழா
இரண்டுவருட நிறைவு - பருத்தி விழா
மூன்று வருட நிறைவு - தோல் விழா
நான்கு வருட நிறைவு - மலர் மற்றும் பழ விழா
ஐந்து வருட நிறைவு - மர விழா
ஆறு வருட நிறைவு - இரும்பு வழா
ஏழு வருட நிறைவு - செம்பு விழா
எட்டு வருட நிறைவு - வெண்கல விழா
ஒன்பது வருட நிறைவு - மண்கலசவிழா
பத்து வருட நிறைவு - தசர விழா
பதினொரு வருட நிறைவு - எ.்.கு விழா
பன்னிரெண்டு வருட நிறைவு - லினன் விழா
பதின்மூன்று வருட நிறைவு - பின்னல் விழா
பதின்நான்கு வருட நிறைவு - தந்த விழா
பதினைந்து வருட நிறைவு - படிக விழா
இருபது வருட நிறைவு - பீங்கான் விழா
இருபத்தைந்து வருட நிறைவு - வெள்ளி விழா
முப்பது வருட நிறைவு - முத்து விழா
நாற்பது வருட நிறைவு - மாணிக்க விழா
ஐம்பது வருட நிறைவு - பொன் விழா
அறுபது வருட நிறைவு - வைர/மணி விழா
எழுபத்தைந்து வருட நிறைவு - பவள விழா
எண்பது வருட நிறைவு - அமுத விழா
நூறு வருட நிறைவு - நூற்றாண்டு விழா

மா. நாகதர்சிகன்
தரம் - 09
யாழ்ப்பாணக் கல்லூரி



## இன்றே எழுந்து விடு!

ஆங்கிலத்தில் தானே தோற்றாய்
தோல்வியில் துவளாதே
சோர்வைத் தழுவாதே.

இடறல் இன்றி வெற்றியானால்
அதிக சந்தோசமில்லை
போராடி விழுந்து களைத்த பின்
மீண்டும் எழுந்து போராடி
பெறுகின்ற இன்பம் அளப்பெரியது.

எனவே சோர்வுறாதே
கண்ணீரைத் துடைத்தெறி
சிரி - சிந்தி - செயற்படு
தோல்வியில் துவளாதே
உனக்குள்ளே உற்றுப்பார்
தோல்வியையும் கண்ணீரையும்
வெற்றிக்கு உரமாக்கு
தேர்வு என்னும் பாலை நிலைத்தில்
ஆங்கில பாடத் தோல்வியை
கானல் நீராகக் கொள்
"வெற்றி" எனும் பூங்கனிச் சோலை
கூப்பிடு தூரத்தில் தான் உள்ளது.
எனவே சோர்வின்றிப் படித்துவிடு - வெற்றி உன்கைகளில்
துணிவை உணவாகக் கொண்டு
தளர்வைத் தவிர்த்துவிடு
கணனியை வடிவமைத்தவர்
பல முறை சறுக்கினர்
விமானத்தை வடிவமைத்தவர்
பல முறை விழுந்தெழும்பினர்
போரில் தோற்றவர்
பல முறை தோல்வியுற்றனர்
தடைக்கல்லை படிக்கல்லாக்கு
தோல்வியை வென்று விடு
வெற்றி பெற்று வரலாறு படைத்து விடு
வெற்றி மாலை உனதே
வென்றால் காலமகள் கைகொடுப்பாள்
நேரத்தைச் சிக்கனமாகக் கடைப்பிடி
நேரம் பொன்னானது
உழைத்தால் கிடையாதது ஒன்றில்லை
எனவே இன்றே எழுந்து விடு.

தி.மிதுலா
டச் வீதி சாவகச்சேரி



# For My Father

For my Father
You have always been
Through the good times and the bed,
Your understanding I have had.
A gentle man at heart,
This sets you apart,
From the others I've seen,
You are so müch to me.
The laughter we have shared,
Cannot be compared.
The tears l have shed,
As you lovingly nodded your head.
You have always been there,
With a smile and a hug.
A precious gift from our god up above.
The times that l have been down and sad,
Your silly ways always make me glad.
You gave me strenth to carry on,
Even when all hopes seemed to be gone.
The lessons in life that I have learned,
Are from your genuine love and concern.
With deep appreciation for all you have done.
You, dad, you are my number one.

**Abirami Muththulingam**
**HND Business Management Student,**
**Hensman Road,**
**Chavakachcheri.**



# இருபத்தைந்தாவது அகவையில் சிக்கன கடனுதவி

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி
- நன்நகரில்
தன்னிகரில்லாச் சிக்கனக் கடனுதவியே
இருபத்தைந்தாவது அகவையில் வாழிய நீ
- வாழியவே

வாழ்த்துகின்ற மக்கள் நாம் மனம் விரும்பும்
- சிக்கன சோலை
சந்தனமாய் மணம் வீசியே வழிகாட்டும்
- சிக்கன கடனுதவியே
இருபத்தைந்தாவது அகவையில் வாழிய நீ வாழியவே

முத்து முத்தான சிக்கன திட்டங்களை
சிக்கனம் சிக்கனமான கடனுதவியை
தந்து உதவும் சிக்கன கடனுதவியே
இருபத்தைந்தாவது அகவையில் வாழிய நீ
- வாழியவே

இரத்தினமாய் முகம் மலர்ந்த உறுப்பினர்களை
தரணி போற்ற வாழவைக்கும் கடனுதவியே
இருபத்தைந்தாவது அகவையில் வாழிய
- நீ வாழியவே

சா.ராஜினி
பெரிய அரசடி,
சாவகச்சேரி.

# எமது பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

தனியொரு மனிதன் குடும்பமாகி, பல குடும்பங்களுடன் சேர்ந்து வாழும் போது சமூகமயமாகின்றான். பல சமூக ங்கள் ஒன்றிணைந்து வாழும் போது தனிக் கிராமம் ஆகிறது. பல கிராமங்கள் ஒன்றிணைந்து வாழும் போது ஒரு தனி நகராகிறது. பல நகரங்களின் ஒன்றிணைப்பே ஒரு தனி நாடாகிறது.

எனவே தனிமனிதருக்குள் தனிச் சமூகங்களுக்குள், தனிக்கிராமங்க ளுக்குள், தனிநகரங்களுக்குள், தனி நாடுகளுக்குள் பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர ஒற்றுமை, பரஸ்பர ஒருங் கிணைப்பு அமைதியான வாழ்க்கைக்கு அவசியமாகிறது.

கூட்டுக் குடும்பம், கூட்டுக்கிராமம், கூட்டுநகரம் இப்படியாகக் கூட்டுறவு முறையில் வாழும் போது, சமூக விழுமியங்கள் சமூக ஒழுக்கங்கள் சமூகக் கட்டுப்பாட்டு முறைகள் சமூக ஒற்றுமை உறவு நன்கு பேணப்பட்டு, ஒரு கட்டமைப்பாகி விடும் போது அங்கு சமூகச் சீரழிவுகளுக்கு இடமே இருக்காது.

எனவே சிக்கன கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் சமூக விழுமியங்களுக்கு அமைவாக தமது வருமானத்தில் சிறுகச் சிறுகச் சேமித்து மாதந்தோறும் ஒன்று கூடி தமக்கும் பிறருக்கும் உதவும் வழியில் சேமிப்புச் செய்து வருகிறார்கள். பணக்கஷ்டம் ஏற்படும் போது உறுப் பினர்களுக்கும் அவர்தம் குடும்பத் தினருக்கும் இல்லை எண்ணாது உற்ற நேரத்தில் உற்ற நண்பனாகக் கைகொடு க்கும் சங்கமாக இச்சங்கம் விளங்குகிறது.

மேலும் பிள்ளைகளின் ஒவ்வொரு வளர்ச்சிப்படியிலும், 5ம் வகுப்பு புலமைப் பரீட்சையிலும், G.C.E O.L, A.L பரீட்சைகளிலும் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்விலும் சித்தி யடைந்தவர்களுக்கும் ஊக்குவிப்பு பணப்பரிசு வழங்கிப் பாராட்டும் சங்கமாக இது விளங்குகிறது.

எனவே இச் சங்கம் தென்மராட்சி சாவகச்சேரிப் பகுதியில் மேன் மேலும் பல்வேறு திட்டங்கள் வகுத்து, இனி வருங்காலத்திலும் சேவையாற்றும் என்பதில் ஐயமே இல்லை எனலாம்.

**ஆக்கம் :-**
S.J. **கேதீஸ்**
**23. டச் வீதி.**
**சாவகச்சேரி.**

# ஆழ்ந்த கவனம்
# (சிறுகதை)

மணியும் சந்திரனும் 5ஆம் வகுப்பில் படித்து வந்தனர். இருவரும் இணைபிரியாத நண்பர்கள். ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை எல்லாம் மிகவும் கவனமாகக் கேட்டு மனதில் நன்றாகப் பதியவைத்துக் கொள்ளும் இயல்புடையவன் மணி.

சந்திரனோ மணிக்கு நேர்மாறானவன். பாடவேளையின் போது ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதைக் கவனியாமல் பக்கத்தில் அமர்ந்திருக்கும் மாணவர்களுடன் அரட்டை அடிப்பதும், அங்குமிங்கும் பார்ப்பதுமாகப் பொழுதைப் போக்குவான். ஆசிரியர் கவனிக்கும் போது பாடத்தைக் கவனிப்பது போல் பாசாங்கு செய்வான். அப்படிப் பாடங்களைக் கேட்டாலும், அரை குறையாகவும், அலட்சியமாகவும் கேட்பான். வீட்டில் காலை படிக்கும் போது கூட கவனத்தை சிதறவிடுவான். இதனால் அவனுக்குத் தேர்வுகளில் மதிப்பெண்கள் குறைவாகவே கிடைத்தன.

ஒரு நாள் கணித ஆசிரியர் "சந்திரா நீ படாத பாடுபட்டுப் படித்தேன் என்றாயே கணித பாடத்தில் மிகவும் குறைவான மதிப்பெண்ணல்லவா வாங்கியிருக்கின்றாய்?" என்றார். "சேர் நான் விழுந்து விழுந்து தான் படித்தேன். விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்து படித்தேன் ஏனோ என் மண்டைக்குள் ஏற மாட்டன் என்கிறது சேர்" என்றான் சந்திரன்.

அப்படி இல்லைச் சந்திரன் மணியைப் போல் நீ படிப்பில் கவனம் செலுத்தினால் நிச்சயம் அதிக மதிப்பெண்கள் வாங்குவாய் என்றார். "நான் படிப்பில் கவனமில்லை என்று எப்படி சொல்லுவீங்கள் சேர்" என்று கேட்டான் சந்திரன். "சரி அப்படி என்றால் இப்போ ஒரு சின்னச் சோதனை வைக்கின்றேன். அதில் நீ வெற்றியடைந்தால் உனக்கு ஞாபகசக்தி அதிகம் என்பதை ஒப்புக் கொள்கின்றேன்" என்றார் கணித ஆசிரியர். "சரி சேர்" என்றான் சந்திரன்.

ஆசிரியரும் "உழுந்து இருந்தால் வடை சுடலாம், ஆனால் எண்ணை இல்லை. இவற்றில் எது இல்லை? எங்கே டக்கென்று பதில் சொல்" என்றார். சந்திரன் உடனே தாமதிக்காமல் 'உழுந்து இல்லை' என்றான். ஆசிரியர் மணியைப் பார்த்து "எங்கே மணி நீ சொல் பார்ப்போம் என்றார். மணி "இரண்டுமே இல்லை சேர்" என்றான்.

"சந்திரா உன்னிடம் கவனக் குறைவு உள்ளது. "நான் கூறிய கேள்வியை நீ நன்றாக புரிந்து கொள்ளவில்லை. 'உழுந்து இருந்தால்' என்னும் போது வெளிப்படையாகவே எண்ணை இல்லை என்னும் பொருள் மறைந்து நிற்கின்றது. 'எண்ணை இல்லை எனும் போது வெளிப்படையாகவே உழுந்து இல்லை என்று தெரிகின்றது. என்ன இல்லை? என்பது தான் கேள்வி. நீ நன்றாக புரிந்து கொண்டு கவனமாகப் புரிந்து கொண்டிருந்தால் இரண்டுமே இல்லை என்ற பதிலைக் கூறியிருப்பாய். ஆனால் சந்திரன் "ஆகவே நீயும் கேள்வியைக் கவனமாகப் புரிந்து கொண்டு பதிலைக் கூறவேண்டும்" என்றார்.

அப்போதுதான் சந்திரனுக்கு புரிந்தது ஆழ்ந்த கவனம் கல்வி வளர்ச்சிக்கு அடிப்படை என்று, ஆசிரியர் கூறியதைக் கேட்ட சந்திரன் தன்னிடமுள்ள குறைபாட்டை உணர்ந்து கொண்டான். ஆகவே மாணவர்களாகிய நாமும் ஆசிரியர் பாடங்களை கற்பிக்கும் போது ஆழ்ந்த கவனத்துடன் கவனிப்போமானால் கல்வியில் முன்னேறலாம்.

**சி.பிரவீன்**
**கண்டுவில் ஒழுங்கை.**
**சாவகச்சேரி.**



## வீட்டுப்பாடங்களில் பெற்றோரின் பங்களிப்பு

பாடசாலைகளில் ஆசிரியர் ஒரு வகுப்பில் இருக்கும் எல்லா மாணவர் களுக்கும் பொதுவாகத்தான் பாடங் களை விளங்கப்படுத்துவார். அந்தப் பாடம் சம்மந்தமான பயிற்சிகளையும் கொடுப்பார். அதில் ஒவ்வொரு பிள்ளை களுக்கும் கிரகிக்கும் தன்மை வேறுபடும். ஆசியருக்குத் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு பிள்ளைக்கும் விளங்கிக் கொண்டதா இல்லையா என அறிந்து கொள்ள நேரம் கிடையாது. விளங்காத பிள்ளைகள் ஆசிரியரிடம் விளக்கத்தைக் கேட்டுக் கொள்வார்கள். சில சமயம் விளங்காமலே போய்விடும். இங்குதான் வீட்டுப் பாடங்களில் பெற்றோர் தத்தம் பிள்ளைகளின் தேவைக்கேற்ப பங்களிப்பு வழங்க வேண்டிய கட்டாயம் வருகின்றது.

ஆசிரியர் சில பாடங்களைப் படிப்பிக்கும் போது, ஆழமாகப் படிப் பிக்கும் போது ஆழமாகப் படிப்பிக்க வேண்டிய தேவை இல்லாவிடின் தேவையான அளவிற்கு மேலோட்ட மாகவே படிப்பிப்பார். அதற்குரிய பயிற்சிகளை வீட்டுவேலையாக கொடு ப்பார். வீட்டுப்பாடங்களில் செய்யும் பயி ற்சியே பிள்ளைக்கு ஆழமான அறிவையும் கூடுதலான விளக்கத்தையும் தரும். ஆதலால் பிள்ளைகள் வீட்டுப் பாடம் செய்வதை பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளை களின் திறமையைக் கருத்திற் கொண்டே அவர்களை அணுக வேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்கும் கிரகிக்கும் தன்மை அறிவுத்திறன் என்பன வேறுபடும். இதனால் நாம் படிப்பில் கெட்டித்தனமாக இருக்கும் சக மாணவர்களுடன் ஒப்பிட்டு "நீ ஏன் அவனைப் போல் படிக்கவில்லை. ஒரே வகுப்பில் தானே படிக்கின்றீர்கள்? ஒரே ஆசிரியர் தானே படிப்பிக்கின்றார். நீ மட்டும் ஏன் குறைய மதிப்பெண்களை பெற்றாய்! என வெருட்டுவதில் பிள்ளைக்கு வெறுப்புத்தான் வரும். படிக்காத பெற்றோர் தன் பிள்ளை யாவது படிக்கட்டுமே என்ற ஆதங் கத்தில் பிள்ளைகளைக் கடும் வார்த்தைப் பிரயோகங்களால் அதட்டுகின்றனர். அதட்டுவது மிகவும் கண்டிக்கத்தக்க விடயமாகும். "இப்போ நீ நன்றாக படிக் காவிட்டால் பின்னுக்கு எங்களைப்போல் கஸ்ரப்பட வேண்டியதுதான். உன் எதிர்காலம் போராட்ட மாகத்தான் இருக்கும்." இப்படி அடிக்கடி சொல்லும் போது, பிள்ளைகளுக்கு உற்சாகம் அகன்று படிப்பில் வெறுப்புத்தான் வரும். இதனால் நான் மொக்கு எனக்குப் படிக்க வராது எனப் பற்பல பிரச்சினைகளை எதிர்கொள்வார்கள். இதனால் பெற் றோர்கள் தங்கள் எதிர்பார்ப்பை பிள்ளைகளில் திணிக்காது அவர் களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்பட என்ன செய்ய வேண்டுமென மட்டும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். சுமாரான அறிவுள்ள பிள்ளையாய்ப் பெரிது படுத்தி பாராட்டு மழையில் மயங்க வைக்க வேண்டும். இதனால் பிள்ளைகள் பெற்றோரை மகிழ்விக்க

வேண்டுமென்ற எண்ணத்தில் வீட்டுப் பாடங்களைத் தேடித்தேடிச் செய்வார்கள்.

அதைவிட்டு, பிள்ளை வீட்டுப் பாடத்தைப் செய்யப் பின்னடித்தால் ''பிள்ளை கொஞ்சம் களைப்பாய் இருக்கின்றீர்கள் போல, என்ன குடிக்கப் போகிறீர்கள் கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துவிட்டு படியுங்கோ" என்று அவர்கள் போக்குக்கு விட்டுப் பிடிக்க வேண்டும். இதைவிட்டு ''4மணியாகிவிட்டது. இன்னும் புத்தகம் தொடவில்லை. புத்தகத்தை எடுத்துக் கொண்டு மேசைக்கு போகவும்'' என கட்டளையிட்டால் எந்தப் பிள்ளைதான் விரும்பிப் படிக்கும். தானாக படிக்க வராதவிடத்து படிப்பு ஏறாது. இச்சந்தர்ப்பங்களில் பெற்றோராகிய நாம் பக்குவமாகக் கையாள வேண்டும். நாம் நேரடியாக செயலில் இறங்காமகல் அவர்களின் மனதை இலேசாக்கிப் பெற்றோருடன் இணைந்து செயல்படக்கூடிய மாதிரி ஒரு பிணைப்பை ஏற்படுத்தி, அவர்களைப் படிக்க வைக்க வேண்டும். மேலும் பிள்ளைகளின் திறமைக்கேற்ப வீட்டுப் பாடங்களை ஆழமாகப் படிப்பிக்கலாம்.

இங்குதான் பெற்றோரின் அறிவாற்றல் தேவைப்படுகின்றது. பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்புவதோடு மட்டும் பெற்றோரின் கடமை தீர்ந்துவிடாது. எப்போதும் பிள்ளைகளை தமது மேற்பார்வையில் வைத்து அருகாமையிலிருந்து மனத்தைரியத்தைக் கொடுக்க வேண்டும். நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம். இன்றைய பிள்ளைகளே நாளைய சமுதாயத்தின் தூண்கள். அத்தூண்களைச் செதுக்கும் சிற்பியாகிய பெற்றோர்களாகிய நாம் எமது பரம்பரையின் பெயரும் பெருமையும் நிலைக்க, எமது இனத்தின் கலையும் பண்பாடும் பெருமைகளும் மேலோங்க, பொறுப்புணர்வுடன் கடமை செய்வோமாக!

**திருமதி.லலித்தாரணி.இரவீந்திரன்.**
**(சித்த ஆயுர்வேத வைத்தியர்)**
D.A.M, (R.I.M.P), D.AC



# சாப்பிட்ட பின் எப்போது குடிதண்ணீர் குடிக்கலாம்

சிறுநீரையும், மலத்தையும் அடக்கக்கூடாது. சிறுநீர் 4 மணி நேரத்துக்கு ஒருமுறையும், மலம் காலை, மாலை இருவேளையும் கழிக்க வேண்டும். ஒரு நாளைக்கு 3 லீற்றருக்குக் குறையாமல் தண்ணீர் குடிக்க வேண்டும். குளிர் காலங்களில் 2 லீற்றர் தண்ணீர் குடிக்கக் கூடாது. சாப்பிட்ட பின் குறைவாகக் தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பிட்டு ஒரு மணி நேரத்திற்குப்பின் தேவையான அளவைத் தேவையான நேரத்தில் குடிக்க வேண்டும். நொறுக்குத் தீனி சாப்பிடக் கூடாது. குறிப்பாக பைகளில் அடைத்து பதப்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட நொறுக்குத் தீனிகளை முற்றாகத் தவிர்க்க வேண்டும். உடல் பருமனுக்கும், பல்வேறு நோய்களுக்கும் அதுவே காரணம். கருவுற்ற பெண்கள், பாலூட்டும் பெண்கள் நொறுக்குத் தீனியை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

வாய் ருசிக்காக வீட்டில் செய்யும் நொறுக்குத் தீனிகளைக் குவைாகச் சாப்பிடலாம். அதிலும் உப்பு அதிகம் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சாப்பிடும் போது இடையிடையே குடிதண்ணீர் அருந்தக்கூடாது. சிலர் சாப்பிடும் போது அடிக்கடி குடிதண்ணீர் குடிப்பர். அது நல்லதல்ல. நாம் உணவு உண்ணத் தொடங்கியதுமே, சமிபாட்டுக்குரிய சுரப்பிகள் சுரக்கத் தொடங்கும். அப்போது உணவோடு தண்ணீரையும் அருந்தினால், அத்தண்ணீர் சமிபாட்டு நீர்களுடன் சேர்ந்து உணவுச் சமிபாட்டைப் பாதிக்கும்.

உண்ணும் போது சில நேரங்களில் கட்டாயம் தண்ணீர் அருந்த வேண்டிவரும். அப்போது, அளவோடு சிறிதளவு தண்ணீர் அருந்தலாம். மற்ற நேரங்களில் குடிதண்ணீர் வேண்டியளவு அருந்தலாம். ஒரு நாளைக்கு மூன்று லீற்றருக்குக் குறையாமல் குடிதண்ணீர் குடிப்பதில்தான் எமது ஆரோக்கியம் அடங்கியுள்ளது என்பதை ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும். நம் உடலில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீர் உள்ளது.

உடலிலுள்ள கலங்களுக்கு உயிர்வளியைக் (ஒட்சிசன்) கொண்டு செல்வது தண்ணீர்தான். எமது உடலில் தட்பவெப்ப நிலையைச் சீராக வைக்கத் தண்ணீர் அவசியம். போதிய அளவு தண்ணீர் குடிக்கவில்லையென்றால் சிறுநீரகம் பாதிக்கப்படும். உடல் முழுவதும் பாதிப்படையும். மூட்டுக்கள் தேயும், மலச்சிக்கல் ஏற்படும், மூளையின் செயல்பாட்டுக்கு முதன்மையானது தண்ணீர். குடிதண்ணீர் சரியாகக் குடிக்கவில்லை என்றால் மூளையின் செயற்பாடு குறையும். தலைவலி, மயக்கம் போன்றவையும் உடற்சோர்வும் ஏற்படும்.

**ஆக்கம்**
**சி.பிரசன்னா**
**கண்டுவில் ஒழுங்கை,**
**சாவகச்சேரி.**

## கடந்த 25 வருடங்கள் சங்கத்தை வழிநடாத்திய நிர்வாக உறுப்பினர்களின் விபரங்கள்

| 24.10.1992ல் ஆரம்பம் | தலைவர் | செயலாளர் | பொருளாளர் | உப தலைவர் | நிர்வாக உறுப்பினரகள் |
|---|---|---|---|---|---|
| 24.10.1992 - 31.10.1993 | இ.இராஜகுலசிங்கம் | ம.விவேகானந்தன் | சி.ரவீந்திரநாதன் | க.இரத்தினசோதி | பா.சரஸ்வதி, ந.மாலாவதி, வி.அனுசூயா |
| 01.01.1994 - 31.12.1994 | இ. இராஜகுலசிங்கம் | ம.விவேகானந்தன் | சி.ரவீந்திரநாதன் | க.இரத்தினசோதி | சி.மகாலிங்கம், பா.கோமதி வி.அனுசூயா |
| 01.01.1995 - 31.12.1995 | இ.இராஜகுலசிங்கம் | ம.விவேகானந்தன் | சி.ரவீந்திரநாதன் | க.இரத்தினசோதி | சி.மகாலிங்கம், பா.கோமதி வி.அனுசூயா |
| 01.01.1996 - 31.12.1996 | இ.இராஜகுலசிங்கம் | ம.விவேகானந்தன் | சி.ரவீந்திரநாதன் | க.இரத்தினசோதி | சி.மகாலிங்கம், பா.கோமதி வி.அனுசூயா |
| 01.01.1997 - 31.12.1997 | சி. ரவீந்திரநாதன் | ம.விவேகானந்தன் | க.இரத்தினசோதி | க.நடராசா | த.குமாரதேவி, மு.தவமணி வை.ரவீந்திரராணி |
| 01.01.1998 - 31.12.1998 | சி.ரவீந்திரநாதன் | ம.விவேகானந்தன் | க.இரத்தினசோதி | க.நடராசா | த.குமாரதேவி, மு.தவமணி வை.ரவீந்திரராணி |
| 01.01.1999 - 31.12.1999 | சி.ரவீந்திரநாதன் | ம.விவேகானந்தன் | க.இரத்தினசோதி | ச.உ ருத்திராதேவி | ஆ.சிவபாலச்சந்திரன், த.குமாரதேவி, வை.பரிமளம் |
| 01.01.2000 - 31.12.2000 | சி.ரவீந்திரநாதன் | வை.பரிமளம் | க.இரத்தினசோதி | ச.உ ருத்திராதேவி | ஆ.சிவபாலச்சந்திரன், த.குமாரதேவி, கீ.மகேஸ்வரியம்மா |
| 01.01.2001 - 31.12.2001 | ச.உ ருத்திராதேவி | ம.விவேகானந்தன் | கீ.மகேஸ்வரியம்மா | ஆ.சிவபாலச்சந்திரன் | வி.அன்னபூரணாதேவி, வை.பரிமளம், சி.இராசையா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01.01.2002 - 31.12.2002 | ச.உ_ருத்திராதேவி | ம.விவேகானந்தன் | கீ.மகேஸ்வரியம்மா | ஆ.சிவபாலச்சந்திரன் | வி.அன்னபூரணாதேவி, சி.இராசையா, இ.அனுஷா |
| 01.01.2003 - 31.12.2003 | பெ.சண்முகநாதன் | ம.விவேகானந்தன் | கீ.மகேஸ்வரியம்மா | ஆ.சிவபாலச்சந்திரன் | நி.நளாயினி, கி.மனுநீதி, வை.பரிமளம் |
| 01.01.2004 - 31.12.2004 | ச.உ_ருத்திராதேவி | வை.பரிமளம் | வி.விமலாம்பிகை | கி.மனுநீதி | கி.கேமடாலினி, மு.கயலினி, ச.கனகரத்தினம் |
| 01.01.2005 - 31.12.2005 | பெ.சண்முகநாதன் | வை.பரிமளம் | வி.விமலாம்பிகை | கி.மனுநீதி | இ.அனுஷா, மு.கயலினி, கு.சரஸ்வதி |
| 01.01.2006 - 31.12.2006 | வை.பரிமளம் | மு.கயலினி | வி.விமலாம்பிகை | ச.உ_ருத்திராதேவி | ச.கீர்த்திகா, நி.நளாயினி, து.பரமேஸ்வரி |
| 01.01.2007 - 31.12.2007 | வை.பரிமளம் | மு.கயலினி | வி.விமலாம்பிகை | இ.அனுஷா | நி.நளாயினி, ச.கீர்த்திகா, கு.சரஸ்வதி |
| 01.01.2008 - 31.12.2008 | வை.பரிமளம் | மு.கயலினி | வி.விமலாம்பிகை | இ.அனுஷா | கோ.அருள்தேவி, ப.ஸ்ரீகாந்தரூபி கு.சரஸ்வதி |
| 01.01.2009 - 31.12.2009 | சூ.நந்தாயினி | அ.ஸ்ரீதுசாந்தி | ம.விவேகானந்தன் | வை.பரிமளம் | மு.வதனாதேஸ்வரி, நி.நளாயினி, கு.சரஸ்வதி |
| 01.01.2010 - 31.12.2010 | ச.உ_ருத்திராதேவி | அ.ஸ்ரீதுசாந்தி | ம.விவேகானந்தன் | வை.பரிமளம் | நி.நளாயினி, கு.சரஸ்வதி, ப.ஸ்ரீகாந்தரூபி |
| 01.01.2011 - 31.12.2011 | ம.விவேகானந்தன் | அ.ஸ்ரீதுசாந்தி | ப.ஸ்ரீகாந்தரூபி | சூ.நந்தாயினி | சி.நந்தினி, இ.தர்சினி, வை.பரிமளம் |
| 01.01.2012 - 31.12.2012 | ம.விவகானந்தன் | து.சுஜீத்தா | ப.ஸ்ரீகாந்தரூபி | வை.பரிமளம் | உ_.மகிந்தா, அ.ஸ்ரீதுஷாந்தி சூ.நந்தாயினி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01.01.2013 - 31.12.2013 | ப.ஸ்ரீகாந்தரூபி | வி.பிரதீபா | சி.நந்தினி | வி.விமலாம்பிகை | பி.சுரேக்கா, வை.துஷ்யந்தி, சு.கேமினி |
| 01.01.2014 - 31.12.2014 | ப.ஸ்ரீகாந்தரூபா | து.சுஜீத்தா | சி.நந்தினி | வி.விமலாம்பிகை | பி.சுரேக்கா, வி.பிரதீபா, து.பரமேஸ்வரி |
| 01.01.2015 - 31.12.2015 | சி.நந்தினி | வை.துஷ்யந்தினி | அ.ஸ்ரீதுஷாந்தி | வி.விமலாம்பிகை | சு.வசந்தமாலா, ப.ஸ்ரீகாந்தரூபி, மு.வதனாதேஸ்வரி |
| 01.01.2016 - 31.12.2016 | சி.நந்தினி | இ.லலித்தாராணி | வி.விமலாம்பிகை | து.பரமேஸ்வரி | வி.பிரதீபா, கு.சரஸ்வதி, ம.மேரி அல்பினா |
| 01.01.2017 - 31.12.2017 | ம.விவேகானந்தன் | இ.லலித்தாராணி | ப.ஸ்ரீகாந்தரூபி | சி.நந்தினி | பி.சுரேக்கா, ம.மேரி அல்பினா, மு.அபிராமி |

ஓம் முருகா

# ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

## டச் வீதி – சாவகச்சேரி

## கடந்த 25 வருடகால கணக்காய்வு விபரங்கள்

| கணக்காய்வுக் காலம் | கணக்காய்வாளர் | இலாபம் | நட்டம் |
|---|---|---|---|
| 24.10.1993 - 31.12.1993 | திருமதி.பி.சண்முகம் | 728.30 | - |
| 01.01.1994 - 31.12.1994 | திருமதி.பி.சண்முகம் | 6770.17 | - |
| 01.01.1995 - 31.12.1995 | திருமதி.பி.சண்முகம் | 7079.15 | - |
| 01.01.1996 - 31.12.1996 | திருமதி.பி.சண்முகம் | 9912.80 | - |
| 01.01.1997 - 31.12.1997 | திரு.மா.தயாகுமாரன் | 6554.89 | - |
| 01.01.1998 - 31.12.1998 | திரு.மா.தயாகுமாரன் | 18941.91 | - |
| 01.01.1999 - 31.12.1999 | திரு.மா.தயாகுமாரன் | 6986.01 | - |
| 01.01.2000 - 31.12.2000 | திருமதி.சி.சிவயோகினி | - | 9375.18 |
| 01.01.2001 - 31.12.2001 | திரு.மா.தயாகுமாரன் | - | 7199.16 |
| 01.01.2002 - 31.12.2002 | திரு.மா.தயாகுமாரன் | 26093.31 | - |
| 01.01.2003 - 31.12.2003 | செல்வி.த.மாலினி, | - | - |
| | திரு.வி.சிவமாலன் | 15143.89 | - |
| 01.01.2004 - 31.12.2004 | திரு.க.விஸ்ணுகரன் | 3694.49 | - |
| 01.01.2005 - 31.12.2005 | செல்வி.ஜெ.குமுதாஜினி | 14324.42 | - |
| 01.01.2006 - 31.12.2006 | திரு.சீ.சபேசன் | 23376.64 | - |
| 01.01.2007 - 31.12.2007 | திரு.வி.சிவபாலன் | - | 39223.89 |
| 01.01.2008 - 31.12.2008 | திருமதி.மு.ஷர்மிளா | 55.06 | - |
| 01.01.2009 - 31.12.2009 | திருமதி.மு.ஷர்மிளா | 6102.64 | - |
| 01.01.2010 - 31.12.2010 | திரு.பா.மு.முகமட் நஸ்ரின் | 6971.34 | - |
| 01.01.2011 - 31.12.2011 | திரு.ஐ.மயூரன் | - | 828.46 |
| 01.01.2012 - 31.12.2012 | செல்வி.கோபிகா கனகலிங்கம் | - | 1102.36 |
| 01.01.2013 - 31.12.2013 | செல்வி.கோபிகா கனகலிங்கம் | 3094.40 | - |
| 01.01.2014 - 31.12.2014 | திருமதி சாதனா செந்தில்குமரன் | 1453.18 | - |
| 01.01.2015 - 31.12.2015 | செல்வி.கோபிகா கனகலிங்கம் | 9140.61 | - |
| 01.01.2016 - 31.12.2016 | ஜனாப்.பா.மு.முகமட் நஸ்ரின் | - | 20689.33 |
| 01.01.2017 - 31.12.2017 | கணக்காய்வு 31.12.2017ல் நடைபெறும் | | |

# நிர்வாக உறுப்பினர்கள்




2007 ஆம் ஆண்டு



2008 ஆம் ஆண்டு



2009 ஆம் ஆண்டு



2010 ஆம் ஆண்டு

# நிர்வாக உறுப்பினர்கள்



2011 ஆம் ஆண்டு



2012 ஆம் ஆண்டு



2013 ஆம் ஆண்டு



2014 ஆம் ஆண்டு

# நிர்வாக உறுப்பினர்கள்




2015 ஆம் ஆண்டு




2016 ஆம் ஆண்டு






2017 ஆம் ஆண்டு பொதுக்கூட்ட நிகழ்வின் போது

# 2012
# நிகழ்வுகளின்
# போது









# 20வது ஆண்டு நிறைவு விழாவில் கௌரவிக்கப்பட்டவர்கள்



திருமிகு.த.நாகேஸ்வரன்
(தென்மராட்சி இலக்கிய அணித்தலைவர்)



டாக்டர்.சு.சி.அருளானந்தம்
(சர்வதேச லயன்ஸ் பிரதி மாவட்ட செயலாளர்)



திருமிகு.க.சண்முகலிங்கம்
(மக்கள் வங்கிமுகாமையாளர், சாவகச்சேரி)



திருமிகு.ப.நடராசா
(தவிசாளர், மத்தியஸ்த சபை சாவகச்சேரி)



டாக்டர்.க.அம்பிகைபாகன்
(ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி)

# உ0வது ஆண்டு மலர் நிறைவின் போது









# 20.05.2015 இல் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையால் கௌரவிக்கப்பட்ட போது










மலர் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்

# சண்முகம் அன் சன்ஸ்

கண்டி வீதி, சாவகச்சேரி.



சகல விதமான
பலசரக்குப்
பொருட்களையும்
இங்கே பெற்றுக்
கொள்ளலாம்.



மலர் சிறப்புடன் வெளிவர
வாழ்த்துகின்றோம்

# சிற்றி சலூன்



டச் வீதி, சாவகச்சேரி.

Best wishes for Prosperity from.....

# Theva English Academy

*Tutors in English & Sinhala From the basic level*

**Mrs. U.Shanmuganathan. (J.P)**



23, Dutch Road,
Chavakachcheri.

வெள்ளிவிழா மலர் சிறப்புற
வாழ்த்துகின்றோம் ...

Modern New Medi Care Hospital

யாழில் தென்மராட்சி மண்ணின் உதயம்

# மொடேன் நியூ மெடிக் கெயார் வைத்தியசாலை





எம்மிடமிருந்து மக்களுக்காக...
24 மணிநேர வைத்திய சேவைகள்
குறைந்த செலவில் நிறைந்த சேவை
வைத்திய ஆலோசனைகள்
மருத்துவ விடுதி, முதியோர் பராமரிப்பு வசதிகள்
சிறு சத்திரசிகிச்சை வசதி
ECG, Scan, X-ray, Laboratary Service



**Modern New Medicare Hospital**
No. 63, Kandy Road, Chavakachcheri.
T.P - 0212270909, 0212270395, 0214927129

வெள்ளிவிழா மலர் சிறப்புற
வாழ்த்துகின்றோம் ...

# ஸ்ரீ ஐங்கரன் மணி மண்டபம்



ஸ்ரீ ஐங்கரன் திருமண மண்டபம்
குளிரூட்டப்பட்ட AC வசதிகள்
தரமான உணவு வகைகளுடன்
மங்கள நிகழ்வுகளுக்குச் சிறந்த இடம்

டச் வீதி,
சாவகச்சேரி.

தொடர்புகளுக்கு
0212270241

மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்...

# மணியம் ஸ்ரோர்ஸ்
# MANAYAM STORES



தமிழ், ஆங்கில, சிங்கள
நாளிதழ்களை
இங்கே பெற்றுக்
கொள்ளலாம்.




Kandy Road,
Chavakachcheri.

மனதார வாழ்த்துகின்றோம்...

J/ 300

# சாவ
# நகர்
# கப்புறுக்க
# சங்கம்

(தென்னை
அபிவிருத்திச் சங்கம்)

டச் வீதி,
சாவகச்சேரி.



வெள்ளிவிழா மலர் மலர வாழ்த்துகின்றோம்...

NEW

# V.M.K



# JEWELLERY



No. 80/30, Kasthuriar Road,
Jaffna.
021 2222515, 021 7201117, 0777849369

மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்

# சர்மாஸ்
# SARMAS







கச்சாய் வீதி, சாவகச்சேரி.

திருவாசி, சிலை, தீபவகைகள், குடை, மணி,
ஆலயப் பொருட்கள், அலுமினியம், சில்வர்,
பிளாஸ்ரிக் பாத்திரங்கள், கலசம், செம்பு,
குத்துவிளக்கு, பூசைப் பொருட்கள்,
அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.





கொடிமரம், கலசம் என்பன
செய்து கொடுக்கப்படும்.

*Kachchai Road, Chavakachcheri.*
*0786172802*

மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

டச்சு வீதி, சாவகச்சேரி. 0212270086, 0212313572

## எமது நிறுவனத்தின் நலன்புரித் திட்டங்கள்

அங்கத்தவர் நலத்திட்டம்
கிராமிய வங்கிச் சேவை
மகளிர் சேவை
காரியாலயச் சேவை


அங்கத்தவர் பணியாளர்களின் பிள்ளைகளில்
5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்தவர்களுக்கான ஊக்குவிப்பு வழங்குதல்.

அங்கத்தவர் பணியாளர்களுக்கான பயிற்சிநெறிகள்
மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கல்.

சங்கத்தின் அனுசரணையின் கீழ் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு
மாதப்படி 2000 வழங்கல்.


முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சீருடை வழங்கல்.

உழவியந்திர வாடகைச் சேவை
சுவையுணவு விற்பனை



மனமார்ந்த வாழ்த்துக்கள்...

# உதயன்





விவசாய உள்ளீடு, கால்நடை மருந்துகள்,
தீவனங்கள் விற்பனை நிலையம்



டச் வீதி,
சாவகச்சேரி.

மனமார்ந்த வாழ்த்துக்கள்...

# சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

எமது சங்கத்தின் பன்முகப்பட்ட சேவைகளாக...

நுகர்ச்சிக் சேவை

கிராமிய வங்கிச் சேவை

எரிபொருள் நிலை சேவை



அங்கத்தவர் கடன் சேவை



கண்டி வீதி,
சாவகச்சேரி

தொலைபேசி இல
021 3213282

மலர் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்

# J/ 300 சாவ நகர் பெண்கள் விவகார அமைப்பின் நிர்வாகக் குழு

டச் வீதி, சாவகச்சேரி.



வாழ்த்துகின்றோம்

# தென்னகத் தாரகை விளையாட்டுக் கழகம்

டச் வீதி, சாவகச்சேரி.



வாழ்த்துகின்றோம்

# அகிலாண்டம் சனசமூக நிலையம்

டச் வீதி, சாவகச்சேரி.



விழா மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்

# ARUL MOTORS

## *Bajaj Motor Bike Sales Dealer*



Mr.P.Arul Pragasam
0773222700

No. 230,
Kandy Road,
Chavakachcheri.

வெள்ளிவிழாச் சிறக்க வாழ்த்துகின்றோம்

# மானா கணினிப்பதிப்பு
# & போட்டோ பிரதி

## MANA COMPUTER PRITING
## & PHOTOCOPY


இல 39, டச் வீதி,
சாவகச்சேரி.

தொடர்புகளுக்கு
077 7033 433

ஆங்கிலத்திலும் தமிழிலும் கணினிப்பதிப்புச்
செய்திடவும் போட்டோ பிரதி எடுக்கவும்
நாட வேண்டிய ஓரே இடம்




மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்...
அம்பிகா மருந்துச்சாலை
AMBIKA DISPENSARY
Kandy Road,
Chavakachcheri.
0779133757
மலிவான விலையில்
தரமான மருந்து
கிடைக்குமிடம்
வாழ்த்துகின்றோம்...
V.M.K
JEWELLERY
Kandy Road,
Chavakachcheri.
0779133757



மனதார வாழ்த்துகின்றோம்....
S.M. SERVICE &
MECHANIC
TVS
இன் இலவச சேவை
சகலவிதமான இருசக்கர உந்துருளிகள்
மிகச் சிறந்த முறையில் சுத்திகரித்துக்
கொடுக்கப்படும்
37A, Dutch Road,
Chavakachcheri.
0214546494, 0778994623
வாழ்த்துக்கள்...
Seetha
JEWELLERY
New Market,
Chavakachcheri.
0212270220

வெள்ளிவிழாச் சிறக்க வாழ்த்துகின்றோம்

# கலாயன் மெடிக்கல் சென்ரர்
# KALAYAN MEDICAL CENTER

பார்வையிடும் நேரம்
தினமும் மாலை 4.30 மணி தொடக்கம்
7.00 மணி வரை





A9 வீதி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

வெள்ளிவிழாச் சிறக்க வாழ்த்துகின்றோம்



# விமலா
# இரும்பகம்

தொடர்புகளுக்கு
077 5562 569
077 0395 725







A9 வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்

# வேல் அழகன் பிறிண்டேர்ஸ்



T. சேட் (தைத்தல், பிறிண்டிங், எம்றோடிங்)
Jesy (தைத்தல், பிறிண்டிங், எம்றோடிங்)
பாடசாலை Tie (ரை)
மெடல், Batch, Award
சில்வர், கோல்ட், பிளாஸ்றிக்)
வியாபார பெயர் பலகை
ஸ்கிறீன் பிறிண்ட்





பழைய பாடசாலை வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தொடர்புகளுக்கு
021 2057889
077 9430323

மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்


# சக்தி - வேல்அழகன் மரத்தொழிற்சாலை

## SAKTHI - VEL ALAKAN TIMBER DEPOT

கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி.
0779816425



றோதை வாள் அரிவு, பாட்டு வாள் அரிவு
தங்களுக்குத் தேவையான அனைத்து விதமான
தளபாடங்களும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.





"KALAA POOSHANAM"
K.S. SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

சக்தி பதிப்பகம், மீசாலை
0773160464